ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

(மூலமும், உரையும் - தமிழில்)
(பொருள் உணர்ந்து பாராயணம் செய்ய ஏற்ற நூல்)





ஆசிரியரின் தாயார் ஸ்ரீமதி கமலம்

குருமாதா ஸ்ரீ ப்ரகாஸாம்பா, ஆசிரியர்

உ

ஸ்ரீ மஹா கணபதி துணை

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

(மூலமும், உரையும் - தமிழில்)

(பொருள் உணர்ந்து பாராயணம் செய்ய ஏற்ற நூல்)

உரை ஆசிரியர்

அபிராமி தாஸன்

மீனாட்சி சுந்தரம் மோகன்

முதற் பதிப்பு : நவம்பர் 2020

© பதிப்புரிமை பெற்றது

ரூபாய். 100/-

ப்ரதிகள் கிடைக்குமிடம்

ஸ்ரீமதி ரேணுகா மோகன்

18, 11வது தெரு, நந்தனம் விரிவு,

சென்னை - 600 035.

போன் : 044 - 2435 0162

செல் : 89399 49749

ஒளி அச்சு

ஸ்ரீ அபிராமி மைந்தன்

அச்சிட்டோர் :

ஜெய் கணேஷ் ஆப்செட் பிரிண்டர்ஸ்

19, வெங்கடசாமி லேன், சாந்தோம்,

சென்னை - 600 004. செல் : 98401 11457

முன்னுரை

ப்ரும்ஹ விதாப் நோதி பரம் -

குருநாதாளின் பரம க்ருபையினால் நம் மண்டலியைச் சேர்ந்த ஸ்ரீ அபிராமிதாசர் மோஹன் அண்ணா அவர்கள் எல்லோர்க்கும் புரியும் வண்ணம் சுருக்கமாக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமங்களுக்கு விரிவுரை எழுதியுள்ளது மிக ஆனந்தமாக உள்ளது.

இவருடைய தாயார் கமலம் அவர்கள் நம் பரமகுருவான ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிதானந்த நாதரின் நேர் சிஷ்யை. அவர் உபாசனையின் தார்ட்யம் எத்தகையது என்பது அவருடைய அந்திம தினம் வரை ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தை விடாமல் அனுசந்தானம் செய்து வந்ததே சான்று.

எங்கள் குருநாதருக்கு மிக ஆப்தராக இருக்கும் ஸ்ரீ அபிராமிதாசர் மோஹன் அவர்களை இதை எழுதத் தூண்டி ப்ரேரனை செய்தது பலருக்கும் பயன் தரும் என்று கருதி இதை எழுத முயல்கிறேன்.

எந்த ஒரு கிரந்தமோ, புஸ்தகமோ வெளியிட்டாலும் அனுபந்த சதுஷ்டயம் என்று சொல்லப்படும் அதிகாரி, விஷயம், சம்பந்தம் மற்றும் ப்ரயோசனம் குறிப்பிட வேண்டும். அந்த ரீதியில் இந்த நூல் அதிகாரி அம்பாளின் கருணைக்குப் பாத்திரமானவர்களே. ப்ரஹ்மாண்ட புராணத்தின் முக்கிய பாகமான லலிதோபாக்யானத்தில் உள்ள முக்ய பாகம் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்.

எத்தனையோ சீவர்கள் ஜனன மரண சூழலில் அகப்பட்டு இருப்பினும், ஒரு சிலருக்கே அம்பாளின் நாமங்களை ச்ரவணம் செய்யவோ, உச்சரிக்கவோ பாக்யம் கிடைக்கிறது. எத்தனையோ ஜன்மாவில் செய்த புண்யங்களினால் இந்த பாக்யம் கிடைக்கும். பகவானும் கீதையில் (7.19) ‘‘பஹூநாம் ஜந்மநாம் அந்தே ஞானவான்மாம் ப்ரபத்யதே’’, என்று சொல்லுகிறார். அப்படி எத்தனையோ ஜன்மாவில் செய்த நற்பலன்களின் விளைவே இந்த ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தை அறிய அதிகாரி.

இதில் உள்ள விஷயம், வாக்தேவதைகள் அம்பாளைப் பற்றி விவரிக்கும் நாமங்கள் ப்ரும்மத்தைத் தவிர இரண்டாவது தத்துவம் கிடையாது என்னும் சித்தாந்தம், ப்ரும்ஹவாதிகள், உபநிடதங்களும் எல்லாம் இந்த சித்தாந்தத்தை வலியுறுத்துகிறது. அதை சீவர்களுக்கு பக்தி மூலமாக அனுபவத்திற்கு ஏதுவாவது நாம சிந்தாந்தமே. இப்படி அம்பாளின் நாமாக்களை குரு மூலமாக பொருள் தெரிந்து கொண்டு, சிறந்த பாவத்தோடு அனுசந்தானம் செய்வதே முக்கிய விஷயம். அத்தகைய அதிகாரிக்கு இவ்விஷயமானது என்ன சம்பந்தம் என்றால், பஞ்சவித ஐக்யானு சந்தானம் (ஐந்து வகை) என்பதே.

குரு, தேவதை, மந்த்ரம், யந்த்ரம், நான் என்னும் ஆத்மா - இவைகளில் பேதம் இல்லை. இவை எல்லாம் ஒரே தத்வம் என்பதே இதன் சம்பந்தம். இதை கும்ப சம்பவரான அகத்தியருக்கு ஹயக்ரீவர் உபதேசிக்கும் வண்ணம் புராணம் அமைந்துள்ளது.

நம் சனாதன தர்மத்தில் சொல்லப்பட்ட தர்மங்கள் எல்லாமே அல்ப ப்ரயாசை. ஆனால் மகத்தான ப்ரயோஜனம். செய்யத் தூண்டும் தர்மமோ மிக எளிதாக இருக்க வேண்டும். ஆனால் - அதன் பலன் மிகப் பெரிதாக இருக்கும்.இதன் ரீதியில் அம்பாளின் நாமாக்களை குருமுகமாக அறிந்து அதை ச்ரவண, மனன, நித்யாசனம் செய்து வருபவர்களுக்கு, அம்பாளின் சாக்ஷாத்காரம், சமாதி சித்தித்து, ஞானம் சித்தித்து கைவல்யம் என்னும் மோக்ஷமே ப்ரயோசனம்.

அம்பாளின் உபாசகர்கள் தினம் செய்ய வேண்டிய நித்ய கர்மாக்களில் முக்யம் இந்த ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம்.

இந்த புத்தகத்தில் கூறியுள்ள அர்த்தத்தையும், பாவத்தையும் சேர்த்து அனுஷ்டானம் செய்பவர்களுக்கு அம்பாளின் அருள் பரிபூரணமாக கிடைக்கும் என்பதில் ஐயம் இல்லை.

இப்படிப்பட்ட நிலை எல்லோருக்கும் சித்திக்க எங்கள் குருநாதரின் திருவடிகளில் ப்ரார்த்தித்து வேண்டுகிறேன்.

இதி சிவம்

T.K. **பாலாஜி**

உ

ஸ்ரீ மஹா கணபதி துணை

ஆசிரியர் உரை

குருவருள் இல்லையேல் திருவருள் இல்லை. ''ஸ்ரீகுரு: ஸர்வ காரண பூதா - சக்தி:'' (பாவனோபநிஷத்து).

ஸ்ரீகுருவே அனைத்திற்கும் காரணமாக விளங்கும் சக்தி.

ஸ்ரீ வித்யா பரம்பரா குருமண்டலத்திற்கு இந்த நூலை சமர்ப்பிக்கிறேன்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பர் பெரியோர். அடியேன் மாதா: கமலம். தேவி உபாஸகர். ஸ்ரீவித்யா உபாஸகர். குஹானந்த மண்டலியின் ஸ்தாபகர் ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிதானந்த நாதரின் நேர் சிஷ்யை. மிகவும் எளிமையாக வாழ்ந்தவர். உலக விஷயங்களில் சிறிதும் ஈடுபாடு இல்லாதவர். அவர் சித்தியடைந்த தினம் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் சொல்லிக் கொண்டே இருந்தார்.

அடியேன் பிதா : டாக்டர் இ.வெ. மீனாட்சிசுந்தரம். சத்யம், நேர்மை, வாய்மை தவறாது வாழ்ந்த கர்மயோகி. அவர் வேலை செய்த இடத்தில் அவரை ''ஹரிச்சந்திரன்'' என்று அழைப்பர்.

எனது தாயாரின் மறைவிற்குப் பிறகு எனது மூத்த சகோதரரின் மனைவி ஸ்ரீமதி சீதாலட்சுமி இராமன் மிகச் சிறந்த முறையில் பூஜைகளையும், பாராயணங்களையும் செய்து வருகிறார். இவரும் ஒரு ஸ்ரீவித்யா உபாஸகர். ஸ்ரீஸ்ரீஸ்ரீ ''அண்ணா'' சுப்ரமண்யரின் சிஷ்யை. இவர் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் எழுபது வருட காலமாக பாராயணம் செய்து கொண்டு வருகிறார். பலமுறை கோடி ஸஹஸ்ரநாம திருவிழா நடத்தியுள்ளார். எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் தாயாக நின்று தயை புரியும் தலைவி.

குரு: ஸ்ரீஸ்ரீஸ்ரீ குரு K.H. கிருஷ்ணன் ஸார் 50 (ஐம்பது) வருடங்களாக எங்கள் குடும்ப குருவாக நல்வழிகாட்டி வருகிறார். அவர் ஒரு நடமாடும் பல்கலைக் கழகம். அவர்தான் அடியேனைப்

புஸ்தகங்கள் எழுத ஊக்குவித்தவர். என்னை குஹானந்த மண்டலிக்கு அனுப்பி, அம்மண்டலியின் தலைவர் குருமாதா பிரகாஸாம்பா (2005) அவர்களை சந்திக்கும்படி செய்தார். இது என் வாழ்க்கையின் பெரிய திருப்பம் குருமாதா எனக்கு ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமத்தை முழுமையாகச் சொல்லிக் கொடுத்தார். இந்நூலின் மூலவித்தே அவர்தான் என்றால் அது மிகையாகாது. அவர் சித்தியடைந்த பின், மண்டலியை அவரது சிஷ்யர்கள் ஸ்ரீஸ்ரீஸ்ரீ T. K. பாலாஜி (K. பாலாஜி) சுப்ரமண்யம், ஸ்ரீமதி ஜெயஸ்ரீ பத்மனாபன் மூவரும் மிகுந்த பக்தியுடனும் சிரத்தையுடனும் நடத்தி வருவது நாம் பெற்ற பாக்யம்.

இந்நூலுக்கு முன்னுரை எழுதிய ஸ்ரீஸ்ரீஸ்ரீ T. K. பாலாஜி அவர்கள் எளிமைக்கும், இனிமைக்கும், தன்னடக்கத்திற்கும் இலக்கணமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் உன்னத புருஷர். எவ்வளவோ அலுவல்களுக்கு இடையிலும் இந்நூலை எழுத்து விடாது படித்து, உற்சாகத்துடன் முன்னுரை எழுதிக் கொடுத்ததை என் பெரும் பாக்யமாகக் கருதுகிறேன்.

அடியேனின் உற்றார், உறவினர், நண்பர்கள், இந்நூலை எழுத ஆரம்பித்தவுடனேயே தானாக முன்வந்து செய்த உதவிக்கு நன்றி கூற இயலாது. இந்நூலுக்கு ஒளி அச்சு வடிவமைப்பு செய்த திரு. பாலசுப்ரமணியன், குறித்த நேரத்தில் அச்சிட்டு வழங்கிய ஜெய்கணேஷ் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு. ரவி அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி. குற்றம் குறை இருப்பின் சான்றோர்கள் அடியேனை மன்னித்தருள வேண்டும். அக்குற்றங்களைச் சுட்டிக் காட்டினால் அடுத்த அச்சில் சரி செய்து விடுகிறேன். இந்நூல் ஆன்மீக வளர்ச்சிக்கும், அன்னை லலிதா மஹாதிருபுரசுந்தரியின் அருளைப் பெறுவதற்கும் ஒரு தூண்டுகோலாயின் அது அடியேன் பெற்ற பாக்யமாகும்.

வாழ்க ! ஸ்ரீ மாதா !

அபிராமிதாசன்

மீனாட்சி சுந்தரம் மோகன்

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்

த்யான ஸ்லோகம்: 1

ஸிந்தூராருண விக்ரஹாம் த்ரிநயனாம்
மாணிக்ய-மௌளிஸ்புரத்
தாரா நாயக சேகராம் ஸ்மிதமுகீம்-ஆபீன-
வக்ஷோருஹாம்।
பாணிப்யா-மளிபூர்ண-ரத்ன-சஷகம் ரக்தோத்பலம்
பிப்ரதீம்
ஸௌம்யாம் ரத்ன-கடஸ்த்த- ரக்தசரணாம் த்யாயேத்
பராமம்பிகாம் ॥

ஸிந்தூரம் போல் சிவந்த உடலும், முக்கண்ணும், சந்திரன் பிரகாசிக்கும் மாணிக்க கிரீடமும், சிரித்த முகமும், பெருத்த மார்பும், மது நிறைந்த இரத்தினக் கோப்பையும், செங்குவளைப்பூவும் ஏந்திய கைகளும், இரத்தின கலசத்தில் பொருந்திய திருவடிகளும் உடைய அழகுத் தெய்வமாகப் பரதேவதையை தியானம் செய்ய வேண்டும்.

அருவமான பரம்பொருளை மனத்தில் இருத்தி, ஸதா நினைத்து வழிபடுவதற்கு வசதியாக ஒரு உருவ விசேஷத்தைப் பாவித்துக் கொள்ளுதல்.

த்யான ஸ்லோகம்: 2

அருணாம் கருணாதரங்கிதாக்ஷீம்
த்ருத-பாசாங்குச- புஷ்பபாண-சாபாம் ।
அணிமாதிபி-ராவ்ருதாம் மயூகை-
ரஹமித்யேவ விபாவயே பவானீம் ॥ 2 ॥

உதயகால சூரியனைப்போல் சிவந்த உடலும் கருணை அலைகள் பாயும் கடல் போன்ற கண்களும், பாசமும், அங்குசமும், புஷ்ப பாணமும், கரும்பு வில்லும் ஏந்திய கைகளும் உடையவளாய்,

அணிமாதி சக்திக் குழாம் சூழ விளங்கும் ''பவானியை'' அஹம் எனும் தத்துவமாக (பராஹந்தை வடினளாக) பாவிக்கிறேன். - *தத்தாத்ரேயர்*

த்யான ஸ்லோகம்: 3

த்யாயேத் பத்மாஸனஸ்தாம் விகஸித
வதனாம் பத்ம பத்ராயதாக்ஷீம், ஹேமாபாம்
பீதவஸ்த்ராம்
கரகலித-லஸத்ஹேம-பத்மாம் வராங்கீம் ।
ஸர்வாலங்கார-யுக்தாம் ஸததந-மபயதாம் -
பக்த-நம்ராம் பவானீம், ஸ்ரீவித்யாம் சாந்த-மூர்த்திம்
ஸகலஸுரநுதாம் ஸர்வஸம்பத்-ப்ரதாத்ரீம் ।। 3 ।।

தாமரையாகிய ஆஸனத்தில் வீற்றிருப்பவளும் மலர்ந்த முகத்தோடு விளங்குபவளும், தாமரை இதழ் போன்று நீண்ட கண்களையுடையவளும், தங்க நிறத்தவளும், மஞ்சள் பட்டு உடுத்தியிருப்பவளும், தங்கத் தாமரையைக் கையில் ஏந்தியவளும், அழகிய வடிவானவளும், எல்லா வகையான ஆபரணங்களோடு விளங்குபவளும், எப்போதும் பயமின்மையை அருள்பவளும், பக்தர்களுடைய குறைகளைக் கேட்க சிரத்தைத் தாழ்த்தி அருள்பவளும், பவனின் பத்னியானவளும், ஸ்ரீவித்யா மந்த்ர வடிவானவளும், சாந்தமே வடிவானவளும், தேவர்களால் வணங்கப்படுவளும், செல்வங்களை அளிக்கும் தேவியை த்யானிக்கிறேன்.

த்யான ஸ்லோகம்: 4

ஸகுங்கும-விலேபனா-மளிகசும்பி - கஸ்தூரிகாம்
ஸமந்த-ஹஸிதேக்ஷணாம் ஸசரசாப பாசாங்குசாம் ।
அசேஷஜனமோஹிநீ-மருண-மால்ய-பூஷாம்பராம்
ஜபாகுஸுமபாஸுராம் ஜபவிதௌ ஸ்மரே-தம்பிகாம் ।।

குங்குமப் பூவினை அரைத்த விழுதைப் பூசியிருப்பவளும், கஸ்தூரி பொட்டினால் அலங்கரிக்கப்பட்ட நெற்றியை உடையவளும், புன்னகைக்கும் கண்களையுடைவளும், அம்பு, வில், பாசம், அங்குசம் தரித்தவளும், எல்லோரையும் மிச்சம் விடாமல் தன்பால் ஈர்ப்பவளும், சிவப்பு நிற மாலை அணிகள் அணிந்தவளும், செம்பருத்திப்பூப் போன்ற ஒளியோடு விளங்குபவளுமான அம்பிகையை ஜபம் செய்யும் காலத்தில் நெஞ்சில் நினைக்கிறேன்.

- (ஸ்ரீமத் சங்கர பகவத் பாதர் - திரிபுரசுந்தரி அஷ்டகம்)

ஸ்தோத்ரம்

ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம்

ஓம் ।।

ஸ்ரீ மாதா ஸ்ரீமஹாராஜ்ஞீ ஸ்ரீமத்ஸிம்ஹாஸனேச்வரீ ।
சிதக்னி-குண்ட-ஸம்பூதா தேவகார்ய-ஸமுத்யதா ।। 1।।

1. ஸ்ரீமாதா: சிறப்பு மிகுந்த அன்னை. கஷ்டம் வரும்போது நம்மையும் அறியாமல் நம் வாயிலிருந்து முதலில் வரும் சொல் ‘‘அம்மா’’. திருவே வடிவான தாய்க்கு கோடி நமஸ்காரம்.

இவ்வுலகில் நம்மை பெற்ற தாயை, நாம் தெய்வமாக வணங்கும்போது, அகிலாண்டத்தையும் ஈன்ற ‘‘அம்பாளை’’ தாயாக வணங்குவது எளிதுதானே! (காஞ்சி பராமாச்சார்யார்)

ஸ்ரீ = லக்ஷ்மீ, சரஸ்வதீ.

அம்பாளின் வலது பக்கம் சரஸ்வதீ, இடது பக்கம் லக்ஷ்மீ.

ஸ்ரீ என்றால் வேதம். அம்பாள் = வேத மாதா

ஸ்ரீ என்றால் செல்வம். அனைத்து செல்வத்திற்கும் அதிபதி.

ஸ்ரீ = விஷம். தன் பதி சிவன் சாப்பிட்ட விஷத்தை அம்ருதம் ஆக்கியவள். மாதா = ஈன்றவள் - ஸ்ருஷ்டியைக் குறிப்பது.

‘‘யதோ வா இமானி பூதானி ஜாயந்தே’’ (வேதம்)

2. ஸ்ரீ மஹாராக்ஞீ = சிறப்பு மிக்க பேரரசி. எல்லா உலகத்தையும் காப்பவள். ஒப்புயர்வற்ற லோகரக்ஷகி.

‘‘யேன ஜாதானீ ஜீவந்தி’’ (வேதம்)

3. ஸ்ரீமத் ஸிம்ஹாசனேச்வரீ = சிறந்த சிம்மாசனத்தில் அமர்ந்து அகிலத்தை அடக்கி ஆள்பவள். தேவிக்கு சிங்கமே - ஆஸனம், வாகனம். ஸம்ஹாரம் பண்ணும் சக்தியவள்.

‘‘யத் ப்ரயந்த பஸம் விசந்தி’’ - ச்ருதி

இந்த முதல் மூன்று நாமாக்களும் - ஆக்கல், அளித்தல், அழித்தல் - என்ற முத்தொழிலையும் உணர்த்துகிறது.

4. சிதக்னி குண்ட ஸம்பூதா - ஞானமாகிற யாக குண்டத்திலிருந்து தோன்றியவள். (எனவே தான் அம்பாளின் வர்ணனையும் ‘‘கேசாதி - பாதமாய்’’ உள்ளது.)

5. தேவகார்ய ஸமுத்யதா - தேவர்களின் பணிக்காக முனைந்தவள்.

உத்யத்பானு-ஸஹஸ்ராபா சதுர்பாஹு-ஸமன்விதா ।
ராகஸ்வரூப-பாசாட்யா க்ரோதாகாராங்குசோஜ்ஜ்வலா ॥2॥

6. உத்யத்பானு ஸஹஸ்ராபா - (ஆயிரக்கணக்கான) உதிக்கும் ஸூர்யனுக்கு ஒப்பான ஒளியுள்ளவள்.

7. சதுர்பாஹு ஸமன்விதா - நான்கு கைகளுடன் கூடியவள்.

8. ராகஸ்வரூப பாசாட்யா - ஆசைவடிவான பாசம் எனும் ஆயுதத்துடன் (இடது பின் கையில்) உடையவள் (இச்சா சக்தி).

9. க்ரோதா காராங்குசோஜ்வலா - (தீமையைப் பொசுக்கும்) கோபமாகிய அங்குசம் - வலது பின் கையில் தரித்துப் ப்ரகாசிப்பவள் (ஞான சக்தி).

மனோரூபேக்ஷு-கோதண்டா பஞ்ச-தன்மாத்ர-ஸாயகா ।
நிஜாருண-ப்ரபாபூர-மஜ்ஜத் ப்ரஹ்மாண்ட-மண்டலா ॥ 3॥

10. மனோரூபேக்ஷு கோதண்டா: மனமாகிய கரும்பு வில்லை இடது முன் கையில் கொண்டவள். அதிஷ்டான தேவதை - மந்த்ரிணீ.

11. பஞ்சதன்மாத்ரஸாயகா: ஐந்து தன் மாத்திரைகளைப் பாணங்களாக (வலது மேல் கையில்) உடையவள். தாமரை, செங்கழுநீர், செவ்வல்லி, செவ்வாம்பல், மாம்பூ ஆகிய புஷ்பங்களே பாணங்களாகும்.

12. தன்னுடைய சிகப்பான காந்தியின் பிரவாஹத்தினால் ப்ரஹ்மாண்டங்களுடைய மண்டலங்களை மூழ்கச் செய்தவள்.

சம்பகாசோக-புன்னாக-ஸௌகந்திக-லஸத்-கசா ।
குருவிந்தமணி-ச்ரேணீ-கனத்-கோடீர-மண்டிதா ॥ 4 ॥

13. சம்பகம், அசோகம், புன்னை, செங்கழுநீர் ஆகிய மலர்களால் அழகுற்று விளங்கும் கூந்தலையுடையவள். கூந்தலழகுடன் புஷ்பங்களின் அழகும் சேர்ந்து சோபிக்கின்றன.

14. குருவிந்தமணி என்பது பத்மராகம் எனப்படும் ஓர் சிவந்தகல். தேவியின் கிரீடத்தில் இந்த கற்கள் வரிசையாகப் பதிக்கப்பெற்றுள்ளது.

அஷ்டமீசந்த்ர-விப்ராஜ-தளிகஸ்தல-சோபிதா ।
முகசந்த்ர-களங்காப-ம்ருகநாபி விசேஷகா ॥ 5 ॥

15. அஷ்டமியில் தோன்றும் சந்திரனைப் போல் பிரகாசிக்கும் நெற்றியுடன் சோபிக்கிறவள்.

16. சந்த்ர மண்டலத்தில் களங்கம் காணப்படுவது போல் தேவியின் முகமாகிற சந்திர மண்டலத்தில் நெற்றியின் கஸ்தூரி திலகம் களங்கம் போல் அழகூட்டுகிறது.

வதனஸ்மர-மாங்கல்ய-க்ருஹதோரண-சில்லிகா ।
வக்த்ர-லக்ஷ்மீ-பரீவாஹ-சலன்-மீனாப-லோசனா ॥ 6 ॥

17. முகமாகிற மன்மதனது வீட்டிற்கு முன் தோரணம் போன்று அமைந்த புருவத்துடன் கூடியவள்.

18. முகத்தின் அழகாகிய வெள்ளத்தில் ஓடும் மீன்களையொத்த கண்களை உடையவள்.

மீன்கள் தங்கள் குஞ்சுகளை பார்வையாலேயே வளர்ப்பதாக ஒரு நம்பிக்கை. அதுபோலவே, தேவியின் கண்கள் பக்தர்களைக் கனிவுடன் பார்ப்பதாலேயே அவர்களை உய்விக்கின்றன. இதனால் தேவிக்கு ''மீனாக்ஷி'' (மீனாபலோசனா) என்று பெயர்.

நவசம்பக-புஷ்பாப-நாஸாதண்ட-விராஜிதா ।
தாராகாந்தி-திரஸ்காரி நாஸாபரண-பாஸுரா ॥7॥

19. அன்றலர்ந்த சம்பகப் பூவையொத்த ''மூக்கினால்'' அதிக அழகுடன் விளங்குபவள்.

20. நட்சத்திரங்களின் ஒளியை வெல்லும் மூக்குத்தியினால் ஒளியுடன் விளங்குபவள். (தேவியின் மூக்குத்திகள் - மாணிக்கம், முத்தால் ஆனவை).

கதம்ப-மஞ்ஜரீ-க்லுப்த-கர்ணபூர-மனோஹரா ।
தாடங்க-யுகளீபூத-தபனோடுப-மண்டலா ॥ 8 ॥

21. கடம்ப மலர்க்கொத்தை காதுகளில் தரித்திருக்கும் மனோஹரமான ரூபத்தை உடையவள்.

22. ஸூர்யன், சந்திரன் இருவரையும் இரு காதுகளில் தோடுகளாய் அணிந்திருப்பவள். (அன்னைக்கு இவர்கள் இருவரும் கண்களாகவும், ஸ்தனங்களாகவும் அமையும் பேறு பெற்றவர்கள்.)

பத்மராக-சிலாதர்ச-பரிபாவி- கபோலபூ: ।
நவ-வித்ரும-பிம்பஸ்ரீ-ந்யக்காரி ரதனச்சதா ॥ 9 ॥

23. பத்மராகமென்னும் சிகப்பு கல்லினால் செய்யப்பட்ட கண்ணாடியை விட அதிசயமான கன்னங்களை உடையவள்.

24. புதியதான பவழம், கோவைப்பழம் இவற்றின் காந்தியை வெல்லும் அழகான உதடுகளை உடையவள்.

சுத்த-வித்யாங்குராகார-த்விஜபங்க்த்தி-த்வயோஜ்ஜ்வலா।
கர்ப்பூர-வீடிகாமோத-ஸமாகர்ஷி-திகந்தரா ॥ 10 ॥

25. சுத்த வித்யையின் முளைகள் போன்ற இரு பல்வரிசைகளால் ஒளிமிக்க தோற்றமுள்ளவள். (த்விஜ - இருபிறப்பு) பற்கள் விழுந்து முளைப்பதால் இருபிறப்பு.

26. கர்ப்பூர வீடிகா என்ற தாம்பூலத்தின் நறுமணத்தால் தன்வசம் இழுக்கப்பட்ட திக்குகளை உடையவள்.

(கர்ப்பூர வீடிகா - வாசனை திரவியங்களால் செய்யப்பட்ட பீடா)

நிஜ-ஸல்லாப-மாதுர்ய-விநிர்ப்பர்த்ஸித-கச்சபீ ।
மந்த-ஸ்மித-ப்ரபாபூர-மஜ்ஜத்- காமேச-மானஸா ॥11॥

27. தன்னுடைய பேச்சின் இனிமையால் கச்சபீ எனப்படும் சரஸ்வதியின் வீணையின் நாதத்தை வென்றவள்.

28. தனது புன்சிரிப்பின் ப்ரவாஹத்தில் காமேஸ்வரருடைய மனதை மூழ்கச் செய்தவள்.

அநாகலித-ஸாத்ருச்ய-சிபுகஸ்ரீ- விராஜிதா ।
காமேச-பத்த-மாங்கல்ய-ஸூத்ர- சோபித- கந்தரா ॥ 12॥

29. யாராலும் ஒப்பிட்டுச் சொல்லமுடியாத முகவாய் கட்டின் அழகினால் ப்ரகாசிப்பவள்.

30. காமேஸ்வரர் கட்டிய மங்கல நாணுடன் ப்ரகாசிக்கும் கழுத்தை உடையவள்.

கனகாங்கத-கேயூர-கமனீய-புஜான்விதா ।
ரத்னக்ரைவேய-சிந்தாக-லோல-முக்தா-பலான்விதா॥13 ॥

31. பொன்னாலாகிய தோள்வளைகளை அணிந்தவள்.

32. அசைகின்ற முத்துக்களுடன் கூடிய ரத்தினப் பதக்கம் பொருந்திய அட்டிகை அணிந்தவள்.

காமேச்வர-ப்ரேமரத்ன- மணி-ப்ரதிபணஸ்தனீ ।
நாப்யாலவால-ரோமாலி-லதா-பல-குசத்வயீ ॥ 14 ॥

33. இரத்தின கலசம் போன்ற தனது ஸ்தனங்களையே கொடுத்து காமேசருடைய அன்பை விலைக்கு வாங்கியவள்.

34. தொப்புளாகிற பாத்தியிலிருந்து கிளம்பிய உரோம வரிசையான கொடியில் பழங்கள் போல் தோன்றுகிற இரு ஸ்தனங்கள் உடையவள்.

லக்ஷ்யரோம- லதா-தாரதா- ஸமுன்னேய-மத்யமா ।
ஸ்தனபார-தலன்-மத்ய- பட்டபந்த-வலித்ரயா ॥ 15 ॥

35. ரோம வரிசையாகிற கொடிக்கு ஆதாரமாக இருப்பதை (நேரிடையாக காண முடியாததினால்) ஊஹிக்க வேண்டி இருக்கிறதான இடையை உடையவள். (உத்தம ஜாதி ஸ்திரீகளுக்கு இடை மிகவும் சிறியதாய் இருக்கும்)

36. ஸ்தனங்களின் சுமையினால் முறிந்து போய் விடுமோ என்று தோன்றக்கூடிய இடுப்புக்கு பட்டை கட்டியது போன்று அமைந்த மூன்று மடிப்புகள் உடையவள்.

அருணாருண-கௌஸும்ப-வஸ்த்ர-பாஸ்வத்- கடீதடீ ।
ரத்ன-கிங்கிணிகாரம்ய- ரசநா-தாம-பூஷிதா ॥ 16 ॥

37. மிகவும் சிவந்த பட்டாடையால் பிரகாசிக்கும் இடையை உள்ளவள்.

38. ரத்னங்களாலான சலங்கைகளால், அழகான அரைஞாணை (மேகலா ஸூத்ரம்) அணிந்தவள்.

காமேச-ஜ்ஞாத-ஸௌபாக்ய-மார்தவோரு-த்வயான்விதா।
மாணிக்ய-முகுடாகார-ஜானுத்வய-விராஜிதா ।। 17 ।।

39. காமேசனால் மட்டும் அறியப்பெற்ற அழகும் மென்மையும் கொண்ட துடைகளையுடயவள்.

40. மாணிக்யமகுடம் போன்ற முழந்தாள் சில்லுகளை உடையவள்

இந்த்ரகோப-பரிக்ஷிப்த-ஸ்மரதூணாப- ஜங்கிகா ।
கூடகுல்பா கூர்மப்ருஷ்ட-ஜயிஷ்ணு-ப்ரபதான்விதா ।।18।।

41. மின்மினி பூச்சிகளால் மொய்க்கப்பட்ட மன்தனுடைய அம்பறாத் தூணிகளை ஒத்த கணுக்கால்களை உடையவள்.

42. கூடகுல்பா: உருண்டு அழகிய கணைக் கால்களையுடையவள்

43. கூர்மப்ருஷ்ட-ஜயிஷ்ணு-ப்ரபதான்விதா:ஆமையின் முதுகைவெல்லும் புறங்கால்களை உடையவள். (உத்தம பெண்களின் புறங்கால்கள் உயர்ந்து குவிந்து விளங்கும்)

நக-தீதிதி- ஸஞ்சன்ன-நமஜ்ஜன-தமோகுணா ।
பதத்வய-ப்ரபாஜால-பராக்ருத-ஸரோருஹா ।। 19 ।।

44. தன்னுடைய பாதநகங்களின் காந்தியினால் தன்னை வணங்குபவர்களின் அக்ஞான இருட்டைப் போக்குபவள் (தமஸ்).

45. தன் இருபாதங்களுடைய காந்தியினால் தாமரைப்பூவை வென்றவள். தாமரை அன்றே அலர்ந்து அன்றே வாடிவிடும். ஆனால், தேவியின் பாதகமலங்கள் நித்யமானவை.

ஸிஞ்ஜான-மணிமஞ்ஜீர- மண்டித-ஸ்ரீபதாம்புஜா ।
மராளீ-மந்தகமனா மஹாலாவண்ய-சேவதி: ।। 20 ।।

46. ஒலிக்கும் மணிகளையுடைய சிலம்புகளால் அலங்கரிக்கப்பட்ட திருவடித் தாமரைகளை உடையவள்.

47. மராளீ-மந்தகமனா: பெண் அன்னம்போல் மெதுவான நடையை உடையவள்.

48. மஹாலாவண்ய-சேவதி: அழகுக்கெல்லாம் ஒரு களஞ்சியம் / பெட்டகம்.

ஸர்வாருணாஅநவத்யாங்கீ ஸர்வாபரணபூஷிதா ।
சிவ-காமேச்வராங்கஸ்தா சிவா ஸ்வாதீனவல்லபா ।।21।।

49. ஸர்வாருணா: தன்னுடைய சரீரம், வஸ்த்ரம், ஆபரணம், புஷ்பம், காந்தி எல்லாமே சிவப்புதான்.

50. அநவத்யாங்கீ: குறை ஒன்றும் இல்லாத அங்க அமைப்பை உடையவள்.

51. ஸர்வாபரண-பூஷிதா: எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்றவள்.

52. சிவகாமேச்வராங்கஸ்தா: தன் பர்த்தாவான சிவகாமேச்வரனுடைய (இடதுபக்க) மடியில் வீற்றிருப்பவள்.

53. சிவா: சிவனது மனைவி, மங்களமே உருவானவள். சிவனோடு அபின்னமானவள்.

54. ஸ்வாதீனவல்லபா: தன்வயப்பட்ட பர்த்தாவையுடையவள்.

காமன்: அழகானவன்: சிவன்: மங்களகரமானவன். ஈசுவரன்: ஆள்பவன். எனவே ‘சிவகாமேச்வரன்‘ (பரம்பொருளின் இச்சா சக்தி)

ஸுமேரு-மத்யச்ருங்கஸ்தா ஸ்ரீமந்நகர-நாயிகா ।
சிந்தாமணி-க்ருஹாந்தஸ்தா பஞ்ச-ப்ரஹ்மாஸநஸ்திதா ।।22

55. ஸுமேரு-மத்ய-ச்ருங்கஸ்தா: மேரு மலையின் மூன்று சிகரங்களில் மும்மூர்த்திகள் வசிக்கின்றனர். இவற்றைவிட உயர்ந்த நடுவிலுள்ள நாலாவது சிகரத்தில் தேவி உறைகிறாள்.

56. ஸ்ரீமந் நகர - நாயிகா: ஸ்ரீநகரத்தின் நாயகி.

57. சிந்தாமணி க்ருஹாந்தஸ்தா: சிந்தாமணி க்ருஹத்தில் இருப்பவள்.

58. பஞ்ச-ப்ரஹ்மாஸன ஸ்திதா: ஐந்து ப்ரஹமங்களாலன ஆஸனத்தில் அமர்ந்திருப்பவள். ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் ஈசானன் நால்வரும் நான்கு கால்களாகவும், ஸதாசிவன் மேல் பலகையாகவும் உடைய கட்டிலில் அம்பாள் காமமேசுவரரோடு இருக்கிறாள்.

மஹாபத்மாடவீ-ஸம்ஸ்தா கதம்பவன-வாஸினீ ।
ஸுதாஸாகர-மத்யஸ்தா காமாக்ஷீ காமதாயினீ ॥ 23 ॥

59. மஹா பத்மாடவீ-ஸம்ஸ்தா-பெரிய தாமரைக் காட்டில் உறைவபள்.

60. கதம்ப வன வாஸினீ: கதம்ப மரக்காட்டில் வசிப்பவள்.

61. ஸுதா ஸாகர-மத்யஸ்தா: அமிருதக்கடலில் நடுவில் உள்ளவள்.

62. காமாக்ஷீ: அழகிய கண்களையுடையவள். (கா= ஸரஸ்வதி, மா=லக்ஷ்மீ. இருகண்கள்) காமனை தன் கண் பார்வையினால் உயிர்பெறச் செய்தவள்.

63. காமதாயினீ:விரும்பியதை வழங்குபவள். காம-காமேச்வரரை தன் பக்தர்களுக்கு தாயினீ-தருபவள். சீவன் சிவனாகுதல்.

தேவர்ஷி-கண-ஸங்காத-ஸ்தூயமாநாத்ம-வைபவா ।
பண்டாஸுர-வதோத்யுக்த சக்திஸேனா-ஸமன்விதா ॥24

64. தேவரிஷி கணங்கால் துதிக்கப்படும் ஆத்ம வைபவம் உடையவள். இந்த ஆத்மஸ்வரூபமே தேவியின் அபின்னமான வடிவம்.

'ஸதாநந்த பூர்ண: ஸ்வாத்மைவ பரதேவதா லலிதா' (பாவனோபநிஷத்-28)

எப்பொழுதும் ஆனந்த பரிபூர்ணமாயிருக்கின்ற தனது (ஆத்ம) ஸ்வரூபமே பரதேவதையாகும் லலிதா.

65.பண்டாசுரவதத்திற்கு ஆயத்தமாயிருக்கும் சக்தி

ஸம்பத்கரீ-ஸமாரூட-ஸிந்துர-வ்ரஜ-ஸேவிதா ।
அச்வாரூடாதிஷ்டிதாச்வ-கோடி-கோடிபி-ராவ்ருதா ॥25॥

66. ஸம்பத்கரீ தேவியின் ஆக்ஞைக்குட்பட்ட யானைப் படையினால் ஸேவிக்கப்பட்டவள்.

67. அச்வாரூடா தேவியின் தலைமையில் இயங்கும் கோடிக்கணக்கான குதிரைகளால் சூழப்பெற்றவள்.

சக்ரராஜ-ரதாரூட-ஸர்வாயுத-பரிஷ்க்ருதா ।
கேயசக்ர-ரதாரூட-மந்த்ரிணீ-பரிஸேவிதா ॥ 26 ॥

68. ஸ்ரீசக்ரமாகிய தேரில் ஏறி எல்லா ஆயுதங்களினால் புடைசூழ விளங்குபவள்.

69. கேயசக்ரம் எனும் தேரில் ஏறிய மந்த்ரிணி தேவியால் வழிபடப் பெற்றவள்.

கிரிசக்ர-ரதாரூட தண்டநாதா-புரஸ்க்ருதா ।
ஜ்வாலாமாலினிகாக்ஷிப்த-வஹ்நி-ப்ராகார-மத்யகா ॥27॥

70. கிரிசக்ரம் எனும் ரதத்தில் ஏறி அமர்ந்துள்ள தண்ட நாதையினால் வழி நடத்திச் செல்லப்படுபவள்.

71. ஜ்வாலாமாலினி தேவியால் சுற்றிலும் அமைக்கப் பெற்ற நெருப்புக்கோட்டையின் நடுவில் இருப்பவள்.

பண்டஸைந்ய-வதோத்யுக்த-சக்தி-விக்ரம-ஹர்ஷிதா ।
நித்யா-பராக்ரமாடோப-நிரீக்ஷண-ஸமுத்ஸுகா ।। 28 ।।

72. பண்டனுடைய சைன்யத்தை அழிப்பதில் ஈடுபட்ட சக்திகளின் வீரத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்தவள்.

73. எதிரிகளை ஆக்ரமித்து நித்யா தேவிகள் புரிந்த கோலாகலத்தைப் பார்ப்பதில் உற்சாகம் அடைந்தவள்.

பண்டபுத்ர-வதோத்யுக்த-பாலா-விக்ரம-நந்திதா ।
மந்த்ரிண்யம்பா-விரசித-விஷங்க-வத-தோஷிதா ।। 29।।

74. பண்டனுடைய புத்ரர்களை அழிப்பதில் முனைந்த ''பாலா'' தேவியின் வீரத்தினால் மகிழ்ச்சியடைந்தவள்

75. மந்த்ரிணீதேவி (ச்யாமளா) விஷங்கன் என்ற அசுரனை வதம் செய்ததைக் கண்டு மகிழ்ந்தவள்.

விசுக்ர-ப்ராணஹரண-வாராஹீ-வீர்ய-நந்திதா ।
காமேச்வர-முகாலோக-கல்பித-ஸ்ரீகணேச்வரா ।। 30 ।।

76. விசுக்ரன் என்ற அசுரனை அழித்த வாராஹீயினுடைய வீர்யத்தினால் மகிழ்ச்சியடைந்தவள்.

77. காமமேச்வரின் முகத்தைப் பார்த்ததினாலேயே ஸ்ரீகணேச்வரரை ஸ்ருஷ்டி செய்தவள்.

மஹாகணேச-நிர்ப்பின்ன-விக்னயந்த்ர-ப்ரஹர்ஷிதா ।
பண்டாஸுரேந்த்ர-நிர்முக்த சஸ்த்ர-ப்ரத்யஸ்த்ர-வர்ஷிணீ ।।31।।

78. மஹாகணபதியினால் விக்னயந்திரம் தூளாக்கப்பட்டதைக் கண்டு மிகவும் சந்தோஷமடைந்தவள்.

79. பண்டாஸுரனால் விடப்பட்ட அஸ்திர, சஸ்திரங்களை நாசம் பண்ணும் அஸ்த்ர சஸ்த்ரங்களைப் பொழிபவள். (சஸ்த்ரம் - சமீபம். அஸ்த்ரம் - தொலைவு)

கராங்குலி-நகோத்பன்ன-நாராயண-தசாக்ருதி: ।
மஹா-பாசுபதாஸ்த்ராக்னி-நிர்தக்தாஸுர-ஸைநிகா ॥32॥

80. இருகை விரல்களிலிருந்தும் தோன்றிய நாராயணின் பத்து உருவங்களோடு கூடியவள்.

81. மஹாபாசுபதம் என்ற அஸ்த்திரத்திலிருந்து உண்டான நெருப்பினால் அசுர சேனையை எரித்தவள்.

காமேச்வராஸ்த்ர-நிர்தக்த-ஸபண்டாஸுர-சூன்யகா ।
ப்ரஹ்மோபேந்த்ர-மஹேந்த்ராதி-தேவ-ஸம்ஸ்துத-வைபவா॥33॥

82. காமேச்வராஸ்த்திரத்தினால் பண்டாஸுரனையும் அவன் பட்டணமான சூன்யகமென்னும் நகரத்தையும் எரித்தவள்.

83. ப்ரஹ்மா, விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்களால் துதிக்கப்பட்ட பெருமையுள்ளவள்.

ஹர-நேத்ராக்னி-ஸந்தக்த-காம-ஸஞ்ஜீவநௌஷதி: ।
ஸ்ரீமத்-வாக்பவ-கூடைக- ஸ்வரூப-முக-பங்கஜா ॥34॥

84. ஹரனின் நெற்றிக்கண் தீயால் எரிக்கப்பட்ட மன்மதனைப் பிழைப்பூட்டிய ஸஞ்ஜீவினி மருந்து (ஜீவாது என்றும் பெயர்).

85. பஞ்சதசீயின் முதல் கூடமான வாக்பவகூடமெனும் ஐந்தெழுத்தே தன்னுடைய ரூபமாக இருக்கும் முக கமலத்தை

உடையவள். ஸ்ரீவித்யை 15 அக்ஷரங்கள் கொண்டது. மூன்று கூடமாய் உள்ளது வாக்பவம் எனப்படும் முதற் கூடத்தில் 5 அக்ஷரங்கள்.

வாக்பவ கூடம் ஞானத்தை அருள்பவதால் சிறப்பு மிக்கதாகிறது. எனவே ஸ்ரீமத் என்று குறிப்பிடப்பட்டது. தேவியாக குண்டத்திலிருந்து தோன்றிய போது முதலில் வெளியானது முகமண்டலம் தானே.

''மனம்' வெளியே செல்லப் பயன்படும் பொறிகள் பெரும்பாலானவை அமைந்த இடம் 'முகம்'. வாக்கை முக்கியமாகக் கொண்ட தேவியின் மந்திரரூபமான உருவில் இந்த ஐந்தெழுத்து கொண்ட முதல் கூடம் முகமாக அமைந்தது.

கண்டாத:-கடிபர்யந்த-மத்யகூட-ஸ்வரூபிணீ ।
சக்தி-கூடைகதாபன்ன-கட்யதோ-பாக-தாரிணீ ॥ 35 ॥

86. கழுத்திலிருந்து கீழ் இடுப்பு வரையில் உள்ள உடலின் பாகமாயமைந்த, 'மத்யகூடம்' என்னும் காமராஜ கூடத்தோடு விளங்குபவள். ஆறுஅக்ஷரம். (இச்சாசக்தி வடிவானவள்)

87. சக்தி கூடமாக இடுப்பின் கீழ்பகுதியில் உடையவள். நான்கு அக்ஷரம். க்ரியா சக்தி வடிவம்.

1. வாக்பவகூடம் - ஸகல வித்யா ப்ரதம் - ஞான சக்தி

2. காமராஜகூடம் - விரும்பியதை தருவது - இச்சா சக்தி

3. சக்தி கூடம் - ச்ருஷ்டி முதலிய சக்தியை தருவது-க்ரியா சக்தி

மூலமந்த்ராத்மிகா மூலகூடத்ரய-கலேபரா ।
குலாம்ருதைக-ரஸிகா குலஸங்கேத-பாலினீ ॥ 36 ॥

88. மூலமந்த்ராத்மிகா: மூலமந்திரத்தின் உட்பொருளே தானாகி நிற்பவள் (காரணம்).

89. மூலகூடத்ரய-கலேபரா: மூலமந்த்திரத்தின் மூன்று கூடங்களையே (ஸுக்ஷ்ம ரூபத்தில்) சரீரமாக உடையவள்.

காமகலையில் மேலுள்ள பிந்து, நடுவில் உள்ள இரு பிந்துக்கள், கீழுள்ள முக்கோணம் ஆக மூன்று கூறுகளாக உடலமைப்பு கொண்டவள்.

90. குலாம்ருதைக-ரஸிகா-குலாம்ருதத்தில் மட்டும் ஈடுபாடுள்ளவள்.

91.குல ஸங்கேத பாலீனி: குலத்தின் ஸங்கேதமான ரஹஸ்யங்களைக் காப்பவள். (சங்கேதம்-ரகசிய மொழி). இந்த சங்கேதமொழியை தானும், தன் சாதகன் மட்டுமே அறியும்படி அமைத்துக் கொண்டதினால்''குலஸங்கேத பாலினீ''.

குலாம்ருதம்' குண்டலினீ

மனித உடலின் நடுப்பாகத்தில் கீழ்ப்பகுதியில் உள்ள குதத்துவாரத்திலிருந்து தலையில் ப்ரம்மரந்திரம் வரை ஸுஷும்னா நாடி உள்ளது.

இதில் கீழ்ப்பகுதியில் 'குண்டலினீ' ஒரு ஸர்ப்ப வடிவில் மூன்றரை சுற்றுக்களாகத் தன் உடலைச் சுருட்டிக் கொண்டு, வளையங்களின் நடுவில் தன் தலையை கீழ்நோக்கி வைத்துக் கொண்டு உறங்குகிறது. இந்த குண்டலினீ சக்தியை யோகாப்யாசனத்தால் எழ வைத்தால் அது ஸுஷும்னா நாடியின் வழியாக ப்ரம்மரந்திற்குச் செல்லும்.

இந்த சக்தி சிரசிலுள்ள ஸஹஸ்ரார பத்மம் என்ற அகுல சக்ரத்தை முட்டும்போது அங்குள்ள சக்தித் தேக்கம் வெண்ணெய் போல் உருகி, அம்ருதமாகக் கசிந்து கீழே நழுவி உடல் முழுவதும் ஊடுருவிப் பாய்கிறது. இப்படி கசியும் அமிருதத்திற்கு 'குலாம்ருதம்' என்று பெயர்.

இந்த ரஸத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவள் குண்டலினீ.

குலாங்கனா குலாந்தஸ்தா கௌலினீ குலயோகினீ ।
அகுலா ஸமயாந்தஸ்தா ஸமயாசார-தத்பரா ॥ 37 ॥

92. குலாங்கனா:குலஸ்த்ரீயாய் இருப்பவள். எப்படி பதிவ்ரதயை?ன குலஸ்த்ரீ பிறர் கண்களில் படமாட்டார்களோ அதுபோல, அம்பாள் மாயை எனும் அவித்யையான திரையினால் தன்னை மறைத்துக் கொண்டிருப்பவள்.

93. குலாந்தஸ்தா: குலத்தின் உள்ளே உறைபவள்.

94. கொளலினீ: சிவனும் சக்தியும் சேர்ந்த வடிவம். குலம்=சக்தி, அகுலம்=சிவன்

95. குலயோகினி: குலத்துடன் தொடர்பு கொண்டவள்.

96. அகுலா: குலத்திற்கு அப்பாற்பட்டவள்.

97. ஸமயாந்தஸ்தா: சிவசக்திகளின் ஸாம்யமான ரூபத்தோடு விளங்குபவள்.

98. ஸமயாசார-தத்பரா: மூலாதாரத்திலிருந்து படிப்படியாக தேவியை ஆறு ஆதாரங்களிலும் 'மானஸிக' பூஜை செய்துவது ஸமயாசாரம். இதில் ப்ரியம் உள்ளவள். சக்தி: சலனமுள்ளவள். சிவன்=அசைவற்றவர்.

மூலாதாரைக-நிலயா ப்ரஹ்மக்ரந்தி-விபேதினீ ।
மணிபூராந்தருதிதா விஷ்ணுக்ரந்தி-விபேதினீ ॥ 38 ॥

99. மூலாதாரைக நிலயா: மூலாதாரத்தையே தன் முக்யமான இருப்பிடமாகக் கொண்டவள்.

''சக்ரம், கண்டம், க்ரந்தி''

சரீரத்தில் முகுகெலும்பிற்கு மேருதண்டம் என்று பெயர். இதனுள் ஸுஷும்னா என்னும் நாடி உள்ளது. இந்த நாடியின் அடிப்பாகம் குதம், லிங்கம் இடையே நடுவில் மூலாதாரம் எனப்படும் இடத்தில் உள்ளது. அடுத்து ஸ்வாதிஷ்டானம் என்னும் சக்ரம் லிங்கத்தின் மூலப்பிடியில்

உள்ளது. மூன்றாவது மணிபூரகம் நாபியிலும், நான்காவது அனாஹதம் ஹ்ருதயப் பிரதேசத்திலும், ஐந்தாவதாக விசுத்தி கழுத்திலும், ஆறாவதாக ஆக்ஞா - புருவங்களுக்கு மத்தியிலும் உள்ளது.

இவ்வாறுக்கும் மேல் ஸஹஸ்ரார சக்ரம் உள்ளது. இவைகளை பத்மம் என்று சொல்வது வழக்கம்.

இந்த ஆறில் முறையே இரண்டிரண்டு சக்ரங்கள் ஒரு கண்டம் எனப்படும். ஓரோர் கண்டத்தின் மேலும் கீழுமாக இரண்டு கிரந்திகள் அல்லது முடிச்சுகள் உள்ளன. அக்னி, ஸூர்ய, சந்த்ரமண்டலங்கள் என்று பெயர். குண்டலினிக்கு ஆதாரமாகவும், ஸுஷும்னைக்கு மூலமாக இருப்பதாலும் 'மூலாதாரம்' என்ற பெயர் வந்தது.

100. ப்ரஹ்மக்ரந்தி விபேதினி: முதல் இருசக்ரங்களின் (மூலாதாரம்-ஸ்வாதிஷ்டானம்) கண்டமானது அக்னிகண்டம். இது பிரும்மனது ஸ்தானம். இங்குள்ள முடிச்சு 'ப்ரஹ்மகிரந்தி' எனப்படும் இதை பேதம் செய்வள்.

101. மணிபூராந்தருதிதா: மணிபூரக சக்ரத்தில் ஸர்வாபரண பூஷிதையாக காட்சியளிப்பவள்.

102. விஷ்ணு க்ரந்தி விபேதினீ: விஷ்ணு முடிச்சைப் பிளப்பவள். விஷ்ணுமூர்த்தியாக தேவி விளங்குவது மணிபூரகத்தில் தான்.

ஆஜ்ஞா-சக்ராந்தராலஸ்தா ருத்ரக்ரந்தி-விபேதினீ ।
ஸஹஸ்ராராம்புஜாரூடா ஸுதாஸாராபி-வர்ஷிணீ ।। 39।।

103. புருவமத்தியில் ஆக்ஞா சக்ரத்தின் நடுவில் உள்ளவள். ருத்ர கிரந்தியை பிளப்பவள்.

104. ருத்ரமூர்த்தியாக குருமூர்த்தியாக தேவி விளங்கும் ஸ்தானம் 'ஆக்ஞா சக்கரம்'.

105. ஸஹஸ்ராராம் புஜாரூடா: ஸஹஸ்ரார சக்ரத்தில் (ப்ரம்ம ரந்திரத்திற்கு கீழே) உள்ள 1 ஸ்ரீ இதழ் தாமரையில் இருப்பவள். இது ஸதாசிவனுடைய ஸ்தானம்.

106. ஸுதாஸாராபிவர்ஷிணி: ஸஹஸ்ரார பத்மத்தின் நடுவிலிருந்து (சந்த்ர மண்டலத்திலிருந்து) அமிருதத்தை எல்லா நாடிகளிலும் பெருமழைபோல் பெருகும்படி செய்கிறாள். 'தேவி' இந்த அம்ருதத்தை அடைந்து, ஆனந்தத்தை அனுபவிப்பதே இந்த உபாஸனையின் முக்கிய நோக்கம்.

தடில்லதா-ஸமருசி: ஷட்சக்ரோபரி-ஸம்ஸ்திதா ।
மஹாசக்தி : குண்டலினீ பிஸதந்து-தனீயஸீ ॥ 40 ॥

107.தடில்லாத ஸமருசி: மின்னல் போல் பேரொளியுடன் 'தேவி' விளங்குகிறாள். (ஒருக்ஷணமே) 'வித்யுல்லேகேவ பாஸ்வரா)

108. ஷட்சக்ரோபரி ஸம்ஸ்திதா: ஆறு சக்கரங்களுக்கும் மேல் இருப்பவள்.

109. மஹாசக்தி: பக்தர்கள் செய்யும் ஆராதனையில் பிரியமுள்ளவள்.

110. குண்டலினீ: குண்டலினீ ஸ்வரூமாக இருப்பவள்.

111. பிஸதந்து-தனீயஸீ: தாமரைத் தண்டில் இருக்கும் நூல்போல் மெல்லியவள்.

பவானீ பாவனாகம்யா பவாரண்ய-குடாரிகா ।
பத்ரப்ரியா பத்ரமூர்த்திர்-பக்தஸௌபாக்ய-தாயினீ ॥41॥

பக்தன் அம்பாளைப் பார்த்து 'பவானி த்வம்' என்று இரண்டு வார்த்தைகள் சொன்ன உடனேயே, அம்பாள் 'நீயாக நான் ஆகவேண்டும்' என்று நினைத்து அவனுக்கு தன் ஸாயுஜ்ய பதவியை அளித்து விடுகிறாள்.

என்னே! அன்னையின் கருணை! (ஆதிசங்கரர்-ஸௌந்தர்ய லஹரி).

112. பவானீ: பவன் என்ற பரமசிவனின் பத்னீ.

113. பாவனாகம்யா: பாவனையால் அடைபவள்

114. பவாரண்ய குடாரிகா: ஸம்ஸாரமாகிய காட்டை அழிக்கும் கோடாரி போன்றவள்.

115. பத்ரப்ரியா: மங்களத்தை செய்வதில் ப்ரியமுள்ளவள்.

116. பத்ரமூர்த்தி: மங்களமே வடிவானவள்.

117. பக்த ஸௌபாக்யதாயினீ: பக்தர்களுக்கு ஸௌபாக்யத்தை தருபவள்.

பக்திப்ரியாபக்திகம்யா பக்திவச்யா பயாபஹா ।
சாம்பவீ சாரதாராத்யா சர்வாணீ சர்மதாயினீ ।। 42 ।।

118. பக்திப்ரியா: பக்தியில் ப்ரியமுள்ளவள்.

119. பக்தி கம்யா: பக்தியால் அடைபவள்

120. பக்திவச்யா: பக்திக்கு கட்டுப்பட்டவள். (பகவான் க்ருஷ்ண பரமாத்மாவை அன்னை யசோதா கட்டிப்போட்டது பக்தி எனும் கயிறு தானே!

121. பயாபஹா: பயத்தை (நீர் நிலம் மூலம்) போக்குபவள் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம் -935

122. சாம்பவீ - சம்புவின் (சிவன்) பத்னீ, சுகத்தை அளிப்பவள் சம்பு. (8 வயது கன்னிகை)

123. சாரதாராத்யா : சரத்கால நவராத்திரியில் சரஸ்வதியாய் (சாரதா) வழிபடப்பெற்றவள்.

124. சர்வாணீ: பரமசிவனின் பத்னீ.

125. சர்மதாயினீ: சுகத்தை தேருபவள்.

சாங்கரீஸ்ரீகரீ ஸாத்வீ சரச்சந்த்ர நிபாநநா ।
சாதோதரீசாந்திமதீ நிராதாரா நிரஞ்ஜனா ।। 43 ।।

126. சாங்கரீ: சங்கரரின் பத்னீ. சுகம் தருபவள்.

127. ஸ்ரீகரி: செல்வத்தைத் தருபவள் (வி.ஸ.611-ஸ்ரீகர)

128. ஸாத்வீ: பதிவ்ரதை

129. சரச்சந்திர-நிபானனா - சரத்கால சந்திரன் போன்ற முகம் உள்ளவள்.

130. சாதோதரீ: நுட்பமான வயிலுள்ளவள்.

131. சாந்திமதி: பொறுமையானவள்

132. நிராதாரா: தனக்கு ஆதாரம் வேண்டாதவள் (தானே எல்லாவற்றுக்கும் ஆதாரம்)

சும்பாஸுரனுடன் தேவீயுத்தம் செய்யும்போது வானில் ஆதாரம் ஏதுமின்றி நின்று அவனுடன் போரிட்டாள்.

(துர்கா சப்தசதீ. 1.22.)

தத்ராபிஸா நிராதாரா யுயுதே தேன சண்டிகா

133. நிரஞ்ஜன-அழுக்கற்றவள் (அஞ்ஜனம்:மை.) இது ஒரு அழுக்குதான். இது, இங்கு அவித்யை, மாயையைக் குறிக்கிறது.)

நிர்லேபா நிர்மலா நித்யா நிராகாரா நிராகுலா ।
நிர்குணா நிஷ்கலா சாந்தாநிஷ்காமாநிருபப்லவா ॥ 44 ॥

134. நிர்லேபா: பற்றில்லாதவள்.

135. நிர்மலா-மும்மலம் அற்றவள்.

136. நித்யா-சாஸ்வதமானவள்.

137. நிராகாரா: உருவமில்லாதவள்.

138. நிராகுலா: கலக்கமற்றவள்.

139. நிர்குணா: குணங்கள் அற்றவள்.

140. நிஷ்கலா: அகண்டரூபிணி.

141. சாந்தியானவள்.

142. நிஷ்காமா: விருப்பமற்றவள்.

143. நிருபப்லவா: அழிவற்றவள்.

நித்யமுக்தா நிர்விகாரா நிஷ்ப்ரபஞ்சா நிராச்ரயா ।
நித்யசுத்தா நித்யபுத்தா நிரவத்யா நிரந்தரா ॥ 45 ॥

144. நித்யமுக்தா: என்றும் முக்திரூபிணி.

145. நிர்விகாரா: மாறுதல் இல்லாதவள்.

146. நிஷ்ப்ரபஞ்சா-கட்டுப்பாடுகளுக்கு உடன்படாதவள்.

147. நிராச்ரயா: எதையும் சார்ந்து இருப்பவள் அல்ல.

148. நித்ய சுத்தா: என்றும் பரிசுத்தமானவள்

149. நித்யபுத்தா: என்றும் அறிவு மயமானவள்.

150. நிரவத்யா: குற்றமில்லாதவள்.

நிஷ்காரணா நிஷ்கலங்கா நிருபாதிர் நிரீச்வரா ।
நீராகா ராகமதனீ நிர்மதாமதநாசினீ ॥ 46 ॥

151. நிரந்தரா: இடைவெளி இல்லாதாவள்.

152. நிஷ்காரணா: காரணமில்லாதவள்.

153. நிஷ்கலங்கா: களங்கம் இல்லாதவள்.

154. நிருபாதி: உபாதையற்றவள்.

155. நிரீச்வரா: அவளை அடக்கி ஆள்பவர் இல்லாதவள்.

156. நீராகா: ஆசையற்றவள்.

157. ராகமதனீ: ஆசையை போக்கி வைராக்கியம் தருபவள்.

158. நிர்மதா: மதம் (திமிர், கர்வம்) இல்லாதவள்.

159. மதநாசினீ : மதத்தை நாசம் செய்பவள்

நிச்சிந்தா நிரஹங்காரா நிர்மோஹா மோஹநாசினீ ।
நிர்மமா மமதாஹந்த்ரீ நிஷ்பாபா பாபநாசினீ ॥ 47 ॥

160. நிச்சிந்தா: கவலையற்றவள்.

161. நிரஹங்காரா: அஹங்கரம் இல்லாதவள்.

162. நிர்மோஹா: மதிமயக்கம் இல்லாதவள்.

163. மோஹநாசினீ: மதிமயக்கத்தை அழிப்பவள்.

164. நிர்மமா: மமதை இல்லாதவள்.

165. மமதாஹந்த்ரீ: மமதையை போக்குபவள்.

166. நிஷ்பாபா: பாபமற்றவள் .

167. பாபநாசினீ: பாபத்தை போக்குபவள்

நிஷ்க்ரோதா க்ரோதசமநீ நிர்லோபா லோபநாசினீ ।
நிஸ்ஸம்சயா ஸம்சயக்னீ நிர்ப்பவா பவநாசினீ ॥ 48 ॥

168. நிஷ்க்ரோதோ: கோபற்றவள்

169. க்ரோதசமணீ: கோபத்தை நாசம் செய்பவள்

170. நிர்லோபா: லோபம் இல்லாதவள்

171. லோபநாசினீ: லோபத்தை போக்குபவள்

172. நிஸ்ஸம்சயா: சந்தேகமற்றவள்

173. ஸம்சயக்னீ: சந்தேகத்தை போக்குபவள்.

174. நிர்ப்பவா: உத்பத்தி இல்லாதவள்

175. பவநாசினீ: பிறவிப் பிணியை போக்குபவள்.

நிர்விகல்பா நிராபாதா நிர்ப்பேதா பேதநாசினீ ।
நிர்நாசா ம்ருத்யுமதனீநிஷ்க்ரியா நிஷ்பரிக்ரஹா ॥ 49 ॥

176. நிர்விகல்பா: விகல்பமில்லாதவள்.

177. நிராபாதா: எதனாலும் பாதிக்கப்படாதவள்.

178. நிர்பேதா: பேதம் இல்லாதவள்.

179. பேதநாசினீ: பேத உணர்வை அழிப்பவள்.

180. நிர்நாசா: அழிவில்லாதவள்.

181. ம்ருத்யுமதனீ: மரண பயத்தை போக்குபவள்.

182.நிஷ்க்ரியா: காமம் இல்லாதவள்.

183. நிஷ்பரிக்ரஹா: எதையும் பரிசாகப் பெறாதவள்.

நிஸ்துலா நீலசிகுரா நிரபாயா நிரத்யயா ।
துர்லபா துர்கமா துர்கா து:க்கஹந்த்ரீ ஸுகப்ரதா ॥50॥

184. நிஸ்துலா: ஒப்பற்றவள்.

185. நீலசிகுரா: கரிய கூந்தலை உடையவள்.

186. நிரபாயா: அழிவில்லாதவள்.

187. நிரத்யயா: வரம்பை மீறாதவள்.

188. துர்லபா: எளிதில் அடையமுடியாதவள்.

189. துர்கமா: எளிதில் நெருங்க முடியாதவள்.

190. துர்கா- துர்கை என்ற பெயருடையவள் அசுரன் துர்கமனை வதம் செய்தவள் (9 வயது கன்னிகை).

191. து:க்க ஹந்தரீ: துக்கத்தை போக்குபவள்.

192. ஸுகப்ரதா: சுகத்தை தருபவள்.

துஷ்டதூரா துராசார-சமனீ தோஷவர்ஜிதா ।
ஸர்வஜ்ஞா ஸாந்த்ரகருணா ஸமாநாதிக வர்ஜிதா ॥ 51॥

193. துஷ்டதூரா : துஷ்டர்களால் அடையமுடியாதவள்.

194. துராசார சமனீ: கெட்ட நடத்தையை அடக்குபவள்.

195. தோஷ: வர்ஜிதா: தோஷம் இல்லாதவள்.

196. ஸர்வஞா: அனைத்தும் அறிந்தவள்.

197. ஸாந்த்ர கருணா: மிகுந்த கருணை உடையவள்.

198. ஸமானாதிக: வர்ஜிதா: ஒப்பாரும், மிக்காரும் இல்லாதவள்.

சர்வஸக்திமயீ ஸர்வமங்கலா ஸத்கதிப்ரதா ।
ஸர்வேச்வரீ ஸர்வமயீ ஸர்வமந்த்ர-ஸ்வரூபிணீ ।। 52 ।।

199. ஸர்வசக்திமயீ: எல்லா சக்திகளையும் உடையவள்.

200. ஸர்வமங்கலா: ஸர்வமங்கள ரூபிணி. எல்லா மங்களங்களையும் உடையவள். அவற்றிற்கு மூலமாகவும் இருப்பவள்.

201. ஸத்கதி-ப்ரதா: நல்ல கதியை வழங்குபவள்

202. ஸர்வேச்வரீ: எல்லோருக்கும் ஈசுவரி

203. ஸர்வமயீ: எல்லாரூபமாய் இருப்பவள்.

204. ஸர்வமந்திர ஸ்வரூபிணி: எல்லா மந்திரங்களின் ஸ்வரூபம்

ஸர்வ-யந்த்ராத்மிகா-ஸர்வ-தந்த்ரரூபா மனோன்மனீ ।
மாஹேச்வரீ மஹாதேவீ மஹாலக்ஷ்மீர்-ம்ருடப்ரியா ।।53।।

205. ஸர்வயந்த்ராத்மிகா: எல்லா யந்திரங்களின் வடிவமானவள்.

206. ஸர்வதந்த்ரரூபா: எல்லா தந்திரங்களின் உருவானவள்.

207. மனோன்மனீ: மனோன்மனீ ரூபமானவள்.

208. மாஹேஸ்வரீ: மஹேச்வரன் (சிவன்) பத்னீ.

209. மஹாதேவீ: மஹாதேவ பத்னீ.

210. மஹாலக்ஷ்மீ: மஹாவிஷ்ணுவின் பத்னீயான மஹாலக்ஷ்மீ உருவானவள். மிகப் பெரிய (மஹதீ) லக்ஷ்மீ ஸ்வரூபமாக இருப்பவள். கோலாப்பூரில் விளங்கும் மஹாலக்ஷ்மீ.

துர்கா ஸப்தசதியில், மஹிஷாஸுரனை வதம் செய்ய 'மஹாலட்சுமி' வடிவில் தேவி 18 கைகளுடன் தோன்றினாள் என்று கூறப்படுகிறது.

'த்ரயோதசே மஹாலட்சுமி'-த்ரயோதசியன்று வழிபடப் பெறுபவள். (13 வயது கன்யா) .

211. ம்ருடப்ரியா: ம்ருடன் (சிவன்) மனைவி.

மஹாரூபா மஹாபூஜ்யா மஹாபாதக-நாசினீ ।
மஹாமாயா மஹாஸத்வா மஹாசக்திர்-மஹாரதி: ।। 54।।

212. மஹாரூபா: பெரிய உருவம் படைத்தவள்

213. மஹாபூஜ்யா: மகான்களால் பூஜிக்கப்பட்டவள்.

214. மஹாபாதகநாசினீ: மஹாபாபங்களை நாசம் செய்பவள். (பஞ்ச மஹா பாபங்கள்: 1. ப்ரம்மஹத்தி 2. திருடுதல். 3. மது அருந்துதல் 4. மூத்தார் மனையாளை அடைதல், 5. இந்த நான்கு பாபங்கள் செய்தவரோடு சேர்தல்).

215. மஹாமாயா: ப்ரஹ்மாதிகளுக்கும் கூட மோஹத்தை உண்டு பண்ணுவதால் - மஹாமாயரூபிணீ

216. மஹா ஸத்வா: மஹத்தான சத்வ குணத்தையுடையவள்

217. மஹாசக்தி: மிகுந்த ஸாமர்த்தியம் வாய்ந்தவள்.

218. மஹாரதி: சிறந்த ஆனந்தத்தை அளிப்பவள். ரதி-அழகானவள். -மன்மதன் மனைவி, ஆனால் தேவி இவளையும் விட அழகானவள் (சொல்லவும், வேண்டுமா?) எனவே மஹாரதி-மஹாகாமனின் மனைவி.

மஹாபோகா மஹைச்வர்யா மஹாவீர்யாமஹாபலா ।
மஹாபுத்திர்-மஹாஸித்திர் மஹாயோகேச்வரேச்வரீ ॥55॥

219. மஹாபோகா: மகத்தான சுகானுபவமே ஆனவள்.

220. மஹைச்வர்யா: சிறந்த ஐசுவர்யத்தை உடையவள்.

221. மஹாவீர்யா: வீர்யம் நிறைந்தவள்.

222. மஹாபலா: மிக்க பலம் வாய்ந்தவள்

223. மஹாபுத்தி: பேரறிவு படைத்தவள்

224. மஹாசித்தி: மஹாசித்திரூபமானவள்

225. மஹாயோகேச்வரீ: யோகேசுவர்களுக்கும் ஈசுவரி.

மஹாதந்த்ரா மஹாமந்த்ரா மஹாயந்த்ரா மஹாஸநா ।
மஹாயாக-க்ரமாராத்யா மஹாபைரவ-பூஜிதா ॥ 56 ॥

226. மஹாதந்த்ரா: (தன்னுடைய வழிபாட்டு முறைகளைக் கூறும்) மாபெரும் தந்திரங்கள் உள்ளவள்.

227. மஹாமந்த்ரா: தன்னைப் பற்றி பெருமை வாய்ந்த மந்த்ரங்களை உடையவள்.

228. மஹாயந்த்ரா: தன் உபாஸனையில் வணங்கப்படும் தன்னைப்பற்றிய பெருமை வாய்ந்த யந்த்ரங்களை உடையவள்.

229. மஹாஸனா: பெருமை மிக்க அழகான ஆஸனத்தை உடையவள்.

230. மஹா-யாக-க்ரமாராத்யா: மஹாயாகம் என்னும் முறையினால் ஆராதிக்கப்பட்டவள்.

231. மஹா பைரவ பூஜிதா: மஹா பைரவரால் பூஜிக்கப்பட்டவள்.

மஹேச்வர-மஹாகல்ப-மஹாதாண்டவ ஸாக்ஷிணீ ।
மஹாகாமேச-மஹிஷீ மஹாத்ரிபுரஸுந்தரீ ।। 57 ।।

232. மஹேச்வரனுடைய மஹா ப்ரளய காலத்திய மஹாதாண்டவத்திற்கு ஸாக்ஷியாயிருப்பவள்.

233. மஹா காமேச-மஹிஷீ-மகாகாமேசுவரருடைய பட்டமஹிஷி.

234. மஹாத்ரிபுரஸுந்தரி-மஹா த்ரிபுரை.

சதுஷ்ஷஷ்ட்-யுபசாராட்யா சதுஷ்ஷஷ்டி-கலாமயீ ।
மஹாசதுஷ்ஷஷ்டிகோடி-யோகினீ-கணஸேவிதா ।। 58।।

235. சது: ஷ்ஷஷ்ட்யுபசாராட்யா: 64 வகை உபசாரங்களை உடையவள்.

236. சதுஷ்ஷஷ்டி கலாமயீ: 64 கலை வடிவானவள்.

237. 64 கோடி யோகினீ கணங்களால் ஸேவிக்கபட்டவள்.

மனுவித்யா சந்த்ரவித்யா சந்த்ரமண்டல மத்யகா ।
சாருரூபா சாருஹாஸா சாருசந்த்ர-கலாதரா ।। 59 ।।

238. மனுவித்யா: மனுவினால் உபாசிக்கப்பட்ட ஸ்ரீவித்யா ரூபிணி.

239. சந்தரவித்யா: சந்திரனால் உபாசிக்கப்பட்ட ஸ்ரீவித்யா ரூபிணி.

240. சந்திரமண்டல மத்யகா: சந்திர மண்டலத்தின் மத்தியில் இருப்பவள்.

241. சாருரூபா: அழகிய உருவமுள்ளவள்

242. சாருஹாஸா: அழகிய புன்சிப்போடு கூடியவள்.

243. சாருசந்த்ர கலாதரா: அழகிய சந்திர கலையைத் தரித்தவள்.

சராசர-ஜகந்நாதா சக்ரராஜ-நிகேதநா ।
பார்வதீ பத்மநயநா பத்மராக-ஸமப்ரபா ॥ 60 ॥

244. சராசர-ஜகன்னாதா: இயங்கும், இயங்காத இந்த ஜகத்திற்கும் ஈசுவரி.

245. சக்ரராஜநிகேதனா: ஸ்ரீசக்ரத்தையே தன் இருப்பிடமாகக் கொண்டவள்.

246. பார்வதீ:இமவானுக்கு புத்ரியாகத் தோன்றியவள்.

247. பத்மநயனா: தாமரை போன்ற கண்களையுடயவள்.

248. பத்மராகஸமப்ரபா: பத்மராகமென்ற சிகப்பு ரத்னத்திக் கொப்பான காந்தியுடயைவள்.

பஞ்சப்ரேதாஸநாஸீநா பஞ்சப்ரஹ்மஸ்வரூபிணீ ।
சின்மயீ பரமாநந்தா விஜ்ஞான-கனரூபிணீ ॥ 61 ॥

249. பஞ்சப்ரேதாஸனாஸீனா: ஐந்து பிரேதங்களாகிய ஆஸனத்தில் இருப்பவள். (பிரம்மா, விஷ்ணு, ருத்ரன், ஈசன், ஸதாசிவன் ஐவரும் தத்தம் சக்திகளுடன் சேர்ந்தால் பஞ்சப் பிரம்மம் என்றும், பிரிந்தால் பஞ்சப்ரேதம் எனப்படுவர்).

250. பஞ்ச ப்ரஹ்மஸ்ரூபிணி: பஞ்ச பிரம்ம ஸ்வரூபமாய் இருப்பவள்.

251. சின்மயீ: சித்(ஞானம்) வடிவானவள்.

252. பரமானந்தா: மிகச் சிறந்த ஆனந்த வடிவானவள்

253. விக்ஞான கனரூபிணி: உறைந்து போன ஆனந்த (இதுவே எல்லை) வடிவானவள்.

த்யான-த்யாத்ரு-த்யேயரூபா தர்மாதர்ம-விவர்ஜிதா ।
விச்வரூபா ஜாகரிணீ ஸ்வபந்தீ தைஜஸாத்மிகா ॥ 62 ॥

254. த்யான-த்யாத்ரு-த்யேயரூபா

255. தர்மாதர்ம விவர்ஜிதா-த்யானம், த்யானிப்பவன், த்யானம் செய்யப்படுபவர் என்ற மூன்றாயிருப்பவர்.

தர்மம்-அதர்மம், இவற்றிலிருந்து விடுபட்டவள்.

256. விச்வரூபா: விச்வன்/உலகின் வடிவாயிருப்பவள்

257. ஜாகரிணீ: விழிப்பில் ஜீவன் வடிவாயிருப்பவள்

258. ஸ்வபந்தீ: கனவு நிலையில் இருப்பவள்.

259. தைஜஸாத்மிகா: கனவு நிலையிலிருக்கும் உயிர்களின் மொத்த வடிவில் திகழ்பவள்.

ஸுப்தா ப்ராஜ்ஞாத்மிகா துர்யா ஸர்வாவஸ்தா-விவர்ஜிதா।
ஸ்ருஷ்டிகர்த்ரீ ப்ரஹ்மரூபா கோப்த்ரீ கோவிந்தரூபிணீ ॥63॥

260. ஸுப்தா: உறக்க நிலயில் விளங்கும் ஜீவனின் ஸ்வரூபம்.

261. ப்ராக்ஞாத்மிகா: உறக்கநிலையில் ஜீவனுக்கு ''ப்ராக்ஞன்'' என்று பெயர். அவ்வடிவானவள்.

262. துர்யா: நான்காவது நிலையில் உள்ள ஜீவனாக இருப்பவள். விழிப்பு, கனவு, உறக்கம் இவற்றில் விளங்கும் விச்வன், தைஜஸன், ப்ராக்ஞன் என்னும் மூன்று ஜீவ பேதங்களையும் பகுத்து அறிந்து தெளிவதனால் உண்டாவது 'சுத்த வித்யை' என்னும் தத்வம். இந்நிலை துரீயம் எனப்படும். தேவிக்கு 'துரீயா' என்று பெயர்.

263. ஸர்வா வஸ்தா-விவர்ஜிதா-எல்லா நிலைகளுக்கும் அப்பாற்பட்டவள்.

264. ஸ்ருஷ்டிகர்த்ரீ- சிருஷ்டியைச் செய்பவள்.

265. ப்ரஹ்மரூபா: பிரம்ம ரூபிணி.

266. கோப்த்ரீ: காக்கும் தொழிலைச் செய்பவள்.

266. ப்ரஹ்மரூபா - பிரம்ம ரூபிணீ

267. கோவிந்த ரூபிணீ: கோவிந்தன், காத்தல் தொழிலைச் செய்யும் விஷ்ணுவின் வடிவானவள். ஸத்வ குண மூர்த்தியான விஷ்ணுவும் தேவியே தான் (விஸ.187, 539. கோவிந்த)

ஸம்ஹாரிணீ ருத்ரரூபா திரோதானகரீச்வரீ ।
ஸதாசிவாகுனுக்ரஹதா பஞ்சக்ருத்யபராயணா ॥ 64 ॥

268. ஸம்ஹாரிணீ: அழித்தல் தொழிலைச் செய்பவள்.

269. ருத்ரரூபா: ருத்ரன் வடிவானவள்.

270. திரோதானகரீ-எல்லாவற்றையும் மறையச் செய்பவள்.

271. ஈசுவரீ: ஈசுவரன் வடிவானவள்

272. ஸதாசிவா: ஸதாசிவனாயிருப்பவள்

273. அனுக்ரஹதா: அனுக்ரஹம் புரிபவள்

274. பஞ்சக்ருத்ய பராயணா: படைத்தல், காத்தல் அழித்தல், மறைத்தல், அருளல்-ஐந்தொழிலில் ஈடுபாடுடையவள்.

பானுமண்டல-மத்யஸ்தா பைரவீ பகமாலினீ ।
பத்மாஸநா பகவதீ பத்மநாப-ஸஹோதரீ ॥ 65 ॥

275. பானுமண்டல மத்யஸ்தா: சூரிய மண்டலத்தின் நடுவில் இருப்பவள்.

276. பைரவீ: பைரவருடைய சக்தி

277. பகமாலினீ: பகமாலினீ என்ற நித்யதேவதையாய் இருப்பவள்.

278. பத்மாஸனா: தாமரையில் வீற்றிருப்பவள்

279. பகவதீ: ஐச்வர்யத்தோடு கூடியவள்.

280. பத்மனாப-ஸஹோதரீ: விஷ்ணுவின் உடன் பிறந்தவள்.

உன்மேஷ-நிமிஷோத்பன்ன-விபன்ன-புவனாவளீ ।
ஸஹஸ்ரசீர்ஷ-வதநா-ஸஹஸ்ராக்ஷீ ஸஹஸ்ரபாத் ।।66 ।।

281. கண்களைத்திறந்து மூடுவதினால் இந்த லோகங்களை தோற்றுவித்து மறையச் செய்பவள் (அனாயாசமாக)

282. ஸஹஸ்ர சீர்ஷ-வதனா: எண்ணற்ற தலை மற்றும் அவயவங்கள் உடையவள்.

283. ஸஹஸ்ராக்ஷீ: எண்ணற்ற கண்கள் உடையவள்.

284. ஸஹஸ்ரபாத்: கணக்கிலடங்காத கால்களை உடையவள்.

ஆப்ரஹ்ம-கீட ஜனனீ வர்ணாச்ரம-விதாயிநீ ।
நிஜாஜ்ஞாரூப-நிகமா புண்யாபுண்ய-பலப்ரதா ।। 67 ।।

285. ஆப்ரஹ்ம-கீடஜனனீ: ப்ரஹ்மா முதல் புழு, பூச்சி வரை உள்ள எல்லா ஜீவன்களையும் ஈன்றவள். ப்ரஹ்மாவிற்கும் புழுவிற்கும் பெருத்த வேறுபாடு இருந்தாலும்-'தாயான தேவிக்கு' எல்லா பிறப்புகளிடமும் ஒரே மாதிரியான அன்புதான். இதைத்தான் 'அவ்யாஜ கருணாமூர்த்தி' (992) சொல்லும். அதாவது, அன்னை-பக்ஷபாதமில்லாத கருணை உருவம்.

286. வர்ணாச்ரம விதாயினீ: வர்ணம் (பிராம்மணன், க்ஷத்ரியன், வைசியன், சூத்ரன்), ஆச்ரமம் (பிரம்மசரியம், கிருஹஸ்தம், வானப்ரஸ்தம், ஸன்யாஸம்) என்று வகுத்தவள்.

287. நிஜாக்ஞாரூப-நிகமா: தன் கட்டளைகளின் வடிவான வேதங்களை உடையவள்.

288. புண்யாபுண்ய-பலப்ரதா- புண்யம், பாபம் இவற்றின் பலனைக் கொடுப்பவள்.

ச்ருதி-ஸீமந்த-ஸிந்தூரீ-க்ருத- பாதாப்ஜதூலிகா ।
ஸகலாகம-ஸந்தோஹ-சுக்தி-ஸம்புட மௌக்திகா
॥68॥

289. வேதங்களகிற ஸ்த்ரீகளின் முன் வகிட்டில் சிவந்த ஸிந்தூரமாக விளங்கும் தன்னுடைய பாத கமலங்களின் தூளிகளைக் கொண்டவள்.

290. எல்லா வேதங்களின் (ஆகமங்களின்) கூட்டங்களாகிற சிப்பியில் தோன்றிய முத்தாகிற மூக்குத்தியினால் விளங்குபவள்.

புருஷார்த்த-ப்ரதா பூர்ணா போகினீ புவனேச்வரீ ।
அம்பிகாகுனாதி-நிதனா ஹரிப்ரஹ்மேந்த்ர ஸேவிதா
॥69॥

291. புருஷார்த்த ப்ரதா: அறம், பொருள், இன்பம், வீடு அருள்பவள்.

292. பூர்ணா: பரிபூர்ணமானவள்

293. போகினீ: போகங்களை அனுபவிப்பவள்.

294. புவனேஸ்வரி: பதினான்கு புவனங்களுக்கும் ஈஸ்வரியாக இருப்பவள். ஹ்ரீம் என்னும் மாயா பீஜத்திற்கு புவனேஸ்வரி பீஜம்' என்று பெயர்.

295. அம்பிகா : சிறந்த தாயானவள்.

296. அனாதி-நிதனா: ஆதியும் அந்தமும் இல்லாதவள்.

297. ஹரிப்ரஹ்மேந்த்ர - ஸேவிதா: விஷ்ணு, ப்ரஹ்மா, இந்திரன் ஆகியோர்களால் வணங்கபட்டவள்.

நாராயணீ நாத-ரூபா நாமரூபா-விவர்ஜிதா ।
ஹ்ரீங்காரீ ஹ்ரீமதீ ஹ்ருத்யா ஹேயோபாதேய வர்ஜிதா
॥70॥

298. நாராயணீ: நாராயணன் (விஷ்ணு) ஸகோதரி

299. நாதரூபா: சப்த வடிவானவள்.

300. நாம ரூப விவர்ஜிதா: பெயரும், வடிவும் இல்லாதவள்.

301. ஹ்ரீங்காரீ: ஹ்ரீம் என்ற ‘பீஜாக்ஷர’ ரூபமானவள்.

302. ஹ்ரீமதீ: நாணமுள்ளவள்

303. ஹ்ருத்யா: பக்தர்களின் ஹ்ருதயத்தில் வசிப்பவள்.

304. ஹேயோபாதேய வர்ஜிதா: தள்ளத்தக்கதும், கொள்ளத்தக்கதும் இல்லாதவள்.

ராஜராஜார்ச்சிதா ராஜ்ஞீ ரம்யா ராஜீவலோசனா ।

ரஞ்ஜனீ ரமணீ ரஸ்யா ரணத்கிங்கிணி-மேகலா ॥ 71 ॥

305. ராஜராஜார்ச்சிதா: ராஜ ராஜனால் உபாசிக்கப்பட்டவள். 306. ராக்ஞீ: மஹாகாமேசருடைய பட்டமஹிஷி

307. ரம்யா: அழகானவள்

308. ராஜீவ லோசனா: மான், மீன் தாமரஸ புஷ்பம்-போன்ற கண்களை உடையவள்.

309. ரஞ்ஜனீ: பக்தர்களை சந்தோஷப்படுத்துகிறவள்.

310. ரமணீ: தன்னை எளிமையாக்கிக் கொண்டு பக்தர்களுடன் விளையாட்டாகப் பழகுகிறவள்.

311. ரஸ்யா- (ஆத்மானந்த) ரஸத்தை உணர்ந்து அனுபவிக்க கூடியவள்.

312. ரணத்கிங்கிணி மேகலா: சலங்கைகள் ஒலிக்கும் ஒட்டியாணம் அணிந்தவள்.

ரமா ராகேந்துவதனா ரதிரூபா ரதிப்ரியா ।

ரக்ஷாகரீ ராக்ஷஸக்னீ ராமா ரமணலம்படா ॥ 72 ॥

313. ரமா: லக்ஷ்மீ ரூபமாக இருப்பவள்.

314. ராகேந்து-வதனா- பூர்ண சந்திரன் போன்ற முகத்தையுடையவள்.

315. ரதிரூபா - மன்மதனின் மனைவி ரதிவடிவாக உள்ளவள்.

316. ரதிப்ரியா - ரதியிடம் ப்ரியம் உள்ளவள்.

317. ரக்ஷாகரி: காப்பாற்றுபவள்.

318. ராக்ஷஸக்னீ: ராக்ஷஸர்களை அழிப்பவள்.

319. ராமா: ஸ்த்ரீகளின் வடிவானவள்.

320. ரமணலம்படா: தன் பதியுடன் ரமிப்பதில் ஆசையுள்ளவள்.

காம்யா காமகலாரூபா கதம்ப குஸுமப்ரியா ।
கல்யாணீ ஜகதீ-கந்தா கருணாரஸ-ஸாகரா ।। 73 ।।

321. காம்யா: ஞானிகளால் விரும்பப்படுகிறவள்.

322. காம கலாரூபா: காமகலாரூபமாக இருப்பவள்.

323. கதம்ப-குஸும-ப்ரியா: கதம்ப பூவில் ப்ரியமுள்ளவள்.

324. கல்யாணீ: மங்கள வடிவானவள்

325. ஜகதி-கந்தா: ஜகத்திற்கு மூலகாரணமாய் இருப்பவள்

326. கருணா- ரஸ - ஸாகரா: கருணைக்கடல் (கடலுக்கு ஆழமோ, அகலமோ காண முடியாது அல்லவா)

கலாவதீ கலாலாபா காந்தா காதம்பரீப்ரியா ।
வரதா வாமநயனா வாருணீ-மத விஹ்வலா ।। 74 ।।

327. கலாவதீ: கலைகளுடன் கூடியவள்.

328. கலாலாபா: கலைகள் வடிவான பேச்சை உடையவள்.

329. காந்தா: அழகானவள்

330. காதம்பரீ-ப்ரியா: உயர்ந்த மதுவில் ப்ரியமுள்ளவள்.

331. வரதா: வரம் அளிப்பவள்.

332. வாமநயனா: அழகான கண்களை உடையவள்.

333. வாரூணி-மத-விஹ்வாலா: வாருணீ என்ற மதுவை அருந்தி அதன் மதத்தால் மெய் மறந்தவள்.

விச்வாதிகா வேதவேத்யா விந்த்யாசல-நிவாஸிநீ ।
விதாத்ரீ வேதஜநநீ விஷ்ணுமாயா விலாஸிநீ ॥ 75 ॥

334. விச்வாதிகா: எல்லா உலகங்களையும் விட மேலானவள்.

335. வேத வேத்யா: வேதங்களால் அறியத்தக்கவள்.

336. விந்த்யாசல வாஸினீ: விந்த்ய மலையில் வசிப்பவள்.

337. விதாத்ரீ: உலகத்தை தாங்குபவள் (935-ஜகத்தாத்ரி)

338. வேதஜனனீ: வேதங்களை உண்டு பண்ணினவள்.

339. விஷ்ணுமாயா: விஷ்ணுமாயா சக்தி

340. விலாஸினீ: சிற்றின்பக் கேளிக்கைளில் ரமிப்பவள்.

க்ஷேத்ரஸ்வரூபா க்ஷேத்ரேசீ
க்ஷேத்ர-க்ஷேத்ரஜ்ஞபாலினீ।
க்ஷயவ்ருத்தி-விநிர்முக்தா க்ஷேத்ரபால-ஸமர்ச்சிதா
॥76॥

341. க்ஷேத்ரஸ்வரூபா: க்ஷேத்ரவடிவானவள்

342. க்ஷேத் ரேசீ: க்ஷேத்திரங்களுக்கு தலைவி

343. க்ஷேத்ர ஹேத்ரக்ஞ பாலினீ: க்ஷேத்திரத்தையும், க்ஷேத்திரங்களையும் பரிபாலிப்பவள்.

344. க்ஷயவ்ருத்தி-வினிர்முக்தா: குறைதலும், வளருதலும், இல்லாதவள்.

345. க்ஷேத்ரபால-ஸமர்ச்சிதா: க்ஷேத்ரபாலர்களால் நன்கு பூஜிக்கப்பட்டவள்.

**விஜயா விமலா வந்த்யா வந்தாரு-ஜன-வத்ஸலா ।
வாக்வாதினீ வாமகேசீ வஹ்னி மண்டல-வாஸிநீ ॥77 ॥**

346. விஜயா: எப்பொழுதும் விசேஷமான வெற்றியுடன் விளங்குவதால்-விஜயா. ஸ்ரீமஹாவிஷ்ணுவின் ஸுதர்ஸன சக்ரத்தின் பத்னீ-விஜயலட்சுமி

347. விமலா: (மலம்) அழுக்கற்றவள்

348. வந்த்யா: வணங்கத்தக்கவள்

349. வந்தாரு: ஜனவத்ஸலா-வணங்குபவர்களை குழந்தை போல் ப்ரியத்துடன் போஷித்து அனுகிரஹம் செய்பவள்.

350. வாக்வாதினீ: வாக்கை சொல்கிறவள்.

351. வாமகேசீ: அழகான கூந்தலை உடையவள்.

352. வஹ்னி மண்டலவாஸினீ: அக்னி மண்டலத்தில் வசிப்பவள்.

**பக்திமத்-கல்பலதிகாபசுபாச-விமோசிநீ ।
ஸம்ஹ்ருதாசேஷ-பாஷண்டாஸதாசார-ப்ரவர்த்திகா ॥78॥**

353. பக்திமத்-கல்பலதிகா: பக்தர்களுக்கு கல்பகக் கொடி போன்று வேண்டியதை அளிப்பவள்.

354. பசுபாச விமோதினீ: சீவர்களின் தளைகளை நீக்குபவள்.

355. ஸம்ருதா சேஷ-பாஷண்டா: வேதங்களுக்கு மாறான ஆசாரத்தை (நடத்தை) உள்ளவர்களை அழிப்பவள்.

356. ஸதாசார ப்ரவர்த்திகா: நல்வழியில் செலுத்துபவள்.

தாபத்ரயாக்னி-ஸந்தப்த-ஸமாஹ்லாதன-சந்த்ரிகா ।
தருணீ தாபஸாராத்யா தனுமத்யா தமோபஹா ॥ 79 ॥

357. மூன்று விதமான தாபங்களால் எரிக்கப்படும் ஜீவனை அம்பாள் தன் கருணையாகிற நிலவினால், அவனுடைய தாபத்தை நீக்கி மகிழ்விக்கிறாள். மூன்று தாபங்கள் பின்வருமாறு.

1. ஆத்யாத்மிகம்: மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் ஞானேந்திரியங்கள் (5) கர்மேந்திரியங்கள் (5)- இவைகள் அடங்கிய சரீரத்தை ஒட்டியது.

2. ஆதிபௌதிகம்: பஞ்ச பூதங்களால் ஏற்படுவது.

3. ஆதிதைவிகம்: தேவதைகளால் ஏற்படுவது.

358. தருணீ: எப்போதும் யுவதியாக இருப்பவள்

359. தாபஸாராத்யா: தபஸ்விகளால் ஆராதிக்கப்படுபவள்.

360. தனுமத்யா : நுண்ணிய இடையுள்ளவள்.

361. தமோபஹா: அஞ்ஞான மென்ற இருளைப் போக்குபவள்.

சிதிஸ்-தத்பத-லக்ஷ்யார்த்தா சிதேகரஸ-ரூபிணீ ।
ஸ்வாத்மாநந்த-லவீபூத-ப்ரஹ்மாத்யானந்த-ஸந்ததி: ॥80॥

362. சிதி: ஞானவடிவினள்.

363.தத்பத-லக்ஷ்யார்த்தா: தத்-த்வ-மஸி என்ற மஹாவாக்யத்தில்-'தத்' என்ற சொல்லின் பொருளாக இருப்பவள்.

364. சிதேகரஸ-ரூபிணி முழுதும் ஞானமே வடிவானவள்.

365. ப்ரஹ்மா முதலியவர்களின் ஆனந்தம், அன்னையின் ஆனந்தத்தின் ஒரு திவலையை விட சிறியது.

பரா ப்ரத்யக்-சிதீ-ரூபா பச்யந்தீ பரதேவதா ।
மத்யமா வைகரீரூபா பக்த-மானஸ ஹம்ஸிகா ।। 81 ।।

366. பரா-பரா என்கிற சப்த ஸ்வரூபிணீ.

367. ப்ரத்யக்-சிதீ ரூபா: அறிவை உள்நோக்காகச் செய்பவள்.

368. பச்யந்தி: பச்யந்தீ என்ற வாக் ஸ்வரூபமாக இருப்பவள்.

369. பரதேவதா: எல்லா தேவதைகளுக்கும் சக்தியளிப்பவள்.

370. மத்யமா: மத்யமா வடிவாக இருப்பவள்.

371. வைகரீ: வைகரீ வாக்கு வடிவானவள்.

372. பக்தமானஸ ஹம்ஸிகா-பக்தர்களின் மனமாகிய ஏரியில் அன்னப்பறவை போல் விளங்குபவள்.

காமேச்வர-ப்ராணநாடீ க்ருதஜ்ஞா காமபூஜிதா ।
ச்ருங்கார-ரஸ-ஸம்பூர்ணா ஜயா ஜாலந்தர ஸ்திதா ।। 82।।

373. காமச்வர-ப்ராணநாடீ: காமேசுவரருடைய ஜீவநாடி. அமரர் அமுதுண்டும் அழிந்தனர். ஆனால் அரன் ஹாலாஹல விஷத்தை உண்டும் உயிரோடிருப்பது தேவி அவர் பிராணநாடியாக இருப்பதே! அபிராமிபட்டர். அபிராமி அந்தாதியில் (5) வார்சடையோர் அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை என்பர். அபயாம்பிகை பட்டர். அபயாம்பிகை சதகத்தில் ‘மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே அபயாம்பிகைத்தாயே’ என்பர்.

374. க்ருதக்ஞா: (எல்லோரும் செய்யும்) எல்லாக் காரியங்களையும் அறிபவள். (அன்னை எல்லோர் உள்ளும் உறைபவள் அல்லவா!

375. காமபூஜிதா: மன்மதனால் பூஜிக்கப்பட்டவள்.

376. ச்ருங்கார-ரஸ-ஸம்பூர்ணா: சிருங்கார ரஸம் நிறைந்தவள் (லலிதா வடிவம்-சிருங்கார ப்ரதானம்)

377. ஜயா : ஜயஸ்வரூபமாக இருப்பவள்.

378. ஜாலந்தர-ஸ்திதா: ஜாலந்திர பீடத்தின் இருப்பவள். (நாதவடிவில்)

ஓட்யாண-பீட-நிலயா பிந்துமண்டல-வாஸிநீ ।
ரஹோ-யாகக்ரமாராத்யா ரஹஸ்தர்பண-தர்ப்பிதா
॥ 83 ॥

379. ஒட்யாண பீடநிலயா: ஒட்யாண பீடத்தில் (பீஜவடிவில்) இருப்பவள்.

380. பிந்துமண்டல வாஸினீ: பிந்து மண்டலத்தில் வசிப்பவள்.

381. ரஹோ-யாக-க்ராமாராத்யா-ரஹஸ்யமான யாக முறையில் வழிபடத்தக்கவள்.

382. ரஹஸ்தர்ப்பண-தர்ப்பிதா: ரஹஸ்ய தர்ப்பணத்தால் த்ருப்தி அடைபவள்.

ஸத்ய:-ப்ரஸாதினீ விச்வஸாக்ஷிணீ ஸாக்ஷிவர்ஜிதா ।
ஷடங்க-தேவதாயுக்தா ஷாட்குண்ய-பரிபூரிதா ॥ 84 ॥

383. ஸத்ய: ப்ரஸாதினீ: உடனே அருள்புரிபவள்.

384. விச்வஸாக்ஷினீ: எல்லாவற்றிற்கும் சாட்சியாக இருப்பவள்.

385. ஸாக்ஷிவர்ஜிதா (தனக்கு) சாட்சி இல்லாதவள்.

386. ஷடங்க-தேவதா-யுக்தா: ஆறு அங்க தேவதைகளுடன் (ஹ்ருதயம், சிரஸ், சிகை தோள்கள், கண்கள், அஸ்த்ரம்) கூடியவள்.

387. ஷாடகுண்யபரிபூரிதா: ஆறு குணங்கள் (செல்வம், தர்மம், கீர்த்தி, ஸ்ரீ, ஞானம், வைராக்யம்) நிறைந்தவள்.

நித்யக்லின்னா நிருபமா நிர்வாணஸுக-தாயினீ ।
நித்யா-ஷோடசிகா-ரூபா ஸ்ரீகண்டார்த்தசரீரிணீ ॥ 85 ॥

388. நித்யக்லின்னா: ஈர நெஞ்சுள்ளவள். (கருணை)

389. நிருபமா: உவமை இல்லாதவள்.

390. நிர்வாண-ஸுக-தாயினீ: மோட்ச சுகம் தருபவள். வாணம்: சரீரம், அதாவது சரீரமில்லாத வார்த்தையால் வர்ணிக்க முடியாத ஆனந்தத்தை (ஆத்மா) தருகிறாள்.

391. நித்யா ஷோடசிகா ரூபா: பதினாறு நித்ய தேவதைகளின் வடிவானவள் (பிரதமை-பூர்ணிமா-15) 16வது தேவதையாயிருப்பவள் 'அம்பாளே'

392. ஸ்ரீகண்டார்த்த-சரீரிணீ : பரமசிவனின் பாதி சரீரமானவள்.

(மிக்கார் அமுதுண்ண நஞ்சுண்ட மேலவன் - திருமந்திரம்)

ப்ரபாவதீ ப்ரபாரூபா ப்ரஸித்தா பரமேச்வரீ ।
மூலப்ரக்ருதி ரவ்யக்தா வ்யக்தாவ்யக்த-ஸ்வரூபிணீ ॥86॥

393. ப்ரபாவதீ : அணிமா முதலிய சக்திகளால் சூழப்பட்டவள்

394. ப்ரபாரூபா : அணிமா முதலிய சக்திகளே தானானவள்

395. ப்ரஸித்தா : பிரசித்தமானவள்.

396. பரமேச்வரீ : பரம்பொருளின் சக்தியாகிற ஈஸ்வரி

397. மூலப்ரக்ருதி : எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமான ப்ருக்ருதி ரூபமாக இருப்பவள்.

398. அவ்யக்தா : வெளிப்படையாகத் தெரியாதவள்

399. வ்யக்தா வ்யக்த-ஸ்வரூபிணீ : வெளிப்படையாகத் தெரிந்தும் தெரியாமலும் இருப்பவள்.

வ்யாபினீவிவிதாகாரா வித்யாவித்யா-ஸ்வரூபிணீ ।
மஹாகாமேச-நயனா-குமுதாஹ்லாத-கௌமுதீ ॥ 87 ॥

400. வ்யாபினீ : எங்கும் வியாபித்திருப்பவள்

401. விவிதாகாரா : பலவித ரூபங்களை உடையவள்.

402. வித்யா வித்யாஸ்வரூபிணி : வித்யை, அவித்யை இரண்டுமாக இருப்பவள்.

403. மஹாகாமேசருடைய குமுதம் போன்ற கண்களை மலரச் செய்யும் நிலவு போன்றவள்.

பக்தஹார்த-தமோபேத-பானுமத்-பானு-ஸந்ததி: ।
சிவதூதீ சிவாராத்யா சிவமூர்த்தீ: சிவங்கரீ ।। 88 ।।

404. பக்தர்களின் இதயத்திலிருக்கும் அக்ஞான இருளை போக்கும் சூரிய கிரகணங்களின் வரிசையாக இருப்பவள்.

405. சிவதூதி : சும்ப-நிசும்பர்களுடன் நடந்த போரில் சிவனே தூது சென்ற பெருமையுடையவள் (கிருஷ்ண பரமாத்மாவும் பாண்டவர்களுக்காக தூது சென்றது).

406. சிவாராத்யா : சிவனால் ஆராதிக்கப்பட்டவள்.

407. சிவமூர்த்தி : சிவனையே தன் மூர்த்தியாகக் கொண்டவள்.

408. சிவங்கரீ : மங்களத்தைச் செய்பவள். (ஸர்வமங்கல மாங்கல்யே-தேவீமஹாத்மியம் 11.10.)

சிவப்ரியா சிவபரா சிஷ்டேஷ்டா சிஷ்டபூஜிதா ।
அப்ரமேயா ஸ்வப்ரகாசா மனோவாசாமகோசரா ।।89।।

409. சிவப்ரியா : சிவனுக்கு ப்ரியமானவள்.

410. சிவபரா : சிவனுக்கும் மேற்பட்டவள். தன் பக்தர்களுக்கு சிவனைக் காண்பிப்பவள்.

411. சிஷ்டேஷ்டா : சிஷ்டர்களை விரும்புபவள்.

412. சிஷ்டபூஜிதா : சிஷ்டர்களால் பூஜிக்கப்பட்டவள்.

413. அப்ரமேயா : அளவிட முடியாதவள்.

414. ஸ்வப்ரகாசா : ஸ்வயம் பிரகாசமானவள்.

415. மனோ-வாசா மகோசரா : மனதிற்கும் வாக்கிற்கும் எட்டாதவள்.

சிச்சக்திச்-சேதனா-ரூபாஜடசக்திர் ஜடாத்மிகா ।
காயத்ரீ வ்யாஹ்ருதி: ஸந்த்யா த்விஜப்ருந்த-நிஷேவிதா ॥ 90॥

416. சிச்சக்தி : ஞானசக்தி ஸ்வரூபமாக இருப்பவள்.

417. சேதனா ரூபா : சைதன்ய ரூபியாக இருப்பவள்.

418. ஜடசக்தி : ஜகத்தை சிருஷ்டிக்க உபயோகப்படும் மாயையின் பரிணாம விசேஷம் 'ஜடசக்தி' எனப்படும்.

419. ஜடாத்மிகா: ஜட ப்ரபஞ்சமாகவும் இருப்பவள்.

420. காயத்ரீ: காயத்ரீ ரூபமாக இருப்பவள்.

421. வ்யாஹ்ருதி: மந்திர விசேஷங்கள் ரூபமாக இருப்பவள்.

422. ஸந்த்யா: ஸந்த்யா தேவியாக இருப்பவள்.

423. த்விஜ வ்ருந்த நிஷேவிதா: ஜீவராசிகளால் சேவிக்கப்பட்டவள். காயத்ரீயும் ப்ரஹ்மமும் ஒன்றே. த்விஜர் (ப்ராஹ்மணர், க்ஷத்ரியர், வைஸ்யர்) களால் உபாசிக்கப்படுகிறவள். (தாயாரிடம் முதற் பிறப்பு, பின் உபநயனம்-2வது பிறப்பு-த்விஜா) ஸந்த்யா-ரேணுகா.

தத்வாஸனா தத்வமயீ பஞ்சகோசாந்தர-ஸ்திதா ।
நிஸ்ஸீம-மஹிமா நித்ய-யௌவநா மதசாலினீ ॥ 91 ॥

424. தத்வங்களையே ஆஸனமாக உடையவள்.

425. தத் அது. தத்ரூபமானவள்.

426. த்வம்-நீ.

427. அயீ: அயி என்று அழைக்கப்படுபவள். தாய், சகோதரி போன்றவர்களை அன்புடன் அழைக்கும் சொல். மஹிஷாஸுரமர்தினீ ஸ்லோகம், 'அயிகிரி நந்தினி'.

428. பஞ்ச கோ சாந்த்ர-ஸ்திதா: ஐந்து கோசங்களுக்கு நடுவில் இருப்பவள். (அன்னமய, ப்ராணமய, மனோமய, விக்ஞானமய, ஆனந்தமய)

429. நிஸ்ஸீம-மஹிமா: எல்லையில்லா மகிமை வாய்ந்தவள்

430. நித்யெளவன: என்றும் யெளவனத்துடன் இருப்பவள்.

431. மதசாலினீ: ஆனந்த களிப்பால் பிரகாசிப்பவள்.

மதகூர்ணித-ரக்தாக்ஷீ மதபாடல-கண்டபூ: ।
சந்தன-த்ரவ-திக்தாங்கீ சாம்பேய-குஸும-ப்ரியா ।।92।।

432. மதகூர்ணித-ரக்தாக்ஷீ: மதத்தினால் சுற்றிக் கொண்டு இருக்கும் கண்களை உடையவள்.

433. மதபாடல கண்டபூ: மதத்தால் வெண் சிவப்பாக இருக்கும் கன்னங்களை உடையவள்.

434. சந்தன த்ரவ-திக்தாங்கீ: அரைத்த சந்தனத்தால் பூசப்பட்ட அங்கங்கள் உடையவள்.

435. சாம்பேயகுஸுமப்ரியா: சம்பகப்பூவில் ப்ரியம் உள்ளவள்.

குசலா கோமலாகாராகுருகுல்லா குலேச்வரீ ।
குலகுண்டாலயாகௌலமார்க்க-தத்பர-ஸேவிதா ।। 93 ।।

436. குசலா: திறமையுள்ளவள்.

437. கோமலாகாரா: மிருதுவான, அழகிய சரீரம் உடையவள்.

438. குருகுல்லா: குருகுல்லா எனும் தேவியின் ரூபமானவள். ஸ்ரீநகரத்தில் அஹங்காரம், சித்தம் என்ற இரு பிரகாரங்களின் நடுவில்

விமர்சம் என்னும் வாபியில் (கிணறு) அதிஷ்டானமாக இருப்பவள். குருகுல்லா தேவி. இங்கு வராஹியை ‘பிதா’ என்றும், குருகுல்லா தேவியை ‘மாதா’ என்றும் அழைப்பர்.

439. குலேச்வரீ: குலத்திற்கு ஈசுவரி

440. குலகுண்டாலயா: மூலாதார பிந்து குலகுண்டம். அதை ஆலயமாக (இருப்பிடமாக) கொண்ட குண்டலினீ சக்தி.

441. கௌலமார்க்க-தத்பர-ஸேவிதா: கௌல முறையில் ஈடுபட்டவர்களால் வழிபடப்பட்டவள்.

குமாரகணநாதாம்பா துஷ்டி: புஷ்டிர்-மதிர்-த்ருதி: ।
சாந்தி:ஸ்வஸ்திமதீ காந்திர்-நந்தினீவிக்நநாசினீ ॥ 94 ॥

442. குமார-கணநாதாம்பா: முருகன் கணபதி-தாய்

443. துஷ்டி: த்ருப்தியுடன் இருப்பதை ரூபமாக உடையவள்.

444. புஷ்டி: புஷ்டி ரூபமாக இருப்பவள்.

445. மதி: அறிவு ரூபமாக இருப்வள்.

446. த்ருதி: தைர்ய ரூபமாக இருப்பவள்.

447. சாந்தி: அமைதியே வடிவானவள்.

448. ஸ்வஸ்திமதி - உண்மையாக (சோபனமாக) இருப்பவள்.

449. காந்தி: காந்திரூபமாக இருப்பவள் (இச்சா சக்தி)

450. நந்தினீ: நந்தகோபரின் மகள் (காமதேனுவின் பெண்) - கங்கையின் ஸ்வரூபம்.

451. விக்னநாசினீ: இடையூறுகளைப் போக்குபவள்.

தேஜோவதீ த்ரிநயநா லோலாக்ஷீ- காமரூபிணீ ।
மாலினீ ஹம்ஸினீ மாதா மலயாசல-வாஸினீ ॥ 95 ॥

452. தேஜோவதீ: தேஜஸ்ஸை உடையவள்.

453. த்ரிநயனா: மூன்று கண்களை உடையவள்.

454. லோலாக்ஷீ-காமரூபிணீ: ஸ்த்ரீகளின் அன்பு வடிவானவள். அன்னையின் அன்பு அத்தனுடன் நின்று விடுவதில்லை. அனைத்து அன்பர்களுக்கும் அருளப்படுகிறது.

455. மாலினீ: மாலையை அணிந்தவள் (7-வயது கன்னிகை)

456. ஹம்ஸினீ: அன்னப்பறவைகளோடு கூடியவள். அன்னங்கள் அன்னையின் நடையழகில் மனதை பறிகொடுத்து அவளை பின் தொடர்ந்து செல்கின்றன. (ஸௌந்தர்ய லஹரீ-91) பரமஹம்ஸர்கள் துதித்துக் கொண்டே இருப்பதால்-ஹம்ஸினீ எனப்படுகிறாள். 'ஹம்ஸ'-அஜபா மந்திரத்தைக் குறிக்கும்.

457. மாதா: தாயார். அன்னை வடிவினள். (உலகீன்ற அன்னையே, கன்னியென மறைபேசும் ஆனந்த ரூபமயிலே'-தாயுமானவர்)

458. மலயாசல-வாஸினீ: மலயாசலத்தில் (மலய பர்வதம்) வஸிப்பவள். மலையாள பகவதீ எனப் பிரசித்தமானவள்.

ஸுமுகீ நலினீ ஸுப்ரூ: சோபனா ஸுரநாயிகா ।
காலகண்டீ காந்திமதீ க்ஷோபிணீ ஸூக்ஷ்மரூபிணீ ॥96॥

459. ஸுமுகீ: அழகிய முகம் உடையவள்.

460. நலினீ: தாமரைப்பூ போன்றவள்.

461. ஸுப்ரூ: அழகிய புருவங்களை உடையவள்.

462. சோபனா: மிக அழகுடையவள்.

463. ஸுரநாயிகா: தேவர்களுக்கு தலைவி, ஈஸ்வரி

464. காலகண்டீ: கால கண்டருடைய பத்னீ: விஷம் அருந்திய பரமேச்வரனுக்கு-நீலகண்டர் காலகண்டர் என்ற பெயர்கள் உண்டு (கழுத்தில் கரிய நிறம் தெரிவதால்).

465. காந்திமதீ: காந்தியோடு கூடியவள்.

466. க்ஷோபிணீ: உணர்ச்சிக் கொந்தளிப்பை உண்டாக்குபவள்.
467. ஸூக்ஷ்மரூபிணி: நுண்ணிய ரூபத்தை உடையவள்.

வஜ்ரேச்வரீ வாமதேவீ வயோவஸ்தா-விவர்ஜிதா ।
ஸித்தேச்வரீ ஸித்தவித்யா ஸித்தமாதா யசஸ்வினீ ॥97॥

468. வஜ்ரேச்வரி: வஜ்ரேச்வரீ வடிவினள் (ஜாலந்தர பீடத்தின் அதிதேவதை)

469. வாமதேவீ: சிவபெருமானின் ஐந்து முகங்களில் வடக்கு நோக்கிய முகமாய் இருக்கும் வாமதேவரின் பத்னீ.

470. வயோவஸ்தோ விவர்வஜிதா: வயதால் மாறுதல்கள் இல்லாதவள்.

471. ஸித்தேச்வரி: ஸித்தர்களுக்கு ஈஸ்வரி.

472. ஸித்த வித்யா: சாஸ்வதமான வித்யையாக இருப்பவள்.

473. ஸித்தமாதா: ஸித்தர்களுக்குத் தாய்.

474. யசஸ்வினீ: கீர்த்தி வாய்ந்தவள்.

விசுத்தி-சக்ர-நிலயா-ஆரக்தவர்ணா த்ரிலோசனா ।
கட்வாங்காதி-ப்ரஹரணா வதனைக-ஸமன்விதா ॥ 98 ॥

475. விசுத்தி-சக்ர-நிலயா: விசுக்தி சக்ரத்தில் இருப்பவள்.

476. ஆரக்தவர்ணா: சிவந்த வெண்ணிறமானவள்.

477. த்ரிலோசனா: மூன்று கண்களை உடையவள்.

478. கட்வாங்காதி-ப்ரஹரணா: கட்வாங்கம் முதலிய ஆயுதங்களை உடையவள்.

479. வதனைக-ஸமன்விதா: ஒரு முகம் உடையவள்.

பாயஸான்ன-ப்ரியா வக்ஸ்தா பசுலோகபயங்கரீ ।
அம்ருதாதி-மஹாசக்தி ஸம்வ்ருதா டாகினீச்வரீ ॥ 99 ॥

480. பாயஸான்ன-ப்ரியா: பாயஸ அன்னத்தில் பிரியம் உள்ளவள்.

481. த்வக்ஸ்தா: தோல் தாதுவின் அபிமானி தேவதை.

482. பசுலோக பயங்கரீ: பசுக்களுக்கு (அத்வைத ஞான மற்றவர்களுக்கு) பயத்தைத் தருபவள்

483. அம்ருதாதி மஹாசக்தி ஸம்வ்ருதா-அமிருதா (கர்ஷிணீ, இந்திராணீ, உமா, ஊர்த்துவ கேசி) முதலிய மஹாசக்திகளால் சூழப்பட்டவள்.

484. டாகினீஸ்வரி: டாகினீஸ்வரி என்ற பெயர் உள்ளவள்.

அநாஹதாப்ஜ-நிலயா ச்யாமாபா வதனத்வயா ।
தம்ஷ்ட ரோஜ்வலாக்ஷமாலாதி-தரா ருதிர ஸம்ஸ்திதா ॥100॥

485. அனாஹதாப்ஜ நிலயா: அநாஹதம் என்ற தாமரையில் இருப்பவள். (இதயத்தில்) 12 இதழ்கள் உள்ளது-வாயுஸ்தானம்

486. ச்யாமாபா: பசுமை கலந்த கருப்பு (மேகம்போல்) நிறம் உள்ளவள். (16-வயது கன்யை)

487. வதன த்வயா: இரண்டு முகங்கள் (ஆகாசம், வாயு) உடையவள்.

488. தம்ஷ்ட ரோஜ்வலா: கோரைப் பற்களுடன் பிரகாசிப்பவள்.

489. அக்ஷமாலாதி-தரா: அக்ஷமாலை (அ-க்ஷ எழுத்துகள் அல்லது 51-மணிகள் கொண்டது) அணிந்திருப்பவள்.

490. ருதிர ஸ்ம்ஸ்திதா: இரத்த தாதுவின் அபிமானி தேவதை.

காலராத்ர்யாதி-சக்த்யௌக-வ்ருதா
ஸ்நிக்தௌதனப்ரியா ।
மஹாவீரேந்த்ர-வரதா ராகிண்யம்பா ஸ்வரூபிணீ
॥101॥

491. காலராத்ர்யாதி-சகத்யௌகவ்ருதா: காலராத்ரீ முதலிய சக்திகளின் கூட்டத்தால் சூழப்பட்டவள். 492. ஸ்நிக்தௌதனப் பரியா: நெய்கலந்த அன்னத்தில் ப்ரியமுள்ளவள்.

493. மஹாவீரேந்த்ர வ்ரதா: மஹா வீரர்களின் தலைவர்களுக்கு வரங்களைத் தருபவள்.

494. ராகிண்யம் பா ஸ்வரூபிணீ: ராகிணீ யோகினியின் ரூபத்தை உடையவள்.

மணிபூராப்ஜ-நிலயா வதனத்ரய-ஸம்யுதா ।
வஜ்ராதிகாயுதோபேதா டாமர்யாதிபி-ராவ்ருதா ॥102 ॥

495. மணிபூராப்ஜ நிலயா: நாபியில் உள்ள மணிபூரம் என்ற 10 தளங்கள் உடைய தாமரையில் இருப்பவள்.496. வதனத்ரயஸம்யுதா: மூன்று முகங்களோடு கூடியவள். (ஆகாசம், வாயு, அக்னி), என 3 தத்வங்கள்) 497. வஜ்ராதிகாயுதோபேதா: வஜ்ரம், சக்தி, தண்டம், அபயம் ஆகிய ஆயுதங்களுடன் கூடியவள்.

498. டாமர்யாதிபிராவ்ருதா: டாமரீ முதலியவர்களால் சூழப்பட்டவள்.

ரக்தவர்ணா மாம்ஸநிஷ்டா குடான்ன-ப்ரீத-மானஸா ।
ஸமஸ்த பக்த-ஸுகதா லாகிந்யம்பா-ஸ்வரூபிணீ
॥103॥

499. ரக்தவர்ணா: சிவப்பு நிறமுள்ளவள்

500. மாம்ஸ நிஷ்டா: மாம்ஸத்தில் அபிமானம் உள்ளவள்.

501. குடான்ன ப்ரீத மானஸா: வெல்லம் கலந்த அன்னத்தில் மனத்ருப்தி அடைகிறவள்.

502. ஸம்ஸ்த-பக்த ஸுகதா: எல்லா பக்தர்களுக்கும் சுகம் தருபவள்

503. லாகின்யம்பா-ஸ்வரூபினீ: லாகினீ அம்பாளின் வடிவம் கொண்டவள்.

ஸ்வாதிஷ்டாநாம்புஜகதா சதுர்வக்த்ர-மநோஹரா ।
சூலாத்யாயுத-ஸம்பந்நா பீதவர்ணாகுதிகர்விதா ॥104॥

504. ஸ்வாதிஷ்டானம் புஜகதா: (ஆறுதள) ஸ்வாதிஷ்டான கமலத்தில் இருப்பவள்.

505. சதுர் வக்த்ர-மனோஹர: நான்கு அழகிய திருமுகங்களை உடையவள்.

506. குலாத்யாயுத-ஸம்பன்ன-குலம், பாசம், கபாலம் ஆகியு ஆயுதங்களை உடையவள்.

507. பீதவர்ணா: பொன் நிறமானவள்.

508. அதிகர்வதா: (அழகினால்) மிக்க கர்வம் உள்ளவள்.

மேதோநிஷ்டா மதுப்ரீதா பந்திந்யாதி-ஸமன்விதா ।
தத்யன்னாஸக்த-ஹ்ருதயா காகினீ-ரூப-தாரிணீ ॥105॥

509. மேதோ-நிஷ்டா: மேதஸ் (கொழுப்பு) தாதுவில் இருப்பவள். 510. மதுப்ரீதா: தேனில் ப்ரியமுள்ளவள் (தேன் ஹோமம் தேவிக்கு மிகப் பிரியமானது)

511. பந்தின்யாதி ஸமன்விதா: பந்தினீ, பத்ர காளி, மஹாமாயா-இவர்களால் சூழப்பட்டவள்.

512. தத்யன்னாஸக்த-ஹ்ருதயா: தயிர் சாதத்தில் ப்ரிய முள்ளவள்.

513. காகினீரூப-தாரிணீ: காகினீ தேவியின் ரூபத்தை உடையவள்.

மூலாதாராம்புஜாரூடா பஞ்சவக்த்ராஸ்தி-ஸம்ஸ்திதா ।
அங்குசாதி-ப்ரஹரணா வரதாதி-நிஷேவிதா ॥106 ॥

514. மூலதாரம்புஜாரூடா: மூலாதார தாமரையில் இருப்பவள்.

515. பஞ்சவக்த்ரா: ஐந்து திருமுகங்கள் உடையவள்.

516. அஸ்திஸம்ஸ்திதா: அஸ்தி (எலும்பு) தாதுவில் இருப்பவள்.

517. அங்குசாதி-ப்ரஹரணா: அங்குசம், தாமரை, புஸ்தகம், ஞானமுத்ரை ஆகியவற்றை உடையவள்.

518. வரதாதி நிஷேவிதா: வரதா, ஸ்ரீ ஷண்டா, ஸரஸ்வதி முதலிய சக்திகளால் வழிபடப்பட்டவள்.

முத்கௌதனாஸக்த-சித்தா ஸாகின்யம்பா-ஸ்வரூபிணீ ।
ஆஜ்ஞா-சக்ராப்ஜநிலயா சுக்லவர்ணாஷடானனா ॥107॥

519. முத்கௌதனாஸக்த-சித்தா-பயறு தான்யத்தை முக்யமாக கொண்ட அன்னத்தில் (பொங்கல்) பிரியமுள்ளவள்.

520. ஸாகின்யம்பா-ஸ்வரூபிணி: ஸாகினீ அம்பாள் ரூபம் உடையவள்.

521. ஆக்ஞா-சக்ராப்ஜ நிலயா: (இரண்டு தள) ஆக்ஞா சக்ரத் தாமரையில் இருப்பவள்.

522. சுக்ல வர்ணா: வெண்ணிறமானவள். 523. ஷடானனா: ஆறுமுகம் உள்ளவள்.

மஜ்ஜா-ஸம்ஸ்தா ஹம்ஸவதீ-முக்ய-சக்தி ஸமன்விதா ।
ஹரித்ரான்னைக-ரஸிகா ஹாகிநீ-ரூபதாரிணீ ॥ 108 ॥

524. மஜ்ஜா ஸமஸ்தா: மஜ்ஜா தாதுவின் அபிமானி தேவதை.

525. ஹம்ஸவதீமுக்ய சக்தி ஸமன்விதா: ஹம்ஸா ஸ்ரீக்ஷமாவதி முதலிய சக்திகளால் சூழப்பட்டவள்.

526. ஹரித்ரான்னைக-ரஸிகா: மஞ்சள் கலந்த அல்லது மஞ்சள் நிற அன்னத்தை ரஸிப்பவள்.

527. ஹாகினீரூப தாரிணீ: 'ஹாகினீ' எனப் பெயர் பெற்ற ரூபம் தரித்தவள்.

ஸஹஸ்ரதள-பத்மஸ்தா ஸர்வ-வர்ணோப-சோபிதா ।
ஸர்வாயுத-தரா சுக்ல ஸம்ஸ்திதா ஸர்வதோமுகீ ।।109।।

528. ஸஹஸ்ரதள-பத்மஸ்தா: ஆயிரம் தளமுடைய கமலத்தில் இருப்பவள்.

529. ஸர்வ-வர்ணோப-சோபிதா- எல்லா வர்ணங்களாலும் ப்ரகாசிப்பவள்.

530. ஸர்வாயுத-தரா-எல்லா ஆயுதங்களையும் தரித்தவள்.

531. சுக்ல ஸம்ஸ்திதா: ஶுக்ல (வீர்ய) தாதுவின் அபிமானி தேவதை

532. ஸர்வதோமுகீ: எல்லா திக்குகளிலும் முகம் உடையவள். (நாமா-780 விச்வதோமுகீ-இதேபொருள். விஸ 816-ஸர்வதோமுகம்)

ஸர்வெளதன-ப்ரீதசித்தா யாகின்யம்பா-ஸ்வரூபிணீ ।
ஸ்வாஹா ஸ்வதாகுமதிர்மேதா ச்ருதிஸ்ம்ருதிரனுத்தமா ।।110।।

533. ஸர்வௌதன-ப்ரீதசித்தா: எல்லா அன்னங்களிலும் ப்ரீதியுள்ளவள்.

534. யாகின்யமபா-ஸ்வரூபிணீ: யாகினீ அம்பாளின் ஸ்வரூபத்தை உடையவள்.

535. ஸ்வாஹா-ஸ்வாஹா ரூபமானவள்.

536. ஸ்வதா-ஸ்வதா என்ற ரூபமானவள்.

537. அமதி: அவித்யாரூபமாக இருப்பவள்.

538. மேதா-புத்தியாக இருப்பவள்.

539. ச்ருதி-வேதரூபினீ

540. ஸ்ம்ருதி: ஸ்ம்ருதிகளின் ரூபமாக இருப்பவள்.

541.அனுத்தமா-தனக்கு மேற்பட்டவர் இல்லாதவள்.

புண்யகீர்த்தி: புண்யலப்யா புண்ய-ச்ரவண-கீர்த்தனா ।
புலோமஜார்ச்சிதா-பந்தமோசனீ பர்ப்பராலகா ।।111।।

542. புண்ய கீர்த்தி: புண்யத்தை தரும் புகழை உடையவள்.

543. புண்ய லப்யா: புண்யத்தால் அடையக் கூடியவள்.

544. புண்ய ச்ரவண கீர்த்தனா: தன் பெருமையக் கேட்பவர்க்கும் கீர்த்தனம் செய்பவர்க்கும் புண்யம் அளிப்பவள்.

545. புலோமஜார்ச்சிதா: இந்திராணியால் பூஜிக்கப்பட்டவள்.

546.பந்தமோசனீ: பிறவித்தளைகளினின்று விடுவிப்பவள்.

547. பர்ப்பராலகா: அலைகள்போல் அடுக்கடுக்காக சுருண்ட முடியுள்ளவள்.

விமர்ச-ரூபிணீ வித்யா வியதாதி-ஜகத்ப்ரஸூ: ।
ஸர்வவ்யாதி-ப்ரசமனீஸர்வம்ருத்யு-நிவாரிணீ ।। 112 ।।

548. விமர்சரூபிணீ: விம்ர்ச வடிவினள் (சிவன்-ப்ரகாசம் சக்தி-விமர்சம் இதுவே அர்த்த நாரீச்வரர் தத்வம்).

வாகர்த்தா விவஸம் ப்ருக்தௌ-ரகுவம்சம். (வாக்-விமர்சனம்-சக்தி, அர்த்தம்-சிவன்- ப்ரகாசம் பொருள்).

549. வித்யா: மோக்ஷம் தரும் வித்யையாக இருப்பவள்.

550. வியதாதி-ஜகத்ப்ரஸூ: ஆகாயம்-ஜகம் ஈன்றவள்.

551. ஸர்வ வியாதி ப்ரசமனீ: எல்லா வ்யாதிகளையும் போக்குபவள்.

552. ஸர்வம்ருத்யு நிவாரிணீ: எல்லாவித மரணங்களையும் தவிர்ப்பவள்.

அக்ரகண்யாகுசிந்த்யரூபா கலிகல்மஷ-நாசினீ ।
காத்யாயனீ காலஹந்த்ரீ கமலாக்ஷ-நிஷேவிதா ॥113॥

553. அக்ரகண்யா: முதலாவதாக எண்ணப்படுகிறவள்.

554. அசிந்த்யரூபா: மனதிற்கும், வாக்கிற்கும் எட்டாதவள். (திருமூலர், அபிராமியை-'அகோசரி' என்பார் திருமந்திரம்-1048)

555. கலிகல்மஷநாசினீ: கலி தோஷத்தைப் போக்குபவள்) தெரிந்தும், தெரியாமல் செய்த பாபங்களுக்கு ப்ராயசித்தம்-'அம்பாளின் நாம கீர்த்தனம்; அவள் பாதத்தை நினைப்பது' .

556. காத்யாயினீ: கதர் என்ற ரிஷியின் மகள். துர்கா ஸப்தசதீ கவசம்: துர்கையின் 9 பெயர்களில், 6வது நாமம். 557. காஹந்த்ரீ: காலனை அழிப்பவள்.

558. கமலாக்ஷ-நிஷேவிதா: தாமரைக் கண்ணாகிய மஹாவிஷ்ணுவால் ஸேவிக்கப்பட்டவள்.

தாம்பூல-பூரித-முகீ தாடிமீ-குஸுமப்ரபா ।
ம்ருகாக்ஷீ மோஹினீ முக்யா ம்ருடானீ மித்ரரூபிணீ ॥14॥

559. தாம்பூல-பூரித-முகி: தாம்பூலம் நிறைந்த முகத்தினள்.

560. தாடிமீ-குஸும-ப்ரபா: மாதுளம்பூ போன்ற சிவந்த மேனி படைத்தவள். (மாதுளம் பூ நிறத்தாளை-அபிராமி அந்தாதி).

561. ம்ருகாக்ஷீ: மான்விழியாள்

562. மோஹினீ: மோஹிக்கச் செய்பவள்.

563. முக்யா: முதன்மையானவள்.

564. ம்ருடானீ: ம்ருடன் (சிவன்) பத்னீ. சுகத்தை அளிப்பவள்.

565. மித்ர ரூபிணீ: சூரியன் 12 பெயர்களின் மித்ரன் என்பதும் ஒன்று. சூரிய வடிவினள். நண்பன் வடிவினள். (அக்னி-சிவன், சந்திரன்-அம்பாள், சூரியன் ஸாமரஸ்யம்)

நித்யத்ருப்தா பக்தநிதிர்-நியந்த்ரீ நிகிலேச்வரீ ।
மைத்ர்யாதி-வாஸநாலப்யா மஹாப்ரலய ஸாக்ஷிணீ ॥115॥

566. நித்ய த்ருப்தா: எப்பொழுதும் த்ருப்தியுடன், மனநிறைவுடன் உள்ளவள்.

567. பக்தநிதி: பக்தர்களின் பொக்கிஷம்

568. நியந்தரீ: அடக்கி ஆள்பவள்

569. நிகிலேச்வரீ: எல்லாவற்றிற்கும் ஈஸ்வரி

570. மைத்ர்யாதி வாஸனாலப்யா: மைத்ரிமுதலிய நான்கு வாசனைகளால் அடையப்படுபவள். 1. சுகத்தோடு இருப்பவரிடம் ‘நட்பு’. 2. கஷ்டப்படுபவரிடம் ‘கருணை’ 3. புண்யவான்களோடு சந்தோஷப்படுவது (முதிதா) 4. பாவிகளைத் தவிர்ப்பது (உபேக்ஷா). இவ்வாசனைகள் சித்தத்தை பரிசுத்தமாக்கி ‘அம்பாளை’ அடைய உதவுகின்றன.

571. மஹாப்ரளய ஸாக்ஷீணீ: மஹா ப்ரளய காலத்தில் ஸாக்ஷியாக இருப்பவள்.

பராசக்தி: பராநிஷ்டா ப்ரஜ்ஞானகன-ரூபிணீ ।
மாத்வீபானாலஸா மத்தா மாத்ருகாவர்ண ரூபிணீ ॥116॥

572. பராசக்தி: மிகவும் உயர்ந்த மேலான சக்தி வடிவினள்.

573. பராநிஷ்டா: மனம், வாக்கு, காயம்-இவற்றின் எல்லையாக இருப்பவள்.

574. ப்ரக்ஞானகன-ரூபிணீ: சுத்த, அடர்ந்த பேரறிவு வடிவானவள்.

575. மாத்வீபானாலஸா: மது அருந்தியதால் சோம்பேறித் தனமாக இருப்பவள்.

576. மத்தா: மயங்கி இருப்பவள்

577. மாத்ருகாவர்ண ரூபிணீ: மாத்ருகா அக்ஷரங்களை (51) வடிவமாகக் கொண்டவள்.

மஹாகைலாஸ-நிலயா ம்ருணால ம்ருது-தோர்லதா ।
மஹநீயா தயாமூர்த்திர்- மஹாஸாம்ராஜ்ய-சாலினீ
।। 117।।

578. மஹாகைலாஸ நிலயா: மஹாகைலாஸத்தில் இருப்பவள்.

579. ம்ருணால-ம்ருது- தோர்லதா: தாமரைத் தண்டில் இருக்கும் நூல் போல மென்மையான கொடி போன்ற கைகளை உடையவள்.

580. மஹனீயா: எல்லோராலும் பூஜிக்கத் தக்கவள்.

581. தயாமூர்த்தி: தயைவடிவினள்.

582. மஹாஸாம்ராஜ்ய சாலினீ: மிகப்பெரிய ஸாம்ராஜ்யத்துடன் விளங்குபவள்.

ஆத்மவித்யா மஹாவித்யா ஸ்ரீவித்யா காமஸேவிதா ।
ஸ்ரீஷோடசாக்ஷரீ-வித்யா த்ரிகூடா காமகோடிகா ।।118।।

583. ஆத்மவித்யா: ஆத்மாவை அறிய உதவும் வித்யையாக இருப்பவள்.

584. மஹாவித்யா: மகத்தான உயர்ந்த வித்யா வடிவினள். (நவதுர்கா வித்யை - மஹாவித்யை எனப்படும்)

585. ஸ்ரீவித்யா: பஞ்சதசீ மந்த்ரமாக (ஸ்ரீ வித்யை) இருப்பவள்.

586. காமஸேவிதா: மன்மதனால் உபாசிக்கப்பட்டவள்.

587. ஸ்ரீஷோடசாக்ஷரீ-வித்யா: 16 எழுத்துக்கள் கொண்ட மந்த்ரமாக இருப்பவள்.

588. த்ரிகூடா: மும்மூன்றுகளான தொகுதிகளின் வடிவினள்.

589. காமகோடிகா: காமகோடியாக இருப்பவள். காஞ்சி காமகோடி பீடத்தில், காமாக்ஷியாக இருப்பவள். (ஸ்ரீ சக்ரத்தில் இருப்பவள்-ஆதிசங்கரர்)

கடாக்ஷகிங்கரீ -பூத-கமலாகோடி-ஸேவிதா ।
சிர:ஸ்திதா சந்த்ரநிபா பாலஸ்தேந்த்ர-தனு:ப்ரபா ।।
119।।

590. கடைக்கண் பார்வையால் இடப்படும் கட்டளைகளை நிறைவேற்றுவதற்காக கிங்கரீகளாக (வேலைக்காரிகள், ஸேவகிகள்) இருக்கும் கோடிக்கணக்கான லட்சுமிகளால் ஸேவிக்கபட்டவள்.

591. சிர: ஸ்திதா: சிரசில் இருப்பவள்

592. சந்த்ர நிபா: சந்திரனைப் போன்ற காந்தியுடையவள். 593. பாலஸ்தா: நெற்றியில் இருப்பவள். ஆக்ஞா சக்ரத்தில் ‘ஹ்ரீம்’ பீஜத்தில் உள்ள பிந்து ரூபமாக இருப்பவள்.

594. இந்த்ரதனுப்ரபா: வானவில்லுக்கு (இந்த தனுஸ்) ஒப்பான ஒளியை உடையவள்.

ஹ்ருதயஸ்தா ரவிப்ரக்யா த்ரிகோணாந்தர-தீபிகா ।
தாக்ஷாயணீ தைத்யஹந்த்ரீ தக்ஷயஜ்ஞவிநாசினீ
।।120।।

595. ஹ்ருதயஸ்தா: ஹ்ருதயத்தில் இருப்பவள்.

596. ரவிப்ரக்யா: சூரியனைப் போன்று காந்தி உடையவள்.

597. த்ரிகோணாந்தர தீபிகா: முக்கோணத்தில் உள்ளே இருக்கும் தீபம் போல் விளங்குபவள்.

598. தாக்ஷாயணீ: தக்ஷனுடைய பெண்.

599. தைத்யஹந்தரீ: அசுரர்களை கொல்பவள்.

600. தக்ஷயக்ஞ விநாசினீ: தக்ஷனுடைய யாகத்தை அழித்தவள்.

தராந்தோளித தீர்க்காக்ஷீ தரஹாஸோஜ்வலன்முகீ ।
குருமூர்த்திர்-குணநிதிர்-கோமாதா குஹஜன்ம-பூ: ॥121॥

601. தராந்தோலித-தீர்காக்ஷீ: சிறிது சலிக்கும் காதுவரை நீண்ட கண்களையுடையவள்.

602. தரஹா ஸோஸ்வலன்முகீ: புன்சிரிப்பினால் பிரகாசிக்கும் முகத்தை உடையவள்.

603. குருமூர்த்தி: குருவின் வடிவானவள்.

604. குணநிதி: குணங்களால் நிரம்பிய பொக்கிஷமானவள்.

605. கோமாதா: (பசுக்கள்) காமதேனு வடிவானவள்.

தேவேசீ தண்டநீதிஸ்தா தஹராகாச ரூபிணீ ।
ப்ரதிபன்-முக்ய-ராகாந்த-திதி-மண்டலபூஜிதா ॥122 ॥

607. தேவேசீ: தேவர்களுக்கு ஈசுவரீ.

608. தண்டநீதிஸ்தா: குற்றம் செய்தவர்களை தண்டிக்கும் நீதி சாஸ்திரத்தில் இருப்பவள்.

609. தஹராகாசரூபிணீ: மனிதனுடைய ஹ்ருதயமாகிற ஸுக்ஷ்மமான குஹையில் ஆகாசமாக விளங்குபவள்.

610. ப்ரதமை முதல் பௌர்ணமி வரை உள்ள திதிகளில் பூஜிக்கப்படுபவள்.

கலாத்மிகா கலாநாதா காவ்யாலாப-விமோதினீ ।
ஸசாமர-ரமா-வாணீ -ஸவ்ய-தக்ஷிண-ஸேவிதா ॥123॥

611. கலாத்மிகா : கலைகளின் வடிவானவள்.

612. கலாநாதா: கலைகளுக்குத் தலைவி.

613. காவ்யாலாய-விமோதினீ: காவிய வர்ணனைகளில் களிப்பவள்.

614. கைகளிலேந்திய சாமரங்களுடன் தேவியின் இடது-வலது பக்கங்களில் லக்ஷ்மீயாலும், ஸரஸ்வதியாலும் ஸேவிக்கப்படுபவள்.

ஆதிசக்தி ரமேயாகுகுத்மா பரமா பாவனாக்ருதி:।
அநேககோடி-ப்ரஹ்மாண்ட-ஜநநீ திவ்ய-விக்ரஹா ॥124॥

615. ஆதிசக்தி: முழு முதல் காரணமாக சக்தியாயிருப்பவள்.

616. அமேயா: அளவிட முடியாதவள். (வி.ஸ. 102, 179-அமேயாத்மா) .

617. ஆத்மா: ஆத்மாவாகவே (ஜீவ வடிவாகவே) இருப்பவள். இப்பதம் ஜீவாத்மாவை குறிக்கும்

618. பரமா: எல்லாவற்றிலும், எல்லா வகையிலும் சிறந்தவள்.

619. பாவனாக்ருதி: பரிசுத்தமே உருக்கொண்டவள்.

620. அநேக கோடிப்ரஹ்மாண்ட ஜனனீ: பலகோடி ப்ரஹ் மாண்டலங்களை ஈன்றெடுத்தவள்.

621. திவ்யவிக்ரஹா: அதிரமணீயமான வடிவுடையவள்.

திவ்ய-ஆகாசம், விக்ரஹ: யுத்தம் சும்பாஸுரனுடன் நடந்த யுத்தத்தில், இருவரும் உயரக் கிளம்பி ஆகாயத்தில் சண்டையிட்டனர். (நாமம்-132. நிராதாரா).

க்லீங்காரீ கேவலா குஹ்யா கைவல்யபத-தாயினீ ।
த்ரிபுரா த்ரிஜகத்வந்த்யா த்ரிமூர்த்திஸ் த்ரிதசேச்வரீ ॥125॥

622. க்லீம்காரீ: க்லீம் எனும் காமராஜ பீஜ வடிவானவள்.

623. கேவலா:தனித்த வடிவினாள்.

624. குஹ்யா: அதி ரஹஸ்யமானவள்.

625. கைவல்ய பததாயினீ: உயர்ந்த மோட்சம் அருள்பவள்.

626. த்ரிபுரா: மும்மூர்த்திகளுக்கும் முந்தியவள். மும்மூன்று வடிவான எல்லாவற்றிலும் உறைபவள்

627. த்ரிஜகத்-வந்த்யா: மூன்று உலகங்களாலும் வணங்கப்பெற்றவள்

628. த்ரிமூர்த்தி: மும்மூர்த்தி வடிவானவள்.

629. த்ரிதசேச்வரீ: தேவர்களின் ஈசுவரி

த்ர்யக்ஷரீ திவ்யகந்தாட்யா ஸிந்தூர-திலகாஞ்சிதா ।
உமா சைலேந்த்ர-தனயா கௌரீ கந்தர்வ-ஸேவிதா ॥126॥

630. த்ரியக்ஷரீ: மூன்று எழுத்துக்களின் வடிவினள்.

631. திவ்ய-கந்தாட்யா: தெய்வீக மணத்தால் நிறைந்தவள்.

632.ஸிந்தூர-திலகாஞ்சிதா நெற்றியில் சிந்தூரப் பொட்டினால் அலங்கரிக்கப்பட்டவள்.

633. 'உமா' உமா என்ற சிறந்த பெயரை உடையவள். தேவி-இமவானுக்கும், மேனாவிற்கும் பார்வதி என்ற பெயரில் புதல்வியாகத் தோன்றினாள். பரமேஸ்வரனை பதியாக அடைய, தனது ஐந்து வயதில் தவம் செய்ய ஆரம்பித்தபோது மேனா, 'உ' என்று விளித்து, 'மா'(தவம் செய்ய வேண்டாம்) என்று கூறியதால் - 'உமா' என்று பெயர்.

உமா-தேவி ப்ரணவம்

- உ+ம+அ

- விஷ்ணு+சிவன்+ப்ரஹ்மா

- ஆறு வயது கன்யகா

இந்த்ரனுக்கு ப்ரஹ்மத்தை உபதேசித்தவள்.

634. சைலேந்த்ர-தனயா: மலையரசனின் மகள்.

635. கௌரீ: வெண்ணிறமானவள் (10 வயது கன்னிகை) சும்ப நிசும்பர்களை ஸம்ஹரித்த மஹா ஸரஸ்வதி இவள் தேஹத்திலிருந்து ஆவிர்பவித்தாள்.

636. கந்தர்வ ஸேவிதா: கந்தர்வர்களால் ஸேவிக்கப்பட்டவள். சீடர்கள் விசுவாவஸு களால் பாடப் பெற்றவள்.

விச்வகர்ப்பா ஸ்வர்ண-கர்ப்பாஅவரதா வாகதீச்வரீ ।
த்யானகம்யா-குபரிச்சேத்யா ஜ்ஞானதா
ஜ்ஞானவிக்ரஹா ॥127॥

637. விச்வகர்பா: உலகை தன்வயிற்றில் தாங்கியவள்.

638. ஸ்வர்ண கர்பா: ஹிரண்ய கர்ப வடிவானவள்.

639. அவரதா: அசுரர்களை (நேர்மையற்றவர்களை) அடக்கியவள்.

640. வாகதீச்வரி: வாக்கிற்கு ஈசுவரி.

641. த்யானகம்யா: த்யானத்தால் அடைபவள்.

642. அபரிச்சேத்யா: எவ்வகையிலும் பிரிக்க/ பகுக்க முடியாதவள்.

643. ஞானதா: ஞானத்தை தருபவள்.

ஸர்வ வேதாந்த-ஸம்வேத்யா ஸத்யாநந்த-ஸ்வரூபிணீ। லோபாமுத்ரார்ச்சிதா லீலாக்லுப்த-ப்ரஹ்மாண்ட-மண்டலா ॥128॥

644. ஞான விக்ரஹா- ஞானமே வடிவானவள்.

645. ஸர்வ வேதாந்த-ஸம்வேத்யா: எல்லா உபநிஷத்துக்களாலும் நன்கு அறியப்பட்டவள்.

646. ஸத்யானந்த-ஸ்வரூபிணீ: ஸத்யமும், ஆனந்தமுமே வடிவானவள்.

647. லோபா முத்ரார்ச்சிதா- லோபமுத்ரை (அகஸ்தியர் மனைவி) - அம்பாளின் உபாசகர்-ஹாதிவித்யைக்கு அதிபதி.

648. லீலாக்லுப்த-ப்ரஹ்மாண்ட-மண்டலா: விளையாட்டாகவே எல்லா ப்ரஹ்மாண்டலங்களின் வரிசைகளைப் படைத்தவள்.

அத்ருச்யா த்ருச்ய-ரஹிதா விஜ்ஞாத்ரீ வேத்யவர்ஜிதா । யோகினீ யோகதா யோக்யா யோகானந்தா யுகந்தரா ॥129॥

649. அத்ருச்யா: புலப்படாதவள்.

650. ரஹிதா: பார்க்கப்படும் விஷயமில்லாதவள்.

651. விஜ்ஞாத்ரீ: விசேஷமான அறிவோடு கூடியவள். (ஒவ்வொரு ஜீவனுள்ளும் இருந்து அறிவூட்டுபவள்.)

652. வேத்ய வர்ஜிதா: அறிந்து கொள்ள ஏதுமில்லாதவள்.

653. யோகினி-யோக வடிவானவள்.

654. யோகதா: யோகத்தைத் தருபவள்.

655. யோக்யா: யோகத்தால் அடைபவள்.

656. யோகானந்தா: யோகத்தினால் கிட்டும் ஆனந்த வடிவானவள்.

657. யுகந்தரா: யுகத்தைத் தாங்குபவள்.

இச்சாசக்தி-ஜ்ஞானசக்தி- க்ரியாசக்தி-ஸ்வரூபிணீ ।
ஸர்வாதாரா ஸுப்ரதிஷ்டா ஸதஸத்-ரூப-தாரிணீ ॥130॥

658. இச்சா சக்தி, ஞான சக்தி, க்ரியா சக்தி என்ற மூன்று வடிவினள். ஒரு காரியம் செய்ய விருப்பம் வேண்டும் (இச்சா சக்தி-சிரஸ்) அடுத்து அதைச் செய்ய, அதன் செய்முறை தெரிய வேண்டும். இது ஞான சக்தி (உடல்) முடிவாக அக்காரியத்தை செய்வது. க்ரியா சக்தி-பாதம். இம்மூன்று சக்திகளுமே அம்பாளின் வடிவம்.

659. ஸர்வாதாரா: அனைத்திற்கும் ஆதாரமாயிருப்பவள். 660. ஸுப்ரதிஷ்டா: சிறந்த இருப்பிடமானவள் (ப்ரளயத்திலும் அழியாதது)

661. ஸதஸத்ரூபதாரிணீ: நிலையானதும், நிலையற்ற பொருள்களின் வடிவானவள். ஸத்-நிலையானது. அஸத்-நிலையற்றது. இரண்டுமே அம்பாளே‘

அஷ்டமூர்த்தி-ரஜாஜேத்ரீ லோகயாத்ரா-விதாயினீ ।
ஏகாகினீ பூமரூபா நிர்த்வைதா த்வைத-வர்ஜிதா ॥131॥

662. அஷ்டமூர்த்தி: எட்டு விதமான மூர்த்தி வடிவானவள்.

663. அஜாஜேத்ரீ-அவித்யையை வென்றவள்.

664. லோகயாத்ரா விதாயினீ-உலகயாத்ரையை நடத்தி வைப்பவள்.

665. ஏகாகினீ: தனித்து இருப்பவள்.

666. பூமரூபா: அனைத்துமாய் இருப்பவள். பூமா-ப்ரஹ்மம். எனவே, அம்பாளே ப்ரஹ்ம வடிவினள். பூமா என்றால் அநேகம் என்ற அர்த்தமும் உண்டு. அம்பாளே பலவடிவமாயிருப்பவள்.

சிவபுராணம்-‘ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க’ அபிராமி அந்தாதி - ‘ஒன்றே பல உருவே...’ அதாவது, ஒன்றேயான பரம்பொருள் எல்லா ஜீவராசிகளிலும் உள்ளது.

667. நிர்த்வைதா: த்வைதபாவமே இல்லாதவள்.

668. த்வைத-வர்ஜிதா: த்வைதத்தினின்றும் இயல்பிலேயே நீங்கியவள்.

அன்னதா வஸுதா வ்ருத்தா ப்ரஹ்மாத்மைக்ய ஸ்வரூபிணீ
ப்ருஹதீ ப்ராஹ்மணீ ப்ராஹ்மீ ப்ரஹ்மாநந்தா பலிப்ரியா ॥132॥

669. அன்னதா : (ஜகத்திற்கும்) உணவளிப்பவள். 670. வஸுதா: அனைவருக்கும் செல்வத்தை அளிப்பவள்.

671. வ்ருத்தா: வயதில் முதிர்ந்தவள். அனைவருக்கும் மூத்தவள்.

672. ப்ரஹ்மாத்மைக்ய ஸ்வரூபிணீ: ப்ரஹ்மமும், ஆத்மாவும் ஒன்றாகக் கூடிய வடிவினள்.

673. ப்ருஹதீ: பேருருவம் கொண்டவள்.

674. ப்ராஹ்மணீ: அந்தணப் பெண்.

675. ப்ராஹ்மி: பிரம்மாவின் பத்னீயான சரஸ்வதி.

676. ப்ரஹ்மானந்தா: ப்ரஹ்மாநந்தமே வடிவானவள்.

677. பலிப்ரியா: பலசாலிகளிடத்தில் (அவித்யையை வென்றவர்கள்.) ப்ரியமுள்ளவள்.

பாஷா-ரூபா: ப்ருஹத்ஸேநா பாவாபாவ-விவர்ஜிதா ।
ஸுகாராத்யா சுபகரீ சோபநா-ஸுலபாகதி: ॥133॥

678. பாஷா - ரூபா: மொழிகளின் வடிவாயிருப்பவள்.

679. ப்ருஹத்ஸேனா: அபாரமான சேனைகளை உடையவள்.

680. பாவாபாவ-விவர்ஜிதா: உற்பத்தியும், அழிவும் இல்லாதவள்.

681. ஸுகாராத்யா: சுகமாக சுலபமாக வழிபடக் கூடியவள்.

682. சுபகரீ: மங்களத்தை செய்பவள்.

683. சோபனா-ஸுலபாகதி: உயர்ந்த, மங்களமான இலக்காய் இருப்பவள்.

ராஜராஜேச்வரீ ராஜ்யதாயினீ ராஜ்யவல்லபா ।
ராஜத்க்ருபா ராஜபீட-நிவேசித-நிஜாச்ரிதா ॥134॥

684. ராஜராஜேச்வரி: ராஜராஜர்களுக்கும் ஈசுவரி

685. ராஜ்யதாயினீ: ராஜ்யத்தை கொடுப்பவள்.

686. ராஜ்யவல்லபா: ஆட்சியில் ஈடுபட்டவள். (திறமைசாலி)

687. ராஜத் க்ருபா: கருணையே வடிவாகப் பிரகாசிப்பவள்.

688. ராஜபீட-நிவேசித-நிஜாச்ரிதா: தன்னை அண்டியவரை அரச பீடத்தில் அமர்த்துபவள்.

ராஜ்யலக்ஷ்மீ: கோசநாதா சதுரங்க-பலேச்வரீ ।
ஸாம்ராஜ்யதாயினீ ஸத்யஸந்தா ஸாகர-மேகலா ॥135॥

689. ராஜ்ய லக்ஷ்மீ: ராஜ்யலக்ஷ்மீ வடிவானவள்.

690. கோசநாதா: பொக்கிஷத்திற்கு அதிகாரி

691. சதுரங்க-பலேச்வரீ: நான்கு வகை படைகளின் தலைவி.

692. ஸாம்ராஜ்யதாயினீ: ஸாம்ராஜ்யத்தைக் கொடுப்பவள்

693. ஸத்யஸந்தா: மீறமுடியாத, ப்ரதிக்ஞை, மரியாதைகளை உடையவள்

694. ஸாகரமேகலா: கடலையே ஒட்யாணமாக உடையவள்.

தீக்ஷிதா தைத்யசமனீ ஸர்வலோகவசங்கரீ ।
ஸர்வார்த்த-தாத்ரீ ஸாவித்ரீ ஸச்சிதானந்தரூபிணீ ॥136॥

695. தீக்ஷிதா. ஞானத்தை அடையும்படி செய்பவள் தீக்ஷை அளிப்பவள்.

696. தைத்யசமனீ: அசுரர்களை அடக்கியவள்.

697. ஸர்வலோக வசங்கரீ: உலகம் அனைத்தும் தன் வசப்படுத்திக் கொண்டவள்.

698. ஸர்வார்த்த - தாத்ரீ: எல்லாப் புருஷார்த்தங்களையும் அளிப்பவள்.

699. 'ஸாவித்ரீ' உலகைப் படைக்கும் 'ஸாவித்ரீ' வடிவானவள். ஜகத்தை உண்டு பண்ணுபவர் 'ஸவிதா' என்ற பரமசிவன் அவருடைய பத்னீ - 'ஸாவித்ரீ'.

700. ஸச்சிதானந்த ரூபிணீ: ஸச்சிதானந்த ரூபிணீ: ஸச்சிதாநந்த வடிவானவள் : ஸத்-நித்யமானது சித்-ஞானம் ஆநந்தம்: பரிபூர்ண சந்தோஷம் இந்த மூன்றும் சேர்ந்தது. ப்ரஹ்மம் அதுதான்-'தேவி'.

தேசகாலாபரிச்சின்னா ஸர்வகா ஸர்வமோஹினீ ।
ஸரஸ்வதீ சாஸ்த்ரமயீ குஹாம்பாகுஹ்யரூபிணீ ॥137॥

701. தேசகாலாபரிச்சின்னா: தேசம், காலம் இவற்றால் பிரிக்கப் படாதவள்.

702. ஸர்வகா: எங்கும் நிறைந்திருப்பவள்.

703. ஸர்வமோஹினீ: எல்லோரையும் மோஹிக்கச் செய்பவள்.

704. ‘ஸரஸ்வதி’: ஞான அபிமான தேவியான ஸரஸ்வதியாக இருப்பவள் (2-வயது கன்யா பெண்)

705. சாஸ்த்ரமயீ: சாஸ்திர வடிவினள்

706. குஹாம்பா: குஹப் பெருமானின் தாய்

707. குஹ்யரூபிணீ : ரகசியமான ரூபமுள்ளவள்.

ஸர்வோபாதி-விநிர்முக்தா ஸதாசிவ-பதிவ்ரதா ।
ஸம்ப்ரதாயேச்வரீ ஸாத்வீ குருமண்டல-ரூபிணீ ॥138॥

708. ஸர்வோபாதி-வினிர் முக்தா: எல்லா உபாதைகளிலிருந்து விடுபட்டவள்.

709. ஸதாசிவ பதிவ்ரதா: சதாசிவரின் பதிவ்ரதை.

710. ஸம்ப்ரதாயேச்வரீ: ஸம்ப்ரதாயத்தின் தலைவி

711. ஸாது: நல்லதையே செய்பவள்.

712. ஈ - ‘ஈ’- காம கலா எழுத்து வடிவானவள்.

713. குருமண்டல ரூபிணீ: குருமண்டல ரூபமாக இருப்பவள். (ஸாத்வீ-ஸாது+ஈ)

குலோத்தீர்ணா பகாராத்யா மாயா மதுமதீ மஹீ ।
கணாம்பா குஹ்யகாராத்யா கோமாலாங்கீ குருப்ரியா ॥139॥

714. குலோத்தீர்ணா: இந்திரியங்களுக்கு அப்பாற்பட்டவள்.

715. பகாராத்யா: சூரிய மண்டலத்தில் வழிபடத் தக்கவள்.

716. மாயா. மாயையாக இருப்பவள்.

717. மதுமதி: மதுவுடன் இருப்வள் (மது=தேன்)

718. மஹி: பூமிரூபமாக இருப்பவள்.

719. கணாம்பா: கணங்களின் தாயார்.

720. குஹ்யகாராத்யா: குஹ்யர்களால் (குபேரனுடைய பரிவாரங்கள்) ரகசியமாக கௌல முறையில் வழிபடப்பெற்றவள்.

721. கோமலாங்கீ: அழகிய, மிருதுவான சரீரத்தை உடையவள்.

722. குருப்ரியா குருவிடம் (ஈஸ்வரன்) ப்ரியமுள்ளவள்.

ஸ்வதந்த்ரா ஸர்வதந்த்ரேசீ தக்ஷிணாமூர்த்தி-ரூபிணீ ।
ஸநகாதி-ஸமாராத்யா சிவஜ்ஞாநப்ரதாயிநீ ॥140 ॥

723. ஸ்வதந்த்ரா: பிறர் உதவி இல்லாமலேயே தன் விருப்பபடி செயலாற்றுபவள்.

724. ஸர்வதந்த்ரேசீ: எல்லா தந்திரங்களுக்கும் தலைவி.

725. தக்ஷிணா மூர்த்தி ரூபிணீ: தக்ஷிணா மூர்த்தியின் ரூபமாக இருப்பவள்.

726. ஸனகாதி-ஸமாராத்யா-ஸநகாதிகளால் நன்கு ஆராதிக்கப்பட்டவள்.

727. சிவஞான-ப்ரதாயினீ: சிவதத்துவத்தை வளர்த்தவள்.

சித்கலா ஆநந்த-கலிகா ப்ரேமரூபா ப்ரியங்கரீ ।
நாமபாராயண-ப்ரீதா நந்திவித்யா நடேச்வரீ ॥141॥

728. சித்கலா: சித் என்ற கலையுடன் கூடியவள்.

729. ஆனந்த கலிகா: ஆனந்தத்தின் அம்சமாக இருப்பவள்.

730. ப்ரேமரூபா: அன்பின் வடிவானவள்.

731 ப்ரியங்கரீ: ப்ரியமானதைச் செய்பவள்.

732. நாம பாராயண ப்ரீதா:நாம பாராயணத்தால் ப்ரீதி அடைபவள்.

733. நந்திவித்யா: நந்திகேச்வரரால் உபாசிக்கப்பட்ட வித்யாரூபிணீ.

734. நடேச்வரீ: சிதம்பரத்தில் ஆடும் நடராஜரின் மனைவி. அவருக்கு அனுசரணையாக அன்னையும் ஆடுகிறாள்.

மித்யா ஜகததிஷ்டாநா முக்திதா முக்திரூபிணீ ।
லாஸ்யப்ரியா லயகரீ லஜ்ஜா ரம்பாதிவந்திதா ॥142॥

735. மித்யா ஜகததிஷ்டனா: பொய்யான உலகத் தோற்றதிற்கு ஆதாரமாக இருப்பவள்.

736. முக்திதா: முக்தி தருபவள்.

737. முக்திரூபிணி: முக்தியே ரூபமாக உள்ளவள்.

738. லாஸ்யப்ரியா: நாட்டியத்தில் பிரியமுள்ளவள்.

739. லயகரீ: லயத்தை உண்டு பண்ணுபவள்.

740. லஜ்ஜா-நாண ரூபமாக இருப்பவள்.

741. ரம்பாதி-வந்திதா: ரம்பை, ஊர்வசீ முதலிய அப்சரஸ் ஸ்த்ரீகளால் வணங்கப்பட்டவள்.

பவதாவ-ஸுதாவ்ருஷ்டி: பாபாரண்ய-தவாநலா ।
தௌர்ப்பாக்ய-தூலவாதூலா ஜராத்வாந்த-ரவிப்ரபா ॥143॥

742. பவதாவஸுதா வ்ருஷ்டி: ஸம்ஸாரமாகிய காட்டுத்தீயிற்கு அம்ருத மழையாக இருப்பவள்.

743. பாபாரண்ய-தவானலா: பாபக் காடுகளை பொசுக்கும் காட்டுத் தீயாக இருப்பவள்.

744. தௌர்பாக்ய-தூலவாதூலா: துர்பாக்யம் என்ற பஞ்சுப் பொதியை சிதற அடிக்கும் சுழற்காற்றாக இருப்பவள்.

745. ஜராத்வாந்த ரவிப்ரபா: முதுமை என்ற இருட்டை போக்கும் சூர்ய ஒளியாக இருப்பவள்.

பாக்யாப்தி-சந்த்ரிகா பக்தசித்த-கேகி-கநாகநா ।
ரோகபர்வத-தம்போலிர் ம்ருத்யுதாரு-குடாரிகா ॥144॥

746. பாக்யாப்தி-சந்திரிகா: பாக்யமென்ற கடலைப் பொங்கி எழச்செய்யும் நிலவாக இருப்பவள்.

747. பக்தசித்த கேகி கனாகனா: பக்தரின் மனம் என்ற மயிலுக்கு ஆனந்தம் தரும் மேகக் கூட்டமாக இருப்பவள்.

748. ரோக பர்வத-தம்போலி: வ்யாதி என்ற மலையைப் பிளக்கும் வஜ்ராயுதமாக இருப்பவள்.

749. ம்ருத்யுதாரு குடாரிகா-மரணம் என்ற மரத்தை வெட்டும் கோடாலியாக இருப்பவள்.

மஹேச்வரீ மஹாகாளீ மஹாக்ராஸா மஹாசனா ।
அபர்ணா சண்டிகா சண்ட-முண்டாஸுர-நிஷூதினீ ॥145॥

750. மஹேச்வரீ: பெரியவளாகவும், ஈஸ்வரியாகவும் இருப்பவள்.

751. மஹாகாளீ: மஹதியாகவும், காளியாகவும் இருப்பவள்

752. மஹாக்ராஸா: (பிரபஞ்சத்தையே) பெரிய கவளமாக விழுங்குபவள்.

753. மஹாசனா: பெரும் ஆகாரம் உள்ளவள்.

754. அபர்ணா' - கடன் இல்லாதவள். (பர்ண-இலை, இலை கூட உண்ணாது தவம் செய்தவள்) மஹா நாராயணோபனிஷத்: பரமசிவன் ஆடாது, அசையாது, தூண்போல், மரம்போல் நிற்கிறான். அம்பாள் அவளைச் சுற்றி கொடியாக இருக்கிறாள். கொடியில் இலைகள் இல்லை. ஆகையால், அபர்ண'. அபிராமிபட்டர், அபிராமி -அந்தாதி.

28-ல், துணைவருடன் புல்லும் பரிமளப் பூங்கொடி' 48-ல் 'சடைமுடிக்குன்றில் படரும் பரிமள பச்சைக் கொடியை' என்பர். அதாவது, சிவன்=ஜபம்=மலை, சக்தி=கொடி!

755. சண்டிகா: கோபம் உள்ளவள் (பக்தி அற்றவரிடம்)

756. சண்ட-முண்டாஸுர நிஷூதினீ: சண்டன், முண்டன் என்ற அசுரர்களை அழித்தவள்.

க்ஷராக்ஷராத்மிகா ஸர்வலோகேசீ விச்வதாரிணீ ।
த்ரிவர்க்க-தாத்ரீ ஸுபகா த்ர்யம்பகா த்ரிகுணாத்மிகா ।।146।।

757. க்ஷரா க்ஷராத்மிகா: எண்ணிக்கையற்ற மந்திரங்களின் (எழுத்துக்களின்) ரூபமாக உள்ளவள். (அழிவும்,. அழிவற்றதுமாக இருப்பவள். ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமம் 480க்ஷரம். 481 அக்ஷரம்)

758. ஸர்வலோகசீ : எல்லா உலகங்களுக்கும் ஈசுவரி, அதிபதி

759. விச்வதாரிணீ: ப்ரபஞ்சத்தைத் தாங்குபவள்

760. த்ரிவர்க தாத்ரீ: அறம், பொருள், இன்பம் தருபவள். மோட்சமாக (வீடு) இருப்பவள்-அம்பாளே'

761. ஸுபகா: ஸ்ரீ, காமம், மாஹாத்மியம், வீரியம், யத்னம், கீர்த்தி - முதலிய ஸௌபாக்கிய வடிவினள்.

762. த்ரயம்பகா-முக்கண்ணி. (சூர்யன், சந்திரன், அக்னி)

763. த்ரிகுணாத்மிகா: ஸத்வம், ரஜஸ், தமஸ் வடிவினள்.

ஸ்வர்க்காபவர்க்கதா சுத்தா ஜபாபுஷ்ப-நிபாக்ருதி : ।
ஓஜோவதீ த்யுதிதரா யஜ்ஞரூபா ப்ரியவ்ரதா ।।147 ।।

764. ஸ்வர்கா பவர்கதா: ஸ்வர்க்கம், மோட்சம்-இரண்டும் தருபவள்.

765. சுத்தா: சுத்தமானவள்.

766. ஜபாபுஷ்ப: நிபாக்ருதி: செம்பருத்தி பூவின் நிறத்தை ஒத்தவள்.

767. ஓஜோவதீ: தாது ஸாரம் உடையவள்.

768. த்யுதிதரா: காந்தியுடன் கூடியவள்.

769. யக்ஞ ரூபா: தேவ, பித்ரு, ப்ரஹ்ம, மனுஷ்ய, பூத-யக்ஞங்களின் ரூபமானவள்.

770. ப்ரிய வ்ரதா: வ்ரதங்களில் ப்ரியமுள்ளவள்.

துராராத்யா துராதர்ஷா பாடலீகுஸுமப்ரியா ।
மஹதீ மேருநிலயா மந்தார-குஸும-ப்ரியா ॥148॥

771. துராராத்யா: சிரமப்பட்டே வழிபடக் கூடியவள்.

772. துராதர்ஷா: வசப்படுத்த முடியாதவள் (வி.ஸ.81)

773. பாடலீ-குஸுமப்ரியா: பாதிரிப்பூவில் ப்ரியமுள்ளவள். வெளுப்பும், சிகப்பும் கலந்தது. சிவ-சக்தி ஸாமரஸ்யம்.

774. மஹதீ: மிகப் பெரியவள்.

775. மேருநிலயா: மேருவில் வசிப்பவள்.

776. மந்தாரகுஸுமப்ரியா: மந்தாரபுஷ்பத்தில் ப்ரியமுள்ளவள் (தேவலோகம்).

வீராராத்யா விராட்ரூபா விரஜா விச்வதோமுகீ ।
ப்ரத்யக்ரூபா பராகாசா ப்ராணதா ப்ராணரூபிணீ ॥149॥

777. வீரா ராத்யா: வீரர்களால் ஆரோதிக்கப்படுபவள்.

778. விராட் ரூபா: விராட் வடிவினள்.

779. விரஜா: மாசற்றவள்.

780. விச்வதோமுகீ: எங்கும் முகம் உள்ளவள். எல்லோருடைய கண்கள் வழியாகவும் பார்ப்பவள். (நாமா. 532 ஸர்வதோமுகீ. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் - 816-ஸர்வதோமுக).

781. ப்ரத்யக் ரூபா: உள்நோக்கிப் பார்ப்பவர்களுக்குத் தெரிபவள்.

782. பராகாசா: சிறந்ததான ஆகாசமாக இருப்பவள்.

783. ப்ராணதா: ப்ராணனைக் கொடுப்பவள்.

784. ப்ராணரூபிணீ: ப்ராணரூபமாக இருப்பவள்.

மார்தாண்ட-பைரவாராத்யா மந்த்ரிணீ-
ந்யஸ்தராஜ்யதூ : ।
த்ரிபுரேசீ ஜயத்ஸேனா நிஸ்த்ரைகுண்யா பராபரா :
॥150॥

785. மார்தாண்ட பைரவாராத்யா: மார்தாண்ட பைரவரால் பூஜிக்கப்பட்டவள்.

786. மந்திரிணீ-ந்யஸ்த ராஜ்யதூ: மந்திரிணீ தேவியிடம் அரசுப் பொறுப்பை ஒப்படைத்தவள். (ராஜச்யாமளா, ராஜமாதங்கீ-மந்திரிணீ தேவியின் பெயர்கள்)

787. த்ரிபுரேசீ: முப்புரங்ளின் தலைவி.

788. ஜயத்ஸேனா-வெற்றிதரும் சைன்யத்தை உடையவள்.

789. நிஸ்த்ரை குண்யா: முக்குணங்கள் இல்லாதவள்.

790. பராபரா: பரமாகவும், அபரமாகவும் இருப்பவள். பரம்=பிந்தியது-சக்தி. அபரம்=முந்தியது=சிவன். ஸாமரஸ்யத்தினால் (சக்தியுடன் கூடிய சிவன்) ஏற்படும் ஸ்வரூபம் - பராபரம்'

ஸத்யஜ்ஞாநாநந்த-ரூபா ஸாமரஸ்ய-பராயணா ।
கபர்த்தினீ கலாமாலா காமதுக்-காம-ரூபிணீ ॥151॥

791. ஸத்யஞானாந்தரூபா: ஸத்யம், ஞானம், ஆனந்தம்-இவற்றின் ரூபமுடையவள்.

792. ஸாமரஸ்ய-பராயணா: சிவனுடன் சரி-சமமான நிலையுடையவள். 793. கபர்தினீ: கபர்த்தி என்ற ஜடாதாரியான சிவனின் பத்னீ.

794. கலாமாலா-கலைகளை மாலையாக தரித்தவள்.

795. காமதுக்: விரும்பியதை வழங்குபவள்.

796. காமரூபிணீ: பரமசிவனுடைய ரூபத்தை உடையவள்.

கலாநிதி : காவ்யகலா ரஸஜ்ஞா ரஸசேவதி: ।
புஷ்டா புராதனாபூஜ்யா புஷ்கரா புஷ்கரேக்ஷணா ॥152॥

797. கலாநிதி: கலைகளின் நிதி.

798. காவ்யகலா: காவ்யங்களாக இருப்பவள்.

799. ரஸஞா: சிருங்காரம் முதலிய பத்து ரஸனைகளை அறிந்தவள்.

800. ரஸசேவதி: ரஸத்தின் பொக்கிஷம். ப்ரஹ்மானந்தத்தின் இருப்பிடம்.

801. புஷ்டா: நன்கு போஷிக்கப்பட்டவள்.

802. புராதனா: பழம் பொருள் எல்லோருக்கும் முந்தியவள்.
803. பூஜ்யா: வழிபடத்தக்கவள்.

804. புஷ்கரா: புஷ்டியை அளிப்பவள்.

805. புஷ்கரேக்ஷணா-கமலம் போன்ற கண்களையுடைவள்.

பரஞ்ஜ்யோதி: பரந்தாம பரமாணு: பராத்பரா ।
பாசஹஸ்தா பாசஹந்த்ரீ பரமந்த்ரவிபேதினீ ॥153॥

806. பரம்ஜ்யோதி: பேரொளியாகத் திகழ்பவள்.

807. பரம்தாம: உத்தமமான இருப்பிடம்

808. பரமாணு மிகவும் ஸுஷ்மமான அணுவாக இருப்பவள். (அனோரணீயான்)‘

809. பராத்பரா: மேலானதற்கும் மேலானதவள்

810. பாசஹஸ்தா பாசத்தை கையில் கொண்டவள்.

811. பாசஹந்தரீ: பாசத்தை அழிப்பவள்.

812. பரமந்திர-விபேதினீ: எதிரிகளின் ஏவல், உச்சாடனத்தை அழிப்பவள்.

மூர்த்தாஅமூர்த்தா-அநித்யத்ருப்தா முநிமானஸஹம்ஸிகா।
ஸத்யவ்ரதா ஸத்யரூபா ஸர்வாந்தர்யாமினீ ஸதீ ॥154॥

813. மூர்தா: உருவத்துடன் இருப்பவள்.

814. அமூர்தா- உருவம் இல்லாதவள்.

815. அநித்யத்ருப்தா: அழியும் பொருள்களால் செய்யும் பூஜையிலும் திருப்தி அடைகிறாள். அன்னைக்கு பக்திதான் முக்யம் (கீதையில் கண்ணன் சொல்வது போல) .

816. முனி-மானஸ-ஹம்ஸிகா: சிறந்த முனிகளுடைய மனதாகிய ஸரஸில் (ஓடையில்) அன்னப்பறவை போல் சஞ்சரிப்பவள் .

817. ஸத்யவ்ரதா: ஸத்யமான வ்ரதத்துடன் இருப்பவள்.

818. ஸர்வாந்தர்யாமினீ: எல்லோர் உள்ளத்திலும் வியாபித்து இருப்பவள்.

820. ஸதீ: ஸதிதேவி (தாக்ஷாயணீ).

ப்ரஹ்மாணீ ப்ரஹ்மஜநநீ பஹுரூபா புதார்ச்சிதா ।
ப்ரஸவித்ரீ ப்ரசண்டாஆஜ்ஞா ப்ரதிஷ்டா ப்ரகடாக்ருதி:
॥155॥

821. ப்ரஹ்மாணீ: ப்ரஹ்மாவை ஜீவிக்கச் செய்பவள்.

822. ப்ரஹ்ம: ப்ரஹ்மம்

823. ஜனனீ: தாயார்.

824. பஹீரூபா: பல உருவங்கள் உள்ளவள். (401. விவிதாகாரா) (விஸ. 721 அநேகமூர்த்தி, 723. ஸதமூர்த்தி. 765. சதுர்மூர்த்தி)

825. புதார்ச்சிதா: அறிவாளிகளால் பூஜிக்கப்படுகிறவள்.

826. ப்ரஸவித்ரீ: எல்லாவற்றையும் படைத்தவள்.

827. ப்ரசண்டா: மிகவும் கோபம் உள்ளவள்

828. ஆக்ஞா: கட்டளை ரூபமாக இருப்பவள்.

829. ப்ரதிஷ்டா: ஸகல ப்ரபஞ்சமும் அன்னையையே ஆதாரமாகக் கொண்டிருக்கிறது.

830. ப்ரகடா க்ருதி: வெளிப்படையாகத் தெரிபவள்.

ப்ராணேச்வரீ ப்ராணதாத்ரீ பஞ்சாசத்-பீட-ரூபிணீ ।
விச்ருங்கலா விவிக்தஸ்தா வீரமாதா வியத்ப்ரஸூ:
॥156॥

831. ப்ராணேச்வரீ: பிராணன்களுக்கும், இந்திரியங்களுக்கும் ஈசுவரி.

832. ப்ராணதாத்ரீ: ப்ராணசக்தியை அளிப்பவள்.

833. பஞ்சாசத்பீட ரூபீணி:50 பீடங்களாக இருப்பவள்.

(50 - அக்ஷரம், 'க்ஷ'வுடன் சேர்த்து. 51. இவையே சக்திபீடங்கள்).

834. விச்ருங்கலா: தளை இல்லாதவள். ச்ருங்கலா என்றால் இடுப்பு வஸ்திரம் மீது கட்டிக் கொள்ளும் கயிறு (கட்ஸூத்ரம்) அது இல்லை என்றால் ஆடை இல்லாதவள் என்றாகிறது. அதாவது திகம்பரீ. (சிவன்-திகம்பரன்) அலம்புரா முதலிய பீடங்களில் தேவியின் விக்ரஹம் இவ்வாறே உள்ளது.

835. விவிக்தஸ்தா: தனிமையில் இருப்பவள்.

836. வீரமாதா: வீரர்களின் தாய்.

837. வியத்ப்ரஸூ: ஆகாயத்தை ஈன்றவள்.

முகுந்தா முக்திநிலயா மூலவிக்ரஹ-ரூபிணீ ।
பாவஜ்ஞா பவரோகக்னீ பவசக்ரப்ரவர்த்தினீ ॥157॥

838. முகுந்தா: முக்தி அளிப்பவள்

839. முக்தி நிலயா: முக்தியின் இருப்பிடம்.

840. மூலவிக்ரஹ: ரூபிணீ: ஸகல சக்திகளுக்கும் மூலமான ரூபமுடையவள் (ராஜராஜேஸ்வரீ, லலிதா மஹாத்ரிபுரஸுந்தரீ இன்னும் பல பெயர்களால் குறிப்பிடப்படும் ரூபமுடையவள்.

841. பாவஞா: கருத்தை (பாவங்களை) அறிகிறவள்.

842. பவரோகக்னீ: ஸம்ஸாரம் என்ற நோயை அகற்றுபவள்.

843. பவ சக்ர ப்ரவர்தினீ : ஸம்ஸார சக்ரத்தைச் சுழற்றுபவள் (இயக்குபவள்).

(வி.ஸ.578. பேஷஜம்-ஸம்ஸாரம் என்ற நோய்க்கு மருந்து)

சந்தஸ்ஸாரா சாஸ்த்ரஸாரா மந்த்ரஸாரா தலோதரீ ।
உதாரகீர்த்தி-ருத்தாம- வைபவா வர்ண-ரூபிணீ ॥158॥

844. சந்தஸ்ஸாரா: வேதத்தின் பொருளாய் இருப்பவள்.

845. சாஸ்த்ர ஸாரா: சாஸ்திர ஸாரமானவள்.

846. மந்திர ஸாரா: மந்திர ஸாரமானவள்

847. தலோதரீ: மெல்லிய இடையை உடையவள்

848. உதாரகீர்த்தி: பெரும் புகழ் உள்ளவள்

849. உத்தாம வைபவா: கட்டுங்கடங்காத பெருமை உடையவள்.

850. வர்ணரூபிணீ: எழுத்து வடிவினள்.

ஜன்ம-ம்ருத்யு-ஜராதப்த-ஜன-விச்ராந்தி-தாயினீ ।
ஸர்வோபநிஷ-துத்குஷ்டா சாந்த்யதீத-கலாத்மிகா ॥159॥

851. பிறப்பு, இறப்பு, மூப்பு-துன்பங்களில் தவிக்கும் ஜனங்களுக்கு உத்தமமான மோக்ஷ சுகமாகிய சாந்தியை அளிப்பவள்.

852. ஸர்வோபநிஷ-துத்குஷ்டா: எல்லா உபநிஷத்துக்களிலும் ஆணித்தரமாய் அடித்துக் கூறப்பட்டவள்.

853. சாந்த்ய தீதகலாத்மிகா: பஞ்ச பூதங்களின் கலைகளில் ஆகாய தத்வத்தின் கலையாக இருப்பவள். சாந்த்ய தீதா: த்வைத பாவத்தை அகற்றி ஆனந்தத்தை போதிப்பவள். -இந்த ரூபமாக அம்பாள் இருப்பவள்.

கம்பீரா ககநாந்தஸ்தா கர்விதா கானலோலுபா ।
கல்பனா-ரஹிதா காஷ்டாஅகாந்தா காந்தார்த்த-விக்ரஹா ॥160॥

854. கம்பீரா: ஆழங்காணமுடியாதவள்.

855. ககனாந்தஸ்தா: ஆகாயத்தின் நடுவே இருப்பவள்.

856. கர்விதா: கர்வமுடையவள்.

857. கானலோலுபா: சங்கீதத்தில் ப்ரியம் உள்ளவள்.

858. கல்பனா-ரஹிதா: கற்பனைகள் இல்லாதவள் .

859. காஷ்டா : வேதாந்த வாக்கியங்களில் நிர்ணயிக்கப்பட்ட ஸ்வரூபமாய் இருப்பவள்.

860. அகாந்தா: பாபத்தை போக்குபவள்.

861. காந்தார்த-விக்ரஹா: தன் கணவனின் சரீரத்தில் பாதி ரூபத்தை கொண்டவள்.

கார்ய-காரண-நிர்முக்தா காமகேலி-தரங்கிதா ।
கநத்கநக-தாடங்கா லீலா-விக்ரஹ-தாரிணீ ॥161॥

862. கார்ய-காரண-நிர்முக்தா: காரியகாரணங்களுக்கு அப்பாற்பட்டவள்.

863. காமகேலி-தரங்கிதா: அலைகள் போல் அடுத்தடுத்து வரும் ச்ருங்கார கேளிக்கைகள் உள்ளவள். லலனாத்லலிதா' (லலிதா என்றாலே ச்ருங்காரமாகும்).

864. கனத் கனக தாடங்கா: ப்ரகாசிக்கும் தங்கக் காசோலை அணிந்திருப்பவள்.

865. லீலா விக்ரஹதாரிணீ: லீலையாகவே பல அவதார உருவங்களை தரிப்பவள்.

அஜா க்ஷயவிநிர்முக்தா முக்தா க்ஷிப்ர-ப்ரஸாதானீ ।
அந்தர்முக-ஸமாராத்யா பஹிர்முக-ஸுதுர்லபா ॥162॥

866. அஜா-பிறக்காதவள் (விஸ. 95-அஜ)

867. க்ஷய வினிர்முக்தா: மரணமற்றவள்

868. முக்தா: அழகி

869. க்ஷிப்ரஸாதினீ: சீக்கிரம் அருள்புரிபவள். (383. ஸத்ய-ப்ரஸாதினி: உடனே அருள்புரிபவள்.)

870. அந்தாமுக ஸமாராத்யா உள்நாட்டத்தால் ஆராதிக்கத் தக்கவள். 871. பஹிர்முக ஸுதுர்லபா: வெளிநாட்டத்தால் அடைவதற்கு அரியவள்.

த்ரயீ த்ரிவர்க-நிலயா த்ரிஸ்தா த்ரிபுர-மாலினீ ।
நிராமயா நிராலம்பா ஸ்வாத்மாராமா ஸுதாஸ்ருதி: ॥163॥

872. த்ரயீ: மூன்று வேதங்களின் வடிவானவள்.

873. த்ரிவர்கநிலயா: மூன்று வர்க்கங்களில் இருப்பவள். அறம், பொருள், இன்பங்களை அருள்பவள். மோட்சமாய் இருப்பவள் அன்னையே!

874. த்ரிஸ்தா: மும் மூன்றில் இருப்பவள்.

875. த்ரிபுரமாலினீ: த்ரிபுரமாலினீ வடிவினள். (ஸ்ரீசக்ரம் 6வது ஆபரணம்) .

876. நிராமயா: நோயற்றவள் .

877. நிராலம்பா: பிடிப்பு (பற்று) இல்லாதவள்.

878. ஸ்வாத்மாராமா: தன்னுடைய ஆத்மா ஸ்வரூபத்திலேயே திளைத்து ஆனந்திப்பவள்.

879. ஸுதா ஸ்ருதி: அம்ருத பெருக்காக உள்ளவள்.

ஸம்ஸாரபங்க நிர்மக்ன ஸமுத்தரண பண்டிதா ।
யஜ்ஞப்ரியா யஜ்ஞகர்த்ரீ யஜமாந ஸ்வரூபிணீ ॥164॥

880. ஸம்ஸார சேற்றில் புதைந்தவரை தூக்கி விடுவதில் திறமை சாலி.

881. யக்ஞப்ரியா: யக்ஞத்தை விரும்புபவள்.

882. யக்ஞகர்த்ரீ: யக்ஞத்தை செய்பவள்.

883. யஜமான ஸ்வரூபிணி: யஜமான வடிவினள்.

தர்மாதாரா தநாத்யக்ஷா தநதாந்ய விவர்த்திநீ ।
விப்ரப்ரியா விப்ரரூபா விச்வப்ரமண காரிணீ ।।165।।

884. தர்மாதாரா: தர்மத்திற்கு ஆதாரமாய் இருப்பவள்.

885. தனாத்யக்ஷா: செல்வத்தின் அதிபதி. குபேரன்-தேவி உபாஸகர்.

886. தனதான்ய விவர்தினீ: செல்வம் தான்யம் பெருக்குபவள்

887. விப்ரப்ரியா: வேதம், சாஸ்திரம் அறிந்தவரிடம் ப்ரியமானவள்.

888. விப்ரரூபா: விப்ரர்களின் வடிவானவள்.

889. விச்வப்ரமண காரிணி: உலகத்தை சுழலும்படி செய்பவள்.

விச்வக்ராஸா வித்ருமாபா வைஷ்ணவீ விஷ்ணுரூபிணீ ।
அயோநிர் யோநி நிலயா கூடஸ்தா குலரூபிணீ ।।166।।

890. விச்வக்ராஸா. ப்ரபஞ்சத்தை விழுங்குபவள்.

891. வித்ருமாபா: பவழம் போன்ற காந்தியுடையவள்.

892. வைஷ்ணவீ: விஷ்ணுவின் சக்தியாக இருப்பவள்.

893. விஷ்ணு ரூபிணீ: விஷ்ணுவாகவே இருப்பவள்

894. அயோனி: எதிலிருந்தும் உண்டாகாதவள்

895. யோனிநிலயா: ப்ரபஞ்சத்திற்கு பிறப்பிடாகவும், லயமடையும் இடமாக இருக்கிறாள். ஜகத்-அம்பாளிடமிருந்து தோன்றுகிறது. அதனால் அவள் அதற்கு யோனி. ஸம்ஹார காலத்தில்,

ஜகத் அம்பாளிடமே லயமடைகிறது. அவள் ஜகத்தின் நிலயா, இரண்டுமாய் இருப்பதால் அவள் யோனி-நிலயா.

896. கூடஸ்தா: அஞ்ஞானத்திற்கு அதிஷ்டானமாக இருப்பவள்.

897. குலரூபிணி: குலம் என்ற ரூபமாக இருப்பவள் (வம்சம், பாஹ்யபூஜை, மூலாதாரம், கௌலமார்க்கம் முதலியவற்றில் இருப்பவள்.)

வீரகோஷ்டீ ப்ரியா வீரா நைஷ்கர்ம்யா நாதரூபிணீ ।
விஜ்ஞாநகலநா கல்யா விதக்தா பைந்தவாஸநா ॥167॥

898. வீரகோஷ்டீ-ப்ரியா: வீரர்களின் கோஷ்டியை விரும்புபவள்.

899. நாதரூபிணீ: நாதரூபமானவள்.

900. நைஷ்கர்ம்யா-கர்மா தொடர்பு அற்றவள்.

901. நாதரூபிணீ: நாதரூபமானவள்

902. விக்ஞான கலனா-பக்தனுக்கு ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் கிடைக்கச் செய்பவள்.

903. கல்யா: கலைகளில் திறமை உள்ளவள்.

904. விதக்தா: சாதுர்யம் உள்ளவள்.

905. பைந்த வாஸனா: பிந்துவை ஆஸனமாகக் கொண்டவள்.

தத்வாதிகா தத்வமயி தத்வமர்த்த ஸ்வரூபிணீ ।
ஸாமகானப்ரியா ஸௌம்யா ஸதாசிவகுடும்பினீ ॥168॥

906. தத்வாதிகா: தத்துவங்களுக்கு அப்பாற்பட்டவள்.

907.தத்வமயீ: தத்வங்களின் ரூபமாய் இருப்பவள்.

908. தத்வமர்த்த-ஸ்வரூபிணீ: தத்த்வமஸி' என்ற மஹாவாக்யத்தின் பொருளாய் இருப்பவள்.

‘தத்’ என்பது ‘சிவம்’ (பரமாத்மா) த்வம் என்பது ஜீவாத்மா. இவற்றின் ஐக்யத்தைப் போதிக்கும் மஹாவாக்யத்தின் பொருளாய் இருப்பவள்.

909. ஸாமகானப்ரியா: ஸாம வேத கானத்தில் ப்ரியமுள்ளவள்.

910. ஸௌம்யா: அழகானவள், சாந்தமானவள், பழகப் ப்ரியமானவள்.

(ஸோம்யா: ஸோம யாகத்தில் பங்கு கொண்டவள்). இரண்டு விதமாகப் பொருள் கொள்ளலாம்.

911. ஸதாசிவ குடும்பினீ: ஸதாசிவனின் மனைவி.

ஸவ்யாபஸவ்ய மார்க்கஸ்தா ஸர்வாபத் விநிவாரிணீ ।
ஸ்வஸ்தா ஸ்வபாவமதுரா தீரா தீரஸமர்ச்சிதா ॥169॥

912. ஸ்வ்யாபஸ்வ்ய மார்கஸ்தா: ஸ்வயம் (வலது) அபஸவ்யம் (இடது) என்ற இரண்டு வழிகளிலும் இருப்பவள்.

913. ஸர்வாபாத் விநிவாரினீ: எல்லாவிதமான ஆபத்துக்களையும் போக்குபவள்.

ஆபத்தில் என்ன செய்ய வேண்டும்?

‘அம்பாளின் இருதிருவடிகளையும் மனதில் கொள்‘

914. ஸ்வஸ்தா: துக்கமே இல்லாதவள்-‘ஆனந்த ஸ்வரூபிணி’

915. ஸ்வபாவ மதுரா: இயற்கையாகவே இனிமையானவள். எனவே எல்லோராலும் விரும்பப்படுபவள்.

916. தீரா: அறிவுள்ளவள், பண்டிதை, தைரியசாலி

917. தீரஸமர்ச்சிதா: அறிவாளிகளால் நன்கு வழிபடப்பட்டவள்.

சைதந்யார்க்ய ஸமாராத்யா சைதந்ய குஸுமப்ரியா ।
ஸதோதிதா ஸதாதுஷ்டா தருணாதித்யபாடலா ॥170॥

918. சைதன்யார்க்ய-ஸமாராத்யா: சைதன்யம் என்ற சித்ரூபமான அர்க்யத்தால் பூஜிக்கப்படுபவள்.

919. சைதன்ய குஸுமப்ரியா: சைதன்யம் ஆகிய புஷ்பத்தில் ப்ரியம் உள்ளவள்.

920. ஸ்தோதிதா எப்போதும் தன் ப்ரகாசத்தாலேயே உதயமாகி விளங்குபவள்.

921. ஸதாதுஷ்டா: எப்போதும் ஆனந்தமாய் இருப்பவள்.

922. தருணாதித்ய பாடலா: இளஞ்சூரியனைப் போல், சிறிது சிவப்பு கலந்த வெள்ளை நிறம் உடையவள். அபிராமி அந்தாதி, ‘உதிக்கின்ற செங்கதிர்’ என்று ஆரம்பிப்பதை நோக்குக!

தக்ஷிணா-தக்ஷிணாராத்யா தரஸ்மேர-முகாம்புஜா ।
கௌலினீ-கேவலா அனர்க்ய-கைவல்ய-பத-தாயிநீ ॥171॥

923. தக்ஷிணா-தக்ஷிணாராத்யா: பண்டிதர்களாலும், பாமரர்களாலும் ஆராதிக்கப்பட்டவள்.

924. தரஸ்மேர முகாம்புஜா: தாமரை போன்ற அழகிய முகத்தில் புண்சிரிப்புடன் கூடியவள்.

925. கௌலினீ-கேவலா: கௌலதர்மத்தையும், கேவலம் என்ற சுத்த ஞானத்தையும் உடையவள்.

926. அனர்க்ய கைவல்ய பததாயினீ: விலை மதிப்பற்ற கைவல்ய பதத்தை (மோக்ஷத்தை) தருபவள்.

ஸ்தோத்ர-ப்ரியா ஸ்துதிமதீ ச்ருதி-ஸம்ஸ்துத-வைபவா।
மநஸ்விநீ மானவதீமஹேசீ மங்கலாக்ருதி: ॥172॥

927. ஸ்தோத்திர ப்ரியா: ஸ்தோத்திரங்களில் ப்ரியமுள்ளவள்.

928. ஸ்துதிமதீ: ஸ்தோத்திரங்கள் உள்ளவள்.

929. ச்ருதி ஸமஸ்துத-வைபவா: வேதங்களால் போற்றப்படும் வைபவம் உள்ளவள்.

930. மனஸ்வினீ: சுதந்திரமான மனதை உடையவள்.

931. மானவதீ: உயர்ந்த (பெருந்தன்மை) மனதைக் கொண்டவள்.

932. மஹேசீ: மஹேச்வரரின் பத்னீ

933. மங்கலா க்ருதி: மங்களரூபமுடையவள்.

விச்வமாதா ஜகத்தாத்ரீ விசாலாக்ஷீவிராகிணீ ।
ப்ரகல்பா பரமோதாரா பராமோதா மனோமயீ ॥173॥

934. விச்வமாதா: உலகங்களுக்கெல்லாம் அன்னை.

935. ஜகத்தாத்ரீ:உலகத்தைத் தாங்குபவள்.

936. விசாலாக்ஷி- விசாலமான நீண்ட கண்களையுடையவள்.

937. விராகிணீ-பற்று இல்லாதவள்.

938. ப்ரகல்பா: துணிவு, திறமை, பலம், தைர்யம்-மிகுந்தவள்.

939. பரமோதாரா: மிகவும் தாராளமாய் கொடுப்பவள். கொடையாளி.

940. பராமோதா: சிறந்த கீர்த்தியுடையவள்.

941. மனோமயீ: மனதையே ரூபமாக உடையவள்.

வ்யோமகேசீ விமானஸ்தா வஜ்ரிணீ வாமகேச்வரீ ।
பஞ்சயஜ்ஞப்ரியா பஞ்ச-ப்ரேத-மஞ்சாதிசாயிநீ ॥174॥

942. வ்யோமகேசீ: வ்யோம கேசரான சிவபத்னீ. ஆகாசத்தையே கேசமாக உள்ளவள். 943. விமானஸ்தா: விமானத்தில் இருப்பவள்.

944. வஜ்ரிணீ: இந்திராணி வடிவினள். 945. வாமகேச்வரீ: வாமகர்களின் ஈசுவரி.

946. பஞ்சயக்ஞப்ரியா: ஐந்து வகை யாகங்களில் (தேவ, பித்ரு, ப்ரஹ்ம, பூத, மனுஷ்ய) ப்ரியமுள்ளவள்.

947. பஞ்ச-ப்ரேத-மஞ்சாதி சாயினீ: ஐந்த ப்ரேத வடிவான மஞ்சத்தில் வீற்றிருப்பவள்.

பஞ்சமீ பஞ்சபூதேசீ பஞ்ச-ஸங்க்யோபசாரிணீ ।
சாச்வதீ சாச்வதைச்வர்யா சர்மதா சம்புமோஹினீ ॥175॥

948. பஞ்சமீ: ஸதாசிவன் பத்னீ

949. பஞ்சபூதேசீ: பஞ்சபூதங்களுக்கு ஈசுவரி

950. பஞ்ச-ஸங்க்யோப சாரிணீ: கந்த, புஷ்ப, தூப, தீப, நைவேத்யம் என்ற ஐந்து உபசாரங்களால் வழிபடப் பெற்றவள்.

951. சாச்வதி: எப்போதும் இருப்பவள்.

952. சாச்வதைச்வர்யா: அழியாத ஐச்வர்யத்தை உடையவள்.

953. சர்மதா: இன்பமளிப்பவள்.

954. சம்பு-மோஹினீ: சிவனை மோஹிக்கச் செய்பவள்.

தரா தரஸுதா தன்யா தர்மிணீ தர்மவர்த்தினீ ।
லோகாதீதா குணாதீதா ஸர்வாதீதா சமாத்மிகா ॥176॥

955. தரா: பூதேவி வடிவானவள்.

956. தரஸுதா: பர்வத குமாரி .

957. தன்யா: ஸகலசம்பத்தும் நிறைந்தவள்.

958. தர்மிணீ: தர்மத்தில் மனம் கொண்டவள்.

959. தர்மவர்தினீ: தருமத்தை வளர்ப்பவள்.

960. லோகாதீதா: உலகங்களை கடந்தவள்.

961. குணாதீதா: குணங்களை கடந்தவள்.

962. ஸர்வாதீதா: எல்லாவற்றையும் கடந்தவள்.

963. சமாத் மிகா: சாந்த ஸ்வரூபிணி.

பந்தூக-குஸும-ப்ரக்யா பாலா லீலா விநோதினீ ।
ஸுமங்கலீ ஸுககரீ ஸுவேஷாட்யா ஸுவாஸினீ ॥177॥

964. பந்தூக-குஸும ப்ரக்யா: பந்து ஜீவம் எனப்படும் பூவைப் போல் காந்தியுடையவள். (வங்க தேசம். மஞ்சள் கலந்த சிகப்பு பூ).

965. பாலா : பாலா த்ரிபுரஸுந்தரியாக குமாரியாக இருப்பவள். (என்றும் 9வயது) .

966. லீலா - விநோதினீ- லீலைகளால் (விளையாட்டினால்) ஸந்தோஷமடைகிறாள்.

967. ஸுமங்கலீ: மிகவும் மங்களமானவள்.

968. ஸுககரீ: சுகத்தைச் செய்பவள்.

969. ஸுவேஷாட்யா: மங்களகரமான ஆடை, ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவள்.

970. ஸுவாஸுனி: பதியுடன் கூடி எப்போதும் வாழ்பவள். அபிராமி அம்மை பதிகத்தில்‘அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி’ என்று அன்னை அபிராமியை புகழ்வார்- அபிராமிபட்டர்.

ஸுவாஸின்யர்ச்சன-ப்ரீதா ஆசோபனா சுத்தமானஸா ।
பிந்துதர்ப்பண-ஸந்துஷ்டா பூர்வஜா த்ரிபுராம்பிகா ॥178॥

971. ஸுவாஸின்யர்ச்சன-ப்ரீதா: ஸுவாசினிகள் செய்யும் பூஜையில் மகிழ்பவள், ஸுவாஸினியை அம்பாளாகப் பாவித்து அர்ச்சனை செய்வதிலும் ப்ரீதி அடைபவள். தேவி பூஜையில்

‘ஸுவாஸினி பூஜை’ ஒரு முக்ய அம்சம். ஸப்த சதி (அத்11.6).

எல்லா வித்தைகளும் உனது அம்சங்களே. உலகில் கலைகளுடன் கூடிய எல்லா ஸ்தீரிகளும் அவ்வாறே. அதாவது, அனைத்து ஸ்த்ரீகளும் அம்பாளே.

972. ஆசோபனா: பரிபூர்ணமான சோபையுள்ளவள்.. (எங்கும், எப்போதும் அழகானவள்) .

973. சுத்த-மானஸா: சுத்தமான மனதை உடையவள்.

974. பிந்துதர்ப்பண-ஸந்துஷ்டா: பிந்து தர்பணத்தில் சந்தோஷமுடையவள்.

975. பூர்வஜா: எல்லாவற்றிற்கும் முன்னதாக உண்டானவள்.

976. த்ரிபுராம்பிகா: த்ரிபுராம்பிகை வடிவானவள். (8வது ஆவரணத்தின் அதிதேவதை).

தசமுத்ரா ஸமாராத்யா த்ரிபுராஸ்ரீவசங்கரீ ।
ஜ்ஞான-முத்ரா ஜ்ஞானகம்யா
ஜ்ஞானஜ்ஞேயஸ்வரூபிணீ ॥179॥

977. தசமுத்ரா-ஸமாராத்யா: பத்து முத்ரைகளால் வழிபடப்பட்டவர்.

978. த்ரிபுரா ஸ்ரீவசங்கரீ: த்ரிபுராஸ்ரீயைத் தன்வசம் கொண்டவள். (5வது ஆவரணமான ஸர்வார்த்தஸாதக சக்ரத்தின் அதிதேவதை-த்ரிபுரா ஸ்ரீ)

979. ஞான முத்ரா: ஞான முத்ரை வடிவானவள். இதுவே ‘சின்முத்ரை’ பரமசிவன் ஸநகாதிகளுக்கு இம் முத்ரையினால் மௌனமாய் உபதேசம் செய்கிறார்.

980. ஞானகம்யா-ஞானத்தால் அடையப்படுபவள்

981. ஞான ஜ்ஞேய ஸ்வரூபிணீ: அறிவாகவும், அறியப்படும் பொருளாகவும் இருப்பவள். ஞானத்தால் அறியக்கூடிய ஸ்வருபத்தை உடையவள் என்றும் கூறலாம்.

யோநிமுத்ரா த்ரிகண்டேசீ த்ரிகுணாம்பா த்ரிகோணகா ।
அநகாஅத்புத-சாரித்ரா வாஞ்சிதார்த்த-ப்ரதாயினீ
॥180॥

982. யோனிமுத்ரா: யோனி முத்ரையின் ரூபமாக உள்ளவள்.

983. த்ரிண்டேசீ: த்ரிகண்டா முத்ரையின் தலைவி.

984. த்ரிகுணா: முக்குணவடிவினள் (ஸத்வ, ரஜஸ், தமஸ்) .

985. அம்பா: தாயார்

986. த்ரிகோணகா: முக்கோண வடிவான யோனி சக்ரத்தில் இருப்பவள்.

987. அனகா: பாபம் அற்றவள்.

988. அத்புத சாரித்ரா: ஆச்சரியமான சரித்திரம் உடையவள்.

989. வாஞ்சிதார்த ப்ரதாயினீ: விரும்பிய பொருளை அபரிமிதமாகத் தருபவள். பக்தர்கள் கேட்ககூட வேண்டாம்.

அப்யாஸாதிசய-ஜ்ஞாதா ஷடத்வாதீத-ரூபிணீ ।
அவ்யாஜ-கருணா-மூர்த்தி-ரஜ்ஞான-த்வாந்த-தீபிகா
॥181॥

990. அப்யாஸாதிசய-ஞாதா: அடிக்கடி அப்யாஸிப்பதால் அறியப்படுகிறவள்.

991. ஷடத்வாதீதரூபிணி: ஆறுவிதமான வழிகளையும் கடந்த ரூபமுடையவள்.

992. அவ்யாஜ-கருணா-மூர்த்தி: பக்ஷபாதம் இல்லாத கருணை வடிவம். காரணம் காணாமல் கருணை புரிபவள்.

993. அ(க்)ஞான த்வாந்த தீபிகா: அக்ஞானம் என்ற இருளைப் போக்கும் விளக்கு‘

ஆபாலகோப-விதிதா ஸர்வானுல்லங்க்ய-சாஸனா ।
ஸ்ரீசக்ரராஜ-நிலயா ஸ்ரீமத்-த்ரிபுரஸுந்தரீ ॥182॥

994. ஆபால கோப விதிதா: சிறுவர்களாலும் இடையர்களாலும் கூட அறியப்படுபவள்.

995. ஸர்வானுல்லங்க்ய-சாஸனா: எவராலும் மீற முடியாத கட்டளைகளை உடையவள்.

996. ஸ்ரீசக்ராஜ நிலயா: ஸ்ரீசக்ரத்தை தன் இருப்பிடமாகக் கொண்டவள்.

997. ஸ்ரீமத் த்ரிபுரஸுந்தரி: சிறப்பு மிக்க த்ரிபுரரின் மனைவி.

998. ஸ்ரீசிவா:ஸ்ரீசிவா-பரம மங்கள ரூபிணீயானவள்.

999. சிவசக்த்யைக்ய ரூபிணீ: சிவனும் சக்தியுமாக ஒன்றாக இருப்பவள்.

பரப்ரஹ்ம ருபிணியான அம்பாளை தனியாக சிவ ஸ்வரூபமென்றோ, சக்தி ஸ்வரூபமென்றோ நினைக்காமல், இரண்டுமே ஒன்றாகக் கலந்த ஸாமரஸ்ய‘ ரூபமாகக் கருத வேண்டும்.

சில உபமானங்கள் : விளக்கும்-ஒளியும், சொல்லும்-பொருளும், சூரியன் - உஷ்ணம், சந்திரன்-குளிர்ச்சி, எள்-எண்ணெய், அரணிக்கட்டை -நெருப்பு.

அபிராமிபட்டர், அபிராமி அந்தாதி (28ல்) சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன் என்பார். சொல்=சக்தி பொருள் = சிவன்‘.

காஞ்சி ஸ்ரீ பரமாச்சாரியர்:

அத்வைதத்தையும் த்வைதத்தையுமே அத்வைதமாகச் சேர்த்து வைப்பதாக ஸ்ரீவித்யை இருக்கிறது. இரண்டாவது தெரியாமல் சாந்தமாக இருக்கிற சிவனையும், த்வைதப் பிரபஞ்ச காரணியான சக்தியையும் பிரிவறச் சேர்ந்தவர்களாக அது சொல்கிறது.

லலிதாம்பிகா' என்று ஸ்தோத்திரத்தை முடிப்பதற்கு முந்தைய நாமா சிவசக்த்யைக்ய ரூபிணி' தான்.

ஸ்ரீசிவா சிவசக்த்யைக்ய- ரூபிணீ லலிதாம்பிகா ।

ஸ்ரீலலிதாம்பிகாயை ஓம் நம இதி ।।

1000. லலிதாம்பிகை':-லலிதா என்ற பெயருடைய அழகிய தாய்.

இத்துடன் இந்த ஸஹஸ்ரநாமம் ஸம்பூர்ணம்'

மனதிற்கு சந்தோஷம் தரும் எல்லா பாவங்களும் 'லலிதா' என்ற சொல்லால் குறிக்கப்படும்.

ப்ரகாசம் தோற்றம், இனிமை, ஆழம் ஸ்திரத்தன்மை, சக்தி, நளினம், தாராளம் ஆகிய எட்டும் - லலிதம்' எனப்படும்.

திருமீயச்சூரில் ஸ்ரீலலிதாம்பிகை சமேத ஸ்ரீமேகநாதர் ஸ்வாமி திருக்கோயில் உள்ளது.

உத்தரபாகம் (பலச்ருதி)

கலிகல்மஷ நாசினீ: கலிதோஷத்தைப் போக்குபவள்

மஹாபாதக நாசினீ: ப்ரஹ்மஹத்தி முதலிய பஞ்ச மஹா பாபங்களைப் போக்குபவள்

ஸர்வாபத் விநிவாரிணீ : எல்லாவிதமான ஆபத்துக்களையும் போக்குபவள்

பந்த மோசனீ: பிறவித் தளையினின்று விடுவிப்பவள்.

ஸர்வ வ்யாதி ப்ரசமனீ : வியாதிகளை சமனம் பண்ணுபவள்

ஸர்வ ம்ருத்யு நிவாரிணீ: மரணங்களை தவிர்ப்பவள்

இவற்றிற்கும் மேலாக முக்யமாக

அன்னதா: ஜகத்திற்கும் உணவளிப்பவள்

வஸுதா : எல்லோருக்கும் செல்வத்தை தருபவள்

வேறு எந்த அம்மாவினாலும் இப்படி செய்ய முடியுமா?

அதனால்தானே, எடுத்த எடுப்பிலேயே அவளை 'ஸ்ரீமாதா' என்று வாக்தேவிகள் போற்றுகிறார்கள். இப்பேர்ப்பட்ட அன்னைக்கு நாம் என்ன செய்ய வேண்டும்? அவளை சதா சர்வ காலமும் இடைவிடாது. (ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா சொல்வது போல-அனன் யாஸ் சிந்தயந்தோ மாம்...') பக்தியினால் கட்டுவிக்கனும். யசோதாவும் கண்ணனை பக்தி என்னும் கயிற்றினால் தானே கட்ட முடிந்தது.

அன்னை பக்திப்ரியா, பக்தி கம்யா, பக்திவச்யா அல்லவா!

நாம பாராயண ப்ரீதா: நாம பாராயணத்தால் ப்ரியம் அடைபவள்.

தினமும், தவறாது, நித்ய கர்மா போல, காலை, மாலை இரண்டு வேளைகளிலும் பாராயணம் செய்ய வேண்டும்.

வேதவேத்யா: வேதங்களால் அறியத்தக்கவள். எனவே வேதங்கள் படிக்கணும்.

ச்ருதி ஸம்ஸ்துத வைபவா: வேதங்களால் போற்றப்படுபவள்.

புண்ய ச்ரவண கீர்த்தனா: அம்பாளின் பெருமையைப் பேசுவதும், கேட்பதும், பாடுவதும் - புண்யம் தரும்.

நிறைவாக சொல்ல வேண்டுமானால், இந்த ஸ்ரீலலிதா ஸஹஸ்ர நாமம் பாராயணம் செய்பவர்க்கு, மறுபிறவி இல்லை, இல்லை, இல்லையே!

சுபம்